மொழியும் எழுத்தும்

டாக்டர் செ. வை. சண்முகம்

இயக்குநர்

மொழியியல் உயர் ஆய்வு மையம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அனைத்திந்திய தமிழ்மொழியியற் கழகம்

அண்ணாமலைநகர்

1985

செங்குந்தபுரம் வைத்திலிங்கம் சண்முகம் (1932)
அனைத்திந்திய தமிழ்மொழியியற் கழக வெளியீடு 27

முதல் பதிப்பு-1985
விலை: ரூ. 10/-

கிடைக்கும் இடங்கள்

1. திருவேரகம்
   194, மாரியப்பாநகர்
   அண்ணாமலைநகர் 60800
2. பாரிநிலையம்
   59, பிராட்வே
   சென்னை 600001
3. மீனாட்சி புத்தகநிலையம்
   60, மேற்கு கோபுரவாயில்
   மதுரை 625001
4, மணிவாசகர் நூலகம்
   சிதம்பரம் 608001

6. அனைத்திந்திய மொழியியற்கழகம்
   அண்ணாமலைநகர் 608002

அச்சிட்டோர்
ஸ்ரீ வேலன்பிரஸ்
சிதம்பரம் 608001

அண்மையில் மறைந்த

ஆருயிர் அன்னை

அமிர்தம்மாள்

நினைவுக்கு

ஆசிரியரின் பிற நூல்கள்

1 Naccinarkkiniyar's conception of phonology

2 The language of Tamil inscriptions: 1250-1350A.D (Co- author)

3 Dravidian Nouns (a comparative study)

4 Third Seminar on Dravidian linguistics (Co-editor)

5 Indonesian studies

6 Aspects of language development in Tamil

7 சுவாமிநாதம் (உரையும் பதிப்பும்)

8 சுவாமிநாதம் மூலமும் விருத்தி உரையும் (பதிப்பு)

9 எழுத்துச் சீர்திருத்தம்

10 எழுத்துச் சீர்திருத்த மலர் (இணை பதிப்பர்)

11 எழுத்திலக்கணக் கோட்பாடு

12 சொல்லிலக்கணக் கோட்பாடு-I

முன்னுரை

சமூக மொழியியலில் ஒரு கூறு பேச்சுமொழியும் எழுத்துமொழியும் அமைப்பில் ஒப்பிட்டு ஆராய்வதோடு அவை இரண்டும் செயல்படும் தன்மையும் விளக்குவதாக அமையும். இதனுடைய ஒரு கூறாக எழுத்து மொழியை மட்டும் அதாவது அதன் வடிவம், எண்ணிக்கை, சொல்லெழுத்து போன்றவற்றையும் சமூக மொழியியல் நோக்கில் ஆராயலாம். அந்த முயற்சியே இந்த சிறுநூலில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொதுவாக எழுத்துகளில் கல்வெட்டுத் துறையினரே அதிகம் அக்கறை காட்டிவந்துள்ளார்கள். புதிய கல்வெட்டுகளைக் கண்டு பலரும் படித்து வெளியிடவும், எழுத்தின் வரலாற்றை அறிந்து கொள்ளவும் அவர்கள் ஆர்வம் காட்டினார்கள்.

மேலைநாட்டார் சிறப்பாக கிறித்துவ பாதிரிமார்கள் ஆசியா, ஆப்ரிக்கா போன்ற கண்டங்களில் உள்ள பல நாடுகளுக்குச் சென்று கிறித்துவ மதத்தைப் பரப்ப முயன்றபோது பல மொழிகளுக்குப் புதிதாக எழுத்துருவம் அதாவது எழுத்தாக்கம் செய்தார்கள். அவர்களில் மொழியியல் பயிற்சி பெற்றவர்கள் தங்களுடைய அனுபவத்தை வெளியிட்டதும் எழுத்தாக்கத்துக்கும் அந்த சமூகத்துக்கும் உள்ள தொடர்பு புலன் ஆயிற்று. மேலும் புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகள் எழுத்துத்திருத்தத்தை மேற்கொண்டதும் எழுத்து மொழியில் சமூக மொழியியலின் பங்கு நன்கு வெளிப்பட்டது. ஆகவே பிஷ்மன் (Fishman) என்ற சமூக மொழியியல் அறிஞர் எழுத்தாக்கத்திலும் எழுத்துத் திருத்தத்திலும் சமூக மொழியியல் நோக்கோடு எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து ஒரு நூலே வெளியிட்டுள்ளார்.

தமிழில் செய்யவேண்டிய எழுத்துத் திருத்தங்களை விளக்கி 'எழுத்துச் சீர்திருத்தம்' என்ற நூல் என்னால் எழுதப்பட்டது. அதற்குப் பிறகு அது தொடர்பாக எழுதிய மூன்று கட்டுரைகளைத் தொகுத்து 'மொழியும் எழுத்தும்' என்ற இந்தநூல் அமைந்துள்ளது. இந்தக் கட்டுரைகளை வெளியிட்ட 'மொழியியல்' இதழுக்கும், முத்துப் பதிப்பகத்துக்கும் என் நன்றி உரியது.

இந்தக் கட்டுரைகளைத் தொகுத்து எழுதத் தூண்டியதிலும் சரி, என்னை ஆராய்ச்சிப்பணியில் ஈடுபடுத்தி, தமிழில் நூல்கள் எழுதவேண்டும் என்று வற்புறுத்துவதிலும் சரி; பேராசிரியர் அகத்தியலிங்கம் அவர்களுக்கே முழுப் பெருமையும் சேரும், ஏனெனில் தான் மட்டும் தமிழில் ஆராய்ந்து தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல் எழுதினால் போதும் என்ற 'கடுகு உள்ளம். கொண்டவர் அல்ல அவர். தன்னோடு பழகுகிறவர்களையும். ஏதாவது ஒரு விதத்தில் தொடர்பு கொள்ள வாய்ப்பு பெற்றவ, களையும் கூட ஆக்கப் பணிகள் செய்யத் தூண்டிவிடுவதில்ர் அவருக்கு இணையானவர் இல்லை என்றே சொல்லவேண்டும். அவருக்கு நான் நன்றி சொல்வது வெறும் சம்பிரதாயம் அல்ல. உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து பீரிட்டு வரும் உணர்வின் வெளிப்பாடு இது.

கட்டுரைகளை நூலாக்குவதற்குக் கையெழுத்துப் பிரதி செய்து தந்த மொழியியல் ஆய்வாளர்களான திரு ஆ. கோ. நடராசன், டாக்டர் திருமதி சுசீலா சேகரன் ஆகிய இருவருக்கும் என்னுயை வாழ்த்துகள். கட்டுரைகளைப் படித்துப் பார்த்தும், அச்சுப்பிரதி திருத்தியும் உதவிய என்உடனுறை ஆசிரியர்கள் டாக்டர்கள் சு. சக்திவேல், இரா. பாலகிருஷ்ணன் ஆகிய இருவருக்கும் என் நன்றி உரியது.

எல்லாவற்றுக்கும் மேலாக நூலை வெளியிட அனுமதி அளித்த அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவுக்கும் குறுகிய காலத்தில் அச்சிட்டுத்தந்த ஸ்ரீ வேலன் அச்சகத்தாருக்கும் என் உளங்கனிந்த நன்றி.

செ. வை. சண்முகம்

உள்ளுரை

1. பேச்சும் எழுத்தும்

1.1. பேச்சும் எழுத்தும்

மொழியைப் பேச்சுமொழி, எழுத்துமொழி என்று இரண்டாகப் பிரித்து மொழியியலார் பேசுவார்கள். இந்த வேறுபாடு நமது இலக்கணங்களில் காணப்பட்டாலும், அவை தனித்தனியே விளக்கப்படவில்லை. எழுத்துமொழியின் இலக்கணம் மிகக்குறைவாகவே எழுத்ததிகாரத்தில் பேசப்படுகிறது. சில எழுத்துகளின் வரிவடிவம் பற்றிய குறிப்புகள் எல்லா இலக்கணத்திலும் உண்டு. ஆயினும், சரியாக வேறுபடுத்தாததால் உயிர்மெய்யைச் சார்பு எழுத்தாகப் பவணந்தி (நன். 60) கருதிவிட்டார். பேச்சுமொழியையும் எழுத்துமொழியையும் வேறுபடுத்தும் குறிப்புகள் உரைகளிலும் பிற்கால நூல்களிலும் கீழ்க்கண்டவாறு உள்ளன.

'எழுத்து என்றது யாதனையெனின் கட்புலனாகா உருவும் கட்புலனாகிய வடிவும் உடைத்து' என்பார் நச்சினார்க்கினியர் (எழுத்து பக். 8). இங்குக் கட்புலனாகா உருவு என்றது ஒலி வடிவு; கட்புலனாகிய வடிவு என்றது வரிவடிவு.

'எழுத்து ஒலி வடிவு வரி வடிவையும் ஏற்கும்'

(முத்துவீரியம்:எழு. 2)

இவற்றின் சிறப்புகள், தொடர்பு, நிலைமொழி அமையும் முறை ஆகியவற்றை முதலிலும் தமிழ்மொழி நிலைபற்றி இறுதியிலும் விரிவாக விளக்க முயலுவோம்.

1.2. பேச்சுமொழியின் முதன்மை

மனிதன் இந்த உலகத்தில் சுமார் 500,000 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறான் என்று தொல் வரலாற்று ஆசிரியர்கள் கூறுவார்கள். ஆனால், எப்பொழுதிலிருந்து பேச ஆரம்பித்தான் என்பதை அறிந்துகொள்ள முடியவில்லை. ஆயினும், காடுகளிலும் மலைப்பகுதிகளிலும் வெளி உலகத் தொடர்பு இல்லாமல் வாழும் பழங்குடி மக்கள் உலகில் பல பகுதிகளில் காணப்படுகிறார்கள். அவர்கள் எல்லோரும் பேச்சுமொழி உடையவராகவே உள்ளார்கள். எனவே, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே மனிதன் பேச்சு மொழியைக் கையாண்டு வந்திருக்கவேண்டும் என்று ஊகிக்க வேண்டியுள்ளது.

எழுத்து மொழியை இன்றுவரை கிடைக்கின்ற சான்று அடிப்படையில் கணக்கிட்டால், அது சுமார் 5000 ஆண்டு பழமையே உடையது. மேலும், எழுத்து மொழி இல்லாத சமூகத்தினர் பலர் இன்று இருப்பதும், எழுத்து மொழி உடைய சமூகத்திலும் அதைத் தெரிந்து கொள்ளாத மக்கள் இருப்பதும், எழுத்து மொழி காலத்தால் பிற்பட்டது என்பதையும் பேச்சு மொழிபோல இயல்பானது இல்லை என்பதையும் புலப்படுத்தும்.

தமிழக வரலாற்றை எடுத்துக்கொண்டாலும் எழுத்து மொழி மிகவும் பிற்பட்டது என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது. தமிழகத்தில் 200,000 ஆண்டுகளாக மக்கள் வாழ்ந்திருக்க வேண்டும் என்பது தொல் பொருள் ஆராய்ச்சியாளர் முடிவு **(Sankaliya, 1966)**. ஆனால், தமிழ் மொழிக்கு இது வரை கிடைத்த பழைய எழுத்துச் சான்று கி.மு. 3-ம் நூற்றாண்டைச் சார்ந்ததே; அதாவது 2,300 ஆண்டுகளுக்கு முந்தியது.

1.3. பேச்சுமொழியின் சிறப்பு

பேச்சுமொழி காலத்தால் பழமையானது என்று பார்த்தோம். அது இன்றும் பல சிறப்புகளைக் கொண்டுள்ளது. அவைகளுள் ஒன்று, பேசுவோரின் உணர்ச்சியையும் உள்ளக்கிடக்கையையும் குரலின் ஏற்ற இறக்கத்தால் எளிதில் காட்டமுடிவது ஆகும். **முருகன் வந்தான்** என்ற வாக்கியத்தை ஒலிஏற்ற இறக்கத்தால்,

பேச்சு மொழியும் எழுத்து மொழியும் சிற்சில சிறப்புப் பண்புகள் உடையதாக இருப்பதால், அவற்றைத் தனித்தனியே ஆராய வேண்டும் என்று வற்புறுத்துகிறவர்கள் மொழியியலாரிடையே காணப்படுகிறார்கள். அவர்களுள் பிராக் (Prague) மொழியியல் அறிஞர்கள் எழுத்துமொழிக்குத் தனியிடம் கொடுத்து ஆராய்வார்கள். அவர்களுள் வாசெக் (Vachek) என்பார் குறிப்பிடத்தக்கவர். அவர்களைத் தனிநிலை வாதிகள் (Autonomists) என்று குறிப்பிடுவார்கள். பேச்சுமொழியும் எழுத்துமொழியும் தொடர்பு உடையன; ஆனால் அது மொழிக்கு மொழி மாறுபடும் என்று கருதுகிறவர்களை இணைநிலை வாதிகள் (Correlationists) என்று அழைப்பார்கள் (Hall, 1975).

எழுத்து மொழி எவ்வளவுதான் பேச்சுமொழியிலிருந்து வேறுபட்டிருந்தாலும் காலந்தோறும் எழுத்துமொழியும் மாறுபட்டு வருகிறது. சில சமயங்களில் பேச்சுமொழியை ஒட்டி எழுத்து மொழியும் எழுத்துமொழியை ஒட்டி பேச்சுமொழியும் திருத்திக் கொள்ளப்படுகின்றன. ஆகவே, இணைநிலைவாதிகளின் கருத்தையே மொழியைக் கற்பிக்கும் பணியில் ஈடுபட்டோரும் வரலாற்று ஆராய்ச்சியாளரும் சமூக மொழியியலாரும் ஒத்துக் கொள்கிறார்கள் (Berry, 1958: 738).

நாம் இதுவரை பேச்சுமொழி, எழுத்துமொழி என்று பொதுவாகப் பேசிவந்தோம். ஆனால், இரண்டிலும் பலவகை வேறுபாடுகள் இருப்பதையும், அவைகளில் சிலவற்றை உயர்வாகக்கருதிப் பிறரும் பின்பற்றுவதையும் காணலாம். அப்படிப்பட்ட வகையே நிலைமொழி (standard language) என்று அழைக்கப்படும். எனவே, அவற்றைப்பற்றி சிறிது அறிந்து கொள்வோம்.

1.6. பேச்சு நிலைமொழி

ஒருமொழி பரந்த நிலப்பகுதியில் நீண்ட காலமாகப் பேசப்பட்டால், பல கிளை மொழிகள் உடையதாக அமையும். ஒன்று: இடவேறுபாடு-வட்டாரக் கிளைமொழி. மொழிவழங்கும் நாட்டைப் பல வட்டாரங்களாகப் பிரித்து அங்கு வழங்கும் மொழி வேறுபாட்டிற்கு ஏற்ப வட்டாரக்கிளை மொழியின் எண்ணிக்கை அமையும். மற்றொன்று: சாதி அல்லது சமூக வேறுபாடு-சாதிக்கிளை மொழி.

...துவாக இந்திய மொழிகளில் சாதிக் கிளைமொழிகள் உண்டு என்ற கருத்து மொழியியலாரிடையே காணப்பட்டது. ஆனால், இன்று அதில் பல அய்யங்களை எழுப்பியுள்ளார்கள். அதற்கு ஒவ்வொரு சாதியின் கிளை மொழியும் வேறுபடுகிறதா? ஒரு சாதி பல வட்டாரங்களில் வாழ்ந்தால், அவர்கள் எல்லோருடைய பேச்சும் ஒருமுறையில் அமைந்திருக்கிறதா? என்ற கேள்விகளுக்கு 'ஆமாம்' என்ற விடை கொடுக்க முடியாததே முக்கிய காரணம். ஆயினும், சமூகத்தில் உயர்வு தாழ்வு இருப்பது போலவே ஒரு வட்டாரத்தில் வாழும் பல சாதி மக்களிடையே மொழி வேறுபாடு காணப்படுவது உண்மை. அவற்றை விரிவாக ஆராய்ந்து மொழி வேறுபாட்டின் அடிப்படை என்னென்ன என்பது ஆராய்வதற்கு உரியது. மேலும், வயது அடிப்படையிலும், பால் (ஆண்-பெண்) அடிப்படையிலும்கூட வேறுபாடு உள்ளது (ஏசுதாசன், 1976: 240-260). இதனோடு பேசுவோரின் கல்வி, வாழும் இடம் (கிராமம்-நகரம்) மனநிலை, சூழல் ஆகியவற்றாலும்கூட மொழி வேறு படுகிறது. தமிழில் உள்ள வட்டாரக்கிளை மொழிகளையும் சில சாதிக்கிளைமொழிகளின் சிறப்புப் பண்புகளையும் சீனுவாச வர்மா (1977) விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ளார்.

இந்தக் கிளைமொழி வேறுபாடுகள் பொதுவாகத் தங்கள் தங்கள் குடும்பத்தாரிடையேயும் உறவினரிடையேயும் வட்டார மக்களிடையேயும் பேசும்போதுமட்டும் அமைவன. அவர்களே பிற சாதியினரிடையே, ஊராரிடையே, தங்களைவிட உயர்ந்தவர் களிடையே பேசும்போது அதே மொழியைப் பயன்படுத்து வதில்லை. அந்த வேறுபாட்டிற்குக்காரணம் சாதாரண அறிவுடை யவரும் மொழிவேறுபாடுபற்றி ஓரளவு உணர்ந்திருப்பதுதான். ஒரு மொழி வழங்கும் பல வட்டாரங்களின் ஒரு பகுதி மக்கள் வணிகச் சிறப்பு, கலாச்சார சிறப்பு, அரசியல் சிறப்பு ஆகிய வற்றால் வளர்ச்சியடைந்திருப்பதும் ஏனைய பகுதி மக்கள் அனை வரும் அந்தப்பகுதியை உயர்வாகக் கருதுவதும், அங்கு வாழும் உயர்நிலை மக்களின் மொழியை உயர்ந்ததாகப் போற்றுவதும் இயல்பானதே. எனவே, ஒரு கிளைமொழியைப் பிற கிளை மொழியினர் போற்றிப் பின்பற்றும் நிலை ஏற்படுமானால், அதுவே நிலை மொழியாகக் கருதப்படும். நிலைமொழி என்பது

ல்லோருக்கும் ஓரளவு பொதுவானதாய் அமையும். இது கிளைமொழியை ஒட்டி அமைந்தாலும், பிற கிளைமொழிகளி... கூறுகளையும் பெற்று எல்லோராலும் சிறப்பு உடையதாகவும் கருதப்பட்டு எல்லாக் கிளைமொழியினரையும் ஒன்று சேர்க்கும் சாதனமாகவும் அமையும்.

1.7. எழுத்து நிலைமொழி

பேச்சு மொழியைப் போலவே எழுத்து மொழியிலும் பலவகை உண்டு. கடுநடை அல்லது பழங்கால மொழிநடை, தூயநடை, எளியநடை, இயல்பான நடை என்றெல்லாம் எழுத்து மொழியைக் குறிப்பிடுவார்கள். இந்த வேறுபாட்டிற்கு மொழி அமைப்பே முக்கிய காரணம். பேச்சுமொழியில் கிளைமொழி வேறுபாடுபோல எழுத்துமொழியில் இருக்கும் நடைவேறுபாட்டை அறிந்து கொள்ளும் வகையில் நிறைய ஆராய்ச்சி வளரவில்லை. ஆயினும், பல நடைகளுக்கு இடையேயும் பொதுவான நிலைமொழி ஒன்று உண்டு என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள்.

எழுத்து நிலைமொழியில் இருவகைகள் இருப்பதாக மொழி யியலார் கூறுவார்கள். ஒன்று: பேச்சுநிலையை ஒட்டி அமைவது. ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய பல மொழிகளின் எழுத்து மொழி இந்த முறையில் அமைந்தவை. ஆங்கிலத்தைப் பொருத்தவரையில் அதனுடைய சொல்லெழுத்து பழைய நிலையைக் காட்டும் வகையில் அமைய, இலக்கணக் கூறுகளும் சொற்களஞ்சியமும் பேச்சு நிலைமொழியை ஒட்டி அமைந்துள்ளன. அதுவும், லண்டன் நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வாழும் படித்த நடுத்தர வகுப்பு மக்கள் பேசும் மொழியை ஒட்டியே அமைந் துள்ளன. (Sugathapala De Silva, 1975:44) மேலும், இந்த நிலைமொழி எல்லா இடத்திலும் பயன்படுவதால், பல கிளை மொழிகள் இருந்தும் இருநிலை மொழி (diglossic language) உடையதாகக் கருதப்படுவதில்லை.

இரண்டு: அராபிக், கிரேக்கம், ஜெர்மனி போன்ற மொழி களில் இன்றைய நிலைமொழி, உச்சரிப்பு முறை, இலக்கண முறை, வாக்கிய அமைப்பு ஆகியவற்றில், பழையகால மொழியோடு பெரிதும் ஒத்திருக்கும். ஏனெனில் பழையகால இலக்கண மொழியே

சமயம், தத்துவம் போன்ற பிற காரணங்களால் உயர்வானதாகக் கருதப்படுகிறது. அராபிக் மொழியில் முஸ்லீம்களின் வேதமான குரான், அந்தச் செம்மொழியில் எழுதப்பட்டிருக்கிறது. கிரேக்க மொழியில் பழங்கால மொழியையே, பிளாட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற தத்துவ அறிஞர்களும், பிறதுறை அறிஞர்கள் பலரும் பயன்படுத்தியுள்ளார்கள். எனவே, பெருமதிப்பிற்கு உரியதாகப் பழங்கால மொழியே கருதப்படுகிறது. ஆயினும், அந்த எழுத்து மொழியும் பழைய காலப் பேச்சுமொழியை ஒட்டி அமைந்தது தான். காலந்தோறும் பேச்சுமொழியில் ஏற்பட்ட மாற்றங்கள் பேச்சுமொழிக்கும் எழுத்து மொழிக்கும் உள்ள வேறுபாடுகளை அதிகரித்து,இரண்டும் வெவ்வேறு மொழிகள் எனக் கருதத்தக்க நிலையில் அமைந்து விடுகின்றன. இத்தகைய மொழிகளை இரு நிலை மொழிகள் (Diglossic languages) என்றும், இந்தப்பண்பை இருநிலை மொழி (Diglossia) என்றும் பெர்கூசன் (Ferguson, 1959) என்பார் முதன்முதலில் பெயரிட்டு அழைத்தார். இரண்டும் வெவ்வேறு பெயர்களை உடையதாக அமைந்து இருப்பதும் அவர் கருத்துக்கு ஆதாரமாக உள்ளது.

	பேச்சு மொழி	எழுத்துமொழி
கிரேக்கம்:	கதெரெவுஸா (Katherevusa)	திமொதிக்கி (Dhimotik)
அராபிக் :	அல் ஆம் மிய்யா (al-a:mmiyyah)	ஆல்புஷா (al-fusha)

மேலும், இந்த இரண்டும் பயன்பாட்டிலும் வேறுபடுகிறது. கல்வி மொழியாகவும் பொதுமேடை, நாடாளுமன்றம் ஆகிய இடங் களிலும் எழுத்து மொழியான உயர்நிலை மொழியே பயன்படு கிறது என்று அவர் காட்டியுள்ளார் (Ferguson, 1959).

சமீபத்தில் நடந்த ஆராய்ச்சியில் இருநிலை மொழிகளாக இருப்பவற்றின் எழுத்துமொழி, பேச்சுமொழியாக எங்கும் பயன் படாமல், எழுதமட்டும் உபயோகிக்கும் மொழியாக இருப்பதும் தெரியவந்துள்ளது. சிங்களம் (Sugathapala De Silva. 1975 : 35)

அந்த வகையைச் சார்ந்தது.[1] கன்னடமும் கூட இதே முறையில் இருக்கலாமா என்று அவர் அய்யப்படுகிறார் (டி. ப.47)

இருநிலை மொழி இலக்கணம் பற்றிய கருத்திலும் புதிய எண்ணத்தைத் தோற்றுவித்துள்ளது. எழுத்துமொழி, இன்றைய பேச்சுமொழியை ஒட்டி அமையாது பழைய மொழியை ஒட்டி அமைந்திருப்பதால், மொழிக்கு இலக்கணம் புற நிலையாக அமைகிறது என்ற கருத்து உருவாகிறது. இதனால், அம்மொழியில் விதிமுறை இலக்கணமே வற்புறுத்தப்படும். இது சமூக ஒற்றுமையையும் அகக் காரணங்களால் வற்புறுத்தாது புறக்காரணங்களால் வற்புறுத்துவதை ஒக்கும் என்பார்கள் மானிட இயல் ஆய்வாளர்கள்.[2]

---

1. In Singhalese, the High variety or the written variety is not used for speech at any time, and there are many features in the spoken usages that would not be permitted n the written language. This is clearly a case of diglossia for it shows mutually exclusived omains for the two varieties. Sugathapala, De Silva, 1975; 45.

2. When group standards are thought of as something apart from the interacting of the group members, we tend to think of them as somehow 'imposed' upon them. This gives rise to the notion that man is naturally unsocial and that law givers or moralists must come along and rescue him from his nasty brutish ways. This is non-sense. The generation of and acceptance of standards which regulate conduct and preclude randomness is ...... a prerequisite of social intercourse. The having of standards springs out of social intercourse, it is not imposed from oustide upon it.

Sprott quoted as in *Linguistic diversity* p. 48

1.8. தமிழில் நிலைமொழி

தமிழ் ஒரு இருநிலை மொழி என்பது இன்று எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்படும் உண்மை. இருநிலை மொழியை முதலில் விளக்கிய பெர்கூசனே தமிழின் இருமொழி நிலையை வியந்து எடுத்துப்பேசியுள்ளார்.[3] தமிழில் செந்தமிழ், கொடுந்தமிழ் என்று பிற்கால இலக்கணங்களில் காணப்படுவதன் பொருள் சற்று வேறு பட்டதாயினும், வீரமாமுனிவர் 'கொடுந்தமிழ் என்பதனைக் கொச்சை மொழி என்ற பொருளில் பயன்படுத்தியுள்ளார் அப் படியே இன்று **செந்தமிழ்** என்பது எழுத்துமொழி என்ற பொருளில் கையாளப்படுகிறது. கோதண்டராமன் (1974) **செந்தமிழ்** என்று குறிப்பிடுவதும் இன்றைய எழுத்து மொழியையே ஆகும் என்கிறார். எனவே, செந்தமிழ் - கொடுந் தமிழ் என்ற வேறுபாடு இருநிலை மொழியைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

தமிழும் பிற இந்திய மொழிகளும் இருநிலை மொழிகளை உடையன என்பதை நூறு ஆண்டுகளுக்கு முன்னரே கால்டுவெல், எழுத்துமொழி வேறு; பேச்சுமொழி வேறு என்ற நிலையில், கூறிச் சென்றது இங்குக் குறிப்பிடத்தகுந்தது. இந்திய மொழிகள் அனைத்துமே முதலில் நிலையாக்கப்பட்ட போது, சொற் களஞ்சியம், இலக்கணக் கூறுகள் ஆகிய இரண்டையும் பேச்சு மொழியிலிருந்து மாறுபட்டுஅமைத்திருக்க வேண்டும்.[4] 'மிகப் பழங்

---

3. As used by the millions of members of the Tamil speech community in India to-day, it fits the definition exactly. Tamil diglossia seems to go back many centuries

Ferguson, 'Diglossia' p.

4. It is remarkable peculiarity of the Indian languages that, as soon as they begin to be cultivated, literary style evinces a tendency to become a literary dialect distinct from the dialect of common life, with a grammar and vocabulary of its own. This is equally characteristic of the speech of the Aryans of the North and that of the Dravidians of the South.

Caldwell. *Comparative Grammar* p. 78

காலத்தில் அதாவது இலக்கியம் எழுதப்பட்ட காலத்திலேயே, தமிழில் இன்றுள்ளது போலவே கொச்சை மொழிக்கும் இலக்கிய மொழிக்கும் நிறைய வேறுபாடு இருந்துள்ளது. நல்ல, செம்மை செய்யப்பட்டு இனிமை உடையதாக அமைந்த இலக்கிய நடை, மக்களின் அன்றாட பேச்சு மொழியாக எல்லா வகுப்பாராலும் பயன்படுத்தப் பட்டிருக்கும் என்று நம்ப முடியவில்லை. எல்லாக் கவிஞர்களும் அதாவது பழங்காலக் கவிஞர்களும் கூட தங்கள் தங்கள் காலத்தில் பழமையானதாகக் கருதப்பட்ட சொற்களையும், வழக்காறுகளையுமே கவிதைக்கு ஏற்றதாகக் கருதும் பழக்கம் உடையவர்களாக இருந்தார்கள்'.[5] என்பதும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. கால்டுவெல்காலத்தில் திருக்குறள், நாலடியார் போன்ற நூல்களும் சமய இலக்கியங்களுமே கிடைத்திருக்கவேண்டும். சங்க இலக்கியம் படிக்க அவருக்கு வாய்ப்பு இல்லை என்றே கருதவேண்டியுள்ளது. அதனால், பழையகால இலக்கியமும் அக்காலப் பேச்சு மொழியிலிருந்து வேறுபட்டிருக்கவேண்டும் என்ற அவருடைய கருத்து சங்க இலக்கியத்திற்குப் பொருந்தாது. இதுவரை நடந்த வரலாற்று மொழி ஆராய்ச்சியில் தமிழின் பழைய இலக்கியமாகிய சங்க இலக்கிய மொழியை ஒப்பிலக்கண நிலையில் நோக்கும் போது, இலக்கிய மொழியிலிருந்து பேச்சு மொழி நிறைய மாறுபட்டிருக்க வேண்டும் என்று கருதமுடியவில்லை. சங்க இலக்கிய மொழி சில கூறுகளில் காலத்தால்

---

5. Even at the time of the oldest extant High Tamil compositions were written, there was probably almost as wide as a difference between the language of the vulgar and that affected by the *literati* as there is at present It is inconceivable that so elaborately refined and euphonised a style of language as that of the classical poems and grammars can ever have been the actual every day speech of any class of people... Even the earliest have been accustomed to regard expressions that were considered more or less archaic in their own time, as peculiarly suitable to poetical compositions.

Caldwell, p. 80

பிற்பட்டிருக்கவேண்டும் என்றும் புலப்பட்டுள்ளது (சண்முகம், 1971, 1974). ஆயினும், பழையகால மொழியை விரிவாக ஆராய வேண்டியுள்ளதால், பின்னரே அக்காலப் பேச்சுமொழி - எழுத்து மொழி உறவு பற்றிச் சரியாக அறிந்து கொள்ள முடியும். எனவே, இன்றைய நிலையைப் பற்றி மட்டும் இனி காண்போம்.

தமிழில் பல கிளை மொழிகள் இருக்கின்றன என்று முன்னரே குறிப்பிட்டோம். இவைகளுக்கு இடையே நிலைமொழி ஒன்று உண்டா என்பது தெளிவாகப் புலப்படவில்லை. ஆயினும், பேச்சு மொழியில், நாடு சுதந்திரம்பெற்ற பிறகு ஏற்பட்ட ஒரு பெரிய மாற்றத்தைப் பலரும் எடுத்துக்காட்டியுள்ளார்கள். நாடு விடுதலை அடைவதற்கு முன்னால் பிராமணர் அல்லாதவர்களும் பிராமணர்களின் பேச்சு மொழியை உயர்வாகக் கருதிப் பின்பற்றி வந்துள்ளார்கள். ஆனால், வயதுவந்தவர்கள் அனைவரும் வாக்குரிமை பெற்றதாலும் திராவிடர் இயக்கங்களின் செல்வாக்காலும், இப்பொழுது பிராமணர்கள், பிராமணர் அல்லாதாருடைய பேச்சு மொழியைப் பின்பற்றும் நிலை ஏற்பட்டுள்ளது. இது பிராமணர் அல்லாதார் எழுத்து மொழிக்கும் பொருந்தும் என்பதை ஞானசுந்தரமும் பெரியாழ்வாரும் (197?:?) விளக்கியுள்ளார்கள். ஆயினும், பேச்சு நிலைமொழி என்பது 1) எந்தச் சாதியார் அல்லது பிரிவினர், 2) எந்த வட்டாரத்தில் வாழ்வோர்- பேசும் மொழியைக் குறிக்கிறது என்பதுதான் தெளிவாக வில்லை. ஸ்வலபெல் என்பார் **அவர்கள்** என்ற சொல் எப்படிப் பல கிளை மொழிகளில் பேசப்படுகிறது என்பதை ஒட்டி - பாண்டிய நாட்டில் **அவுஹ** என்றும், கொங்கு நாட்டில் **அவ கொ (ள்)** என்றும், பிராமணர்கள் **அவா** என்று பேசினாலும், படித்த நடுத்தர மக்களில் (Middle class) பலரும் சோழநாட்டில் பெரும்பான்மையாக வழங்கும் **அவுங்க** என்பதையே உபயோகப் படுத்துவதால், அந்தச் சோழநாட்டு வழக்கையே நிலை மொழியாகக் கருதவேண்டும் என்று ஒரு கட்டுரையில் (Zvelebil, 1964:259) குறிப்பிட்டுள்ளார். அதுபற்றி மேலும் மொழியியல் அறிஞர்கள் ஆராய்ந்து விளக்கவில்லை. எனவே, தமிழ்ப் பேச்சுமொழியில் நிலைமொழி உருவாவது ஆரம்ப நிலையில்

இருப்பதால், அதுபற்றிய மொழியியல் ஆராய்ச்சி சுவை உடையதாக அமையும்.

எப்படியாயினும், இன்றைய பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் உள்ள வேறுபாடுகளை இப்போது பார்ப்போம். சேதுப்பிள்ளை (Sethu Pillai, 1939) இந்தத் தலைப்பில் ஒருகட்டுரை வெளியிட்டுள்ளார். மொழியியல் சிறப்பாக வளர்ந்த பிறகு சண்முகம் பிள்ளை எழுதிய கட்டுரைகளே வெளிநாட்டு மொழி அறிஞர்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன. (Shanmugam Pillai, 1960, 1965, 1966) பெர்கூசனின் கூற்றுகூட சண்முகம் பிள்ளை எழுதிய கட்டுரையை ஒட்டியே அமைந்தது என்பதும் இங்குக் குறிப்பிடத்தகுந்தது.

1.8.1. ஒலிநிலை

பேச்சு மொழியில் இல்லாத சில ஒலிகள் எழுத்து மொழியில் மட்டும்-எழுத்தைப் படிக்கும்போதும், மேடையில் பேசும்போதும்- உள்ளன. **காற்று, போற்று** என்ற சொற்களில் வரும் நுனிநா நுனி அண்ண வல்லொலியும் வருடொலியும் (*ṛr*); **ஒன்று, மூன்று** என்ற சொற்களில் வரும் நுனிநா நுனிஅண்ண மெல்லொலியும் வருடொலியும் (*nr*) முறையே, **த்த்** என்றும் **ண்ண்/ண்,** அல்லது **ன்ன்/ன்** என்று பேச்சு மொழியில் மாறிவிட்டன.

பல சொற்களின் உச்சரிப்பில் இரண்டு மொழிக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. சொல்லின் இறுதியில் வரும் **-அம்** என்பது ஒ(ம்)என்று பேச்சு மொழியிலும் **அம்** என்று எழுத்து மொழியிலும் உச்சரிக்கப்படுகிறது.

படம் — படொ/ம்/

மரம் — மரொ/ம்/

சொல்லின் இறுதியில் வரும் ள, ல போன்ற ஒலிகள் பேச்சு மொழியில் மறைந்து விடுகின்றன.

வந்தாள் — வந்தா

அவள் — அவ

வந்தால் — வந்தா

பந்தல் — பந்த

இரண்டும் அதற்கு மேற்பட்ட அசையை உடைய சொற்களில் முதல் அசையில் இகரமோ உகரமோ வந்து அடுத்து அகரம் வந்தால் அவை முறையே எகரமாகவும் ஒகரமாகவும் பேச்சு மொழியில் மாறும்.

இறங்கு — எரங்கு

கிழக்கு — கெழக்கு

விளக்கு — வெளக்கு

குடம் — கொடொ(ம்)

உலகம் — ஒல்கொ(ம்)

புடவை — பொடவெ

இப்படிப்பட்ட மாற்றங்கள் நிறைய சொற்களில் வருகின்றன. இப்படி இல்லாமல் தனிப்பட்ட சொற்களிலோ இரண்டு மூன்று சொற்களில் மட்டுமோ வரும் வேறுபாடுகள் அதிகமாக அமைந்துள்ளன.

இரண்டு — ரெண்டு

எழுந்திரு — எந்திரி

(பேசிக்) கொண்டிரு — கிட்டிரு

1.8.2. இலக்கணக் கூறுகள்

பேச்சு மொழியில் பெயர்ச் சொற்கள் வேற்றுமை ஏற்கும் போது **இன்** சாரியை பெறுவதில்லை. ஆனால், எழுத்துமொழியில் பெற்றும் பெறாமலும் வரும்.

மரத்தினால் ~ மரத்தால் — மரத்தாலெ

மரத்தினை ~ மரத்தை — மரத்தெ

மரத்திற்கு ~ மரத்துக்கு

மரத்தின் ~ மர

நாட்டின் ~ நாட்டு

ஆறாம் வேற்றுமை உருபுகள் **அது, உடைய** ஆகியனவும் **இடம்** எனும் ஏழாம் வேற்றுமை உருபும் (உயர்திணைப் பெயர் களிலும் மூவிடப் பெயர்களிலும்) எழுத்து மொழியில் மட்டுமே வருகின்றன. பேச்சு மொழியில் **ஓட** என்பது ஆறாம் வேற்றுமை யும் **கிட்ட** என்பது ஏழாம் வேற்றுமையும் உணர்த்தும். மூன்றாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை ஆகியவை **எகர** இடை நிலை பெற்று பொருள் இல்லாமல் வரும்.

கையால் — கையாலெ

கையில் — கையிலெ

வினைச் சொற்களில் எழுத்துமொழியில் மட்டுமே **வி, பி** என்ற ஈரேவல் வினை விகுதிகள் (**செய்வி, படிப்பி**) உள்ளன. பேச்சுமொழியில் **செய், பண்** என்ற சொற்களைச் **செய்** என்ற வாய்பாட்டு வினையெச்சத்தோடு சேர்த்து அப்பொருளை உணர்த்த வேண்டும். பேச்சுமொழியில் சில சொற்களில் **பி** என்ற விகுதி (**காண்பி** என்பது **காமி** என்று வழங்கும்) காணப்பட்டாலும் அவை அந்தப் பொருளில் (**காமிக்கச்சொல்**) வழங்கு வதில்லை.

யகர மெய்யில் முடியும் வினைச்சொற்கள் (**பெய், நெய், செய்**) **தகர** மெய்யை எழுத்து மொழியிலும் **ஞ்ச்** என்பதைப் பேச்சு மொழியிலும் ஏற்கும்.

செய்து — செஞ்சு

பெய்து — பெஞ்சு

அப்படியே, அஃறிணை ஒருமை வினைமுற்றுச் சொற்களில் நிகழ் கால விகுதியாக உகரம் மட்டுமே பேச்சுமொழியில் வரும். பிராமணர் பேச்சில் **அர** என்பது வழங்குகிறது.

செய்கிறது — செய்யுது — செய்யரது

ஓடுகிறது — ஓடுது — ஓடரது

நடக்கிறது — நடக்குது — நடக்கரது

மகாகவி பாரதியாரும் **பாயுது, பிறக்குது** போன்றவற்றை 'செந்தமிழ் நாடு எனும் போதினிலே' என்ற பாட்டில் பயன் படுத்தியுள்ளது எல்லோரும் அறிந்ததே.

எதிர்கால வினைமுற்றுகள் பேச்சுமொழியில் வழக்கமாக நடைபெறும் செயலையும் நிச்சயமற்ற தன்மையையும் உணர்த்தும். பேச்சுமொழியில் அஃறிணை வினைமுற்றில் ஒருமை—பன்மை வேறுபாடு இல்லை.

ஒரு மாடு வந்தது — ஒருமாடு வந்துது

பத்து மாடு வந்தன — பத்துமாடு வந்துது

இவ்வாறு, இலக்கணக் கூறுகளில் இன்னும் எத்தனையோ வேறுபாடுகள் அமைந்துள்ளன.

1.8.3. சொற்களஞ்சியம்

பொதுவாக எழுத்து மொழியில் மொழித் தூய்மை அதிகம் காணப்படுகின்றது. பேச்சு மொழியில் பிற மொழிச் சொற்கள் நிறைய உள்ளன.

மாலை — சாயங்காலம் ~ சாயரட்சை

கணவன் — புருஷன் ~ வீட்டுக்காரன்

நண்பகல் — மத்தியானம் ~ மதியம்

ஆண்டு — வருஷம்

உண் — சாப்பிடு ~ தின்

பயன் — பிரயோஜனம்

முதலியன.

வாக்கிய அமைப்பிலும் இரண்டுமே வேறுபடுகின்றன. பேச்சு மொழியில் காணப்படும் குறை வாக்கியங்கள் எல்லா மொழியிலும்

அளவில் சிறியவையாகவும் இருக்கும். எழுத்து மொழியில் வாக்கிய அமைப்பில் அதிக ஒழுங்கு உண்டு; கூட்டு வாக்கியங் களும் துணை வாக்கியங்களும் நிறைய அமைந்திருக்கும்.

பேச்சுமொழியும் எழுத்துமொழியும் வேறுபட்டிருப்பதால், இரண்டையும் வேறுமொழியாகக் கருதவேண்டும் என்று எண்ணு கிறவர்களும் இருக்கிறார்கள். எழுத்துமொழியைப் பேச்சுமொழி யோடு தொடர்பு இல்லாதபடி, பழைய இலக்கண-இலக்கியநெறிப் படி எழுதவேண்டும் என்று நினைப்பவர்களையும் காணலாம்.

உயிரோட்டமும் தெளிவுமுள்ள உரைநடை பேச்சுமொழி அடிப்படையிலேயே அமையவேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது[6].

1.9. பேச்சு மொழியின் பழமை

கொச்சை மொழி என்று கருதப்படுகிற இன்றைய பேச்சு மொழியிலும், எப்படிப் பழமைக் கூறுகள் அமைந்துள்ளன என்று பார்ப்போம். பொதுவாகச் சில வடிவங்களைப் பார்க்கும்போது எழுத்துமொழியே பழைய வடிவம் என்று எளிதில் தோன்றும். **படொ(ம்)**, **கெழக்கு** போன்ற சொற்களில் **படம்**, **கிழக்கு** என்ற எழுத்துமொழி வடிவமே காலத்தால் பழமையானது. ஆனால், **விளக்கு—வெளக்கு** என்ற வடிவத்தில் பேச்சு மொழி வடிவமே பழமையானது என்பதை **வெளிச்சம்**, **வெள்ளை** போன்று அதே அடிச்சொல்லிலிருந்து பிறந்த பிற சொற்களாலும் பிற திராவிட மொழிகளாலும் (கன்னடம், **பௌகு**; கோடா, **வெள்க்**; துளு, **பௌகு** DED. 4524) உறுதியாகிறது. சங்க காலத்திற்கு முன்னரே எகரம், அடுத்த அசையில் அகரம் இருக்கும்போது இகரமாகச் சில கிளை மொழிகளில் மாறியிருக்கவேண்டும். அதுவே நிலைமொழியாக எழுத்து மொழியில் ஏற்றுக்கொள்ளப்பட்டதால், இன்றும் அப்படியே எழுதி வருகிறோம். இன்று இலங்கை தவிர ஏனைய கிளை மொழிகளில் எகரமே பயன்படுகிறது.

---

6. "The style of literary prose is alive and expressive chiefly in so far as it is rooted in that colloquial language"

சங்க இலக்கியம் முழுமையும் முன்னிலைப்பண்மை வடிவமாக **நீயிர்**, **நீர்** என்ற வடிவங்களே காணப்படுகின்றன. ஆனால், தேவாரத்தில் **நீங்கள்** என்ற இரட்டைப் பன்மை வடிவமும் சீவக சிந்தாமணியில் **நீம்** (1045) என்ற வடிவமும் காணப்படுகின்றன. பிற திராவிட மொழிகளிலும் **நீம்** என்ற வடிவமோ அதன் திரிந்த வடிவங்களோ தான் காணப்படுகின்றன. எனவே, வரலாற்று நிலையில் **நீம்** என்பதே பழமை உடையது. ஆனால், அது சங்க காலத்தில் காணப்படவில்லையாயினும் இன்று கன்னியாகுமரி மீனவர் தமிழில் மட்டும் **நீமெ** என்ற வடிவம் வழங்கிவருகிறது (சண்முகம்பிள்ளை 1966). எனவே, பேச்சு மொழியை வரலாற்று நிலையில் அலட்சியம் செய்யக்கூடாது. இங்கு அருணபாரதியின் கட்டுரை ஒன்று (1975) இந்தவகையில் சில உண்மைகளை எடுத்துக்காட்டுவது குறிப்பிடத்தகுந்தது.

இப்பொழுது பலவேறு தொழில்கள் செய்யும் மக்களிடையே வழங்கும் சொற்களஞ்சியத்தில், இலக்கியத்தமிழில் ஏறாத நுண்ணிய வேறுபாடுகள் உடைய பல சொற்கள் இருப்பதைக் கிளை மொழி ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். காற்றின் வகையாக பதினைந்துக்கும் மேற்பட்ட சொற்களும், நீரின் பெயர்களாக இருபதுக்கு மேற்பட்ட சொற்களும் உள்ளன. அது போல உப்பு தயாரிப்போர் பேச்சில் எட்டுவகையான உப்பைக் குறிக்கும் சொற்களும் உள்ளன. (சீனுவாசவர்மா, 1977:203-208) தமிழில் ஆயிரக்கணக்கான சொற்கள் தேவைப்படும் இந்தக் காலத்தில் கிளை மொழி ஒரு நல்ல ஆதாரமாக இருக்கும் என்ற கருத்து மொழியியலாளர்களிடையே மட்டும் இன்றிப் பிறதுறை அறிஞர்களிடமும் (கணேசன், 1972: 39, இராமலிங்கனார், 1972) பரவி வருகிறது. இவையெல்லாம் பேச்சுமொழியைத் தாழ்வாகக் கருதி உதாசீனப்படுத்தக்கூடாது என்பதைக் காட்டுகின்றன. பேச்சுமொழியை மதிக்கக் கற்றுக்கொண்டால் எழுத்துமொழியில் ஏற்படும் மாற்றத்தை அனுதாபத்தோடு புரிந்துகொள்ள முடியும்.

1.10. மொழியின் இலக்கணம்

இருநிலை உடைய மொழிகளில் இலக்கணம் புறநிலையாக அமைகிறது என்ற கருத்து காணப்படுகிறது என்று மேலே

குறிப்பிட்டோம் அல்லவா; தமிழ் இருநிலை மொழி என்பதற்கு ஏற்ப அப்படிப்பட்ட கருத்தும் இருக்கிறதா என்று பார்ப்போம்.

தமிழ் இலக்கண நூல்கள், மொழியின் இலக்கணம் அகநிலையாக அமையும் என்றே கூறியிருக்கின்றன. தொல்காப்பியப் பாயிரம்,

வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி (வரிகள், 4,5)

என்று கூறுவது உலக வழக்கையும் செய்யுளையும் அடிப்படையாகக்கொண்டு எழுத்து, சொல், பொருள் ஆகியவற்றை ஆராய வேண்டும் என்றே பொருள்படும்.

'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்' என்று நன்னூலும் (14.11) கூறுகிறது. எனவே, மொழியில் வழங்கும் பயிற்சியை அடிப்படையாகக் கொண்டது இலக்கணம் என்பது அகநிலையைக் காட்டுகிறது. ஆயினும், அவர்கள் எவ்வளவுதூரம் இலக்கிய வழக்கைத் தழுவி தங்களுடைய இலக்கணத்தை எழுதியிருக்கிறார்கள் என்பது விவாதத்திற்கு உரியது. இலக்கணங்கள் இலக்கிய மொழியைப் புறக்கணித்துவிட்டன என்பதற்கும் பல உதாரணங்கள் காட்டமுடியும். சான்றாக, **செய்தால்** என்னும் வாய்பாட்டு நியதிப்பொருள் தரும் வினையெச்சம் சங்க காலத்தில் சிறுபான்மையாகவும் இடைக்காலத்தில் பெரும்பான்மையாகவும் பயன்படுத்தப்பட்டிருந்தும் அதை இடைக்காலத்தில் எழுந்த வீரசோழியம், நேமிநாதம், நன்னூல் ஆகிய மூன்று இலக்கண நூல்களும் புறக்கணித்து விட்டன; இலக்கண விளக்கம் என்ற நூலே முதலில் கூறியுள்ளது (சண்முகம், 1969:78) எனவே கருத்தளவில் இலக்கணம் அகநிலையாக அமைகிறது என்பதே இலக்கண ஆசிரியர்களுக்கு உடன்பாடு. ஆனால், பேச்சுமொழியும் எழுத்துமொழியும் அதிக வேறுபாடு உடைய இந்தநாளில் இலக்கணம் புறநிலையாகவே அமைகிறது என்ற கருத்தே தமிழ் அறிஞர்களிடம் பரவலாகக் காணப்படுகிறது. இதற்குக் காரணம் பேச்சுமொழி தாழ்வாகவும் எழுத்து மொழி உயர்வாகவும் மதிக்கப்படுவதே ஆகும். அதனால், எழுத்து மொழி பண்டைய இலக்கண இலக்கிய நெறியைப் பின்பற்றவேண்டும் என்று எண்ணி

இன்றைய தமிழ் அறிஞர்களின் எழுத்துமொழி வழக்குகள்கூடப் புறக்கணிக்கப்படுகின்றன.

ஆற்றுக்குக் கரைபோலவும் வயலுக்கு வரப்புபோலவும் விளையாட்டு இடத்திற்கு வரம்புக்கோடுபோலவும் மொழிக்கு அரணாய் நிற்பது அணிமிகு இலக்கணம்'

(முத்துப்பிள்ளை, 1974:83)

'இலக்கணம் ஒருமொழிக்கு முதுகெலும்பு போன்றது'

(பரந்தாமனார், 1972:49)

என்று பலர் கூறுகிறார்கள். இதன் பலன், மொழியின் இலக்கணம் அறிய அந்த மொழி வழங்கும் காலத்தில் எழுந்த நூல்களை ஆராயாது ஒதுக்கித்தள்ளிவிட்டு, வேறு எங்கேயோ போய் தேடிப் பிடிக்கும் முயற்சியாகத்தான் அமையும். தமிழகத்தைப் பொறுத்த வரையில் தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகிய இரண்டில் தான் இன்றைய மொழிக்குரிய இலக்கணம் அமைந்துள்ளது என்று நினைப்பவர்களும், கம்பர் காலம் வரையில் உள்ள இலக்கியங்களை ஒத்துக்கொண்டு அவைகளில்தான் இலக்கணத்தைத் தேடவேண்டும் என்று கருதுகிறவர்களும் எண்ணிக்கையில் அதிகமாகக் காணப்படுகிறார்கள்.

பிற மொழிச் சொற்களை எப்படித் தமிழாக்குவது என்பது எழுத்துச்சீர்திருத்தத்தோடு தொடர்புடைய பிரச்சனை. அதைப் பற்றி மகாதேவன் (1973:23) குறிப்பிடும்போது,

'தொல்காப்பியம் வடமொழிச் சொற்களைத் தமிழில் எழுதும் போது வடமொழிச் சொற்களையும் ஏற்காது தமிழ் எழுத்துகளாலேயே எழுதவேண்டும் என்பதனை,

வடசொற்கிளவி வடவெழுத்து ஓரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே

என்று கூறியருளினார். இந்த விதி சிலருக்கு இன்று வேப்பங்காயாகக் கசக்கின்றது. ஆனால், இளங்கோவும், கம்பரும், சேக்கிழாரும் இந்தப் பாதுகாப்புக் கவசத்தை அணிந்து கொண்டதால் தான் எழுத்துக் குழப்பத்திலிருந்து தப்பிக்கொள்ள முடிந்தது' என்று விளக்கியுள்ளார்.

இங்குத்தொல்காப்பியமும் அதன் விதியைப் பின்பற்றுகிற அளவு 13-ஆம் நூற்றாண்டு வரையுள்ள இலக்கியங்களும் பாராட்டப்பட்டு இன்றும் நாம் அதே வழியைத்தான் தழுவிக் கொள்ள வேண்டும் என்று சிபாரிசும் செய்கிறார். எனவே, இலக்கணம் புறநிலை என்பதே அவர் கருத்து என்பது நன்கு புலனாகிறது. அதனால்தான் 15-ஆம் நூற்றாண்டிலிருந்து வாழ்ந்த பல இலக்கியப் புலவர்களாகிய அருணகிரியார், தாயுமானவர், சுப்பிரமணிய பாரதியார், சுந்தரம் பிள்ளை போன்றவர்களும், இன்றைய படைப்பு இலக்கிய ஆசிரியர்களும், பலதுறை அறிஞர்களும் கையாண்டுள்ள மொழி அவர் கண்ணில் படாமல் மறைந்து விட்டது (விளக்கத்துக்குச் சண்முகம், 1978; **Sugathapala De Silva**, 1975: 8),

பரந்தாமனார் இன்றைய தமிழில் ஏற்பட்ட வளர்ச்சியை ஒத்துக் கொண்டு சொல்லுக்கு முதலிலும் இறுதியிலும் வரும் எழுத்துகளில் புதுமையைக் காட்டினாலும் சிலச்சில இடங்களில் இன்றைய வழக்குகளைத் தற்கால இலக்கியப் பயிற்சி நோக்காது கண்டிக்கிறார். பன்மைப் பெயர்கள் அமையும் விதம் பற்றி விளக்கும்போது **நான்** என்ற சொல்லின் பன்மை வடிவத்தை **நாட்கள்** என்று எழுதாமல் **நான்கள்** என்றே எழுதுக; **நாட்கள்** என்பது புதிய கள் என்று பொருள் தரும்' (பரந்தாமனார், 1972: 155) என்று கூறிச் சென்றுள்ளார். ஆனால், இன்று பலர் **நாட்கள்** என்றே எழுதுகிறார்கள். மறைமலையடிகளும் (அம்பிகாபதி, ப. 23) வரதராசனும் (சிறுகதைத்திரட்டு, ப. 44) கூட **நாட்கள்** என்றே பயன்படுத்தியுள்ளார்கள். எனவே, இங்கு இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த அறிஞர்களின் வழக்குகூட அலட்சியப்படுத்தப்பட்டுவிட்டது. இதற்கெல்லாம் காரணம் தற்காலத் தமிழ் மொழிவரலாற்றில் ஒரு தனிக் காலக்கட்டத்தைச் சேர்ந்தது என்பதை அறிந்து, அதற்குரிய இலக்கணத்தை அகநிலையாக இன்றைய எழுத்துமொழியையும் பேச்சுமொழியையும் ஒட்டி ஆராயும் முறை வளராததும் வளர்ந்தவற்றையும் புறக்கணிப்பதும்தான்.

1.11. வரலாற்று நோக்கில் இன்றைய எழுத்துமொழி

மொழி வளர்ச்சியை விளக்கும் வரலாற்று மொழியியலார் மொழி வரலாற்றைப் பல காலகட்டங்களாகப் பிரித்தே பேசுவார்கள். அப்படிப் பிரிப்பதற்கும் மொழி அமைப்பில் உள்ள வேறுபாட்டையே அடிப்படையாகக் கொள்வார்கள். மொழிவளர்ச்சியைப் பிரித்துக் காட்டும்போது பழங்காலம், இடைக்காலம், தற்காலம் என்று மூவகையாகப் பிரிக்கும் மரபு உண்டு. அந்த அடிப்படையில் இன்றைய தமிழைத் தற்காலத் தமிழ் என்று குறிப்பிடுவோம். இது 17ஆம் நூற்றாண்டிலிருந்து துவங்கியிருக்க வேண்டும் என்ற கருத்து காணப்பட்டாலும் (சண்முகம் 1972) இருபதாம் நூற்றாண்டுத் தமிழைப் பல்வேறு காரணங்களால் தனித் தன்மை வாய்ந்ததாகவே கருதலாம். ஆயினும், முற்காலத்தின் மொழிக் கூறுகளும் ஆங்காகே காணப்படும்: அவைகளைச் சுட்டிக்காட்டி விட்டு தற்காலத் தமிழின் சிறப்புப் பண்புகளை விளக்குவோம்.

2,4,6, ஆகிய வேற்றுமை உருபுகள், இறந்தகால. எதிர்கால விகுதிகள் ஆகியவை சங்க காலத்திலிருந்தே தொடர்ந்து வருகின்றன. அப்படியே அன்று வழங்கிய பல சொற்களின் வடிவங்கள் இன்று பயன்பட்டு வருகின்றன. ஆண், பெண், ஒன்று, ஐந்து, ஆறு, காலை, மாலை, உழு, நெய், ஓடு, காண் போன்ற பல சொற்களில் எந்தவித மாற்றமும் பெறவில்லை. இவையெல்லாம் இன்றைய தமிழில் காணப்படும் சங்கத்தமிழ்க் கூறுகள். ஆயினும், சங்க காலத்திற்குப்பிறகு மொழியில் ஏற்பட்ட மாற்றங்கள் இடைக் காலத்தமிழில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அது தற்காலத் தமிழின் பரம்பரைச் சொத்தாகவும் உள்ளது.

1. சொல்லுக்கு முதலில் ஆகார உயிரோடு கூடிய யகரமெய் மட்டும் கெட்டு உயிர்முதல் சொல்லாக மாறியுள்ளது.

யாறு — ஆறு

யாடு — ஆடு

யாமை — ஆமை

யாண்டு — ஆண்டு

2. நாநுனி நுனி அண்ண வல்லொலியாக (த)சில உருபன்களில் இருந்தது இடைநா இடைஅண்ண வல்லொலியாக (ச) சிலசொற்களில் திரிந்துள்ளது.

ஆய்த்தி — ஆய்ச்சி

இடைத்தி — இடைச்சி

3. சொல்லுக்கு முதலில் **ச**, **சை** போன்ற எழுத்துகளும், **ய**, **யோ**, **யௌ** போன்ற எழுத்துகளும் நிறைய வந்துள்ளன.

4. எண்ணுப் பெயரோடு **அன்** சாரியைப் பயன்படுத்தாமல் **இன்** சாரியையைக் கையாளுவது.

ஒன்றனை — ஒன்றினை

மூன்றனை — மூன்றினை

5. இரட்டைப் பன்மை வடிவங்களும் பெரும்பான்மை வழக்காக வரத்தலைப்பட்டமை.

நாங்கள், தாங்கள், எங்கள், உங்கள், வந்தார்கள், செய்தீர்கள்,

6. நிகழ்கால விகுதியாகக் கிறு, கின்று மிகுதியாக ஆனமை.

7. வல்வினைகள் (Strong verbs) எனப்படுபவை சங்க இலக்கியத்தில் செய என்ற வினையெச்சத்தின்போது பகரமெய் ஏற்று வருவது (**நடப்ப, படிப்ப, பார்ப்ப**) பெரும்பான்மை வழக்கு: இடைக்காலத்தில் ககர மெய் ஏற்பதே பெரும்பான்மை (**நடக்க, படிக்க, பார்க்க**). இவையே இன்றைய தமிழ் வழக்கு.

8. சொற்களஞ்சியத்திலும் இடைக்காலத் தமிழின் செல்வாக்கு நிறைய உண்டு. **சாக்கு, சட்டை, அப்பா, கிழக்கு, மேற்கு, கிழமை (நாள்) மாதம்** போன்று நூற்றுக்கணக்கான சொற்கள் இடைக்காலத்தின் நினைவாக இன்றும் உள்ளன.

பொதுவாகத் தற்காலத்தமிழ் இடைக்காலத் தமிழோடுதான் நிறைய ஒற்றுமை உடையது என்றாலும் அதற்கெனத் தனிச் சிறப்புகளும் பல உண்டு.

19-ஆம் நூற்றாண்டு எழுந்த இலக்கண நூலான சுவாமி நாதம் என்ற அய்ந்திலக்கண நூலுக்கு எழுதப்பட்ட எழுத்ததிகார விருத்தி உரையில் ர, ல என்ற இரண்டு மெய்யும் எல்லா உயிர் களோடும் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வருவதும் டகரம் **அ, ஆ**, ஈ, ஏ, ஆகிய, உயிர் எழுத்துகளோடு சேர்ந்த சொல்லின் முதலில்வருவதும் உண்டு (சண்முகம், 1976 ஆ. 52,53) என்றது தற்காலத் தமிழின் சிறப்பியல்புகளாகக் கொள்ளலாம். இன்று புதிய மெய் மயக்கங்களும் பயிலப்படுகின்றன. இவையெல்லாம் **எழுத்துச் சீர்திருத்தம்** என்ற நூலில் (சண்முகம் 1978) விளக்கப்பட்டுள்ளது.

மேலும், புதிய சந்திகளும் தோன்றியுள்ளன. **அந்நந்த (அந்த + அந்த) நாலா பக்கமும் (நாலு + பக்கமும்)' பத்திரிகாசிரியர் (பத்திரிகை + ஆசிரியர்), அமெரிக்கர் (அமெரிக்கா + அர்), ரஷ்யர் (ரஷ்யா + அர்)** போன்று எத்தனையோ சொற்களில் மாற்று வடிவங்கள் வந்து புதிய புணர்ச்சி விதியை அமைக்கும்படிச் செய்துள்ளன.

அஃறிணைப் பன்மை வடிவங்களும் இரட்டைப்பன்மை வடிவங் களாக (**அவைகள், இவைகள்**) மாறிவிட்டன. இன்று பல புதிய உருபன்கள் அமைந்துள்ளன. பெயர்ச்சொல்லில் எதிர்மறை வடிவம் சேர்க்கப்படுதல் இன்று பரவலாக உள்ளது. **நாகரிகம்-அநாகரிகம்; அவசியம்-அனாவசியம்; நம்பிக்கை-அவநம்பிக்கை; சொல்-அவச்சொல்; மானம்-அவமானம்** என்று வரும்போது எதிர்மறை உருபனைக்காணலாம். **சிந்தனை-சிந்தி; கோபம்-கோபி** போன்ற சொற்களில் பதிலி உருபன் (Replacive morpheme) என்று புதுவகை உருபனை ஏற்றுக்கொள்ளவேண்டிய அவசியத்தை கோதண்டராமன் ஒரு கட்டுரையில் விளக்கியுள்ளார் (கோதண்டராமன், 1974:145).

வாக்கிய அமைப்பில் பழைய கால மொழியிலிருந்து தற்காலத் தமிழ் வேறுபட்டிருப்பதையும் அது பேச்சுமொழியை ஒட்டிஅமைக்

கப்பட்டிருப்பதையும் வரதராசன் சுட்டிக்காட்டியுள்ளார்[7]. எனவே இருபதாம் நூற்றாண்டு மொழி அமைப்பில் எல்லா நிலையிலும் தனித்தன்மை வாய்ந்தது என்பதை மறுக்க முடியாது. ஆகவே, அதன் உண்மையான தன்மையை உணர்ந்து வழிகாட்டும் முறையில் இலக்கணம் எழுதவேண்டுமானால், இன்றைய எழுத்து மொழியில் காணப்படும் பயிற்சிகளை எடுத்து ஆராய்ந்து அவற்றில் பெரும்பான்மையான வழக்குகளின் அடிப்படையையே கொள்ளவேண்டும்; அதுவே நல்லதமிழ் எழுத வழிகாட்டி யாக உதவும். அது போலவே பழைய இலக்கியங்களைப் படிக்க வும் மொழி வளர்ச்சியை அறியவும் வேண்டுமானால், அதற்காகத் தனி இலக்கணம் ஒன்று எழுதவேண்டும்; இரண்டுவகை இலக் கணத்தையும் குழப்பினால் யாருக்கும் பயன்படாது.

பேச்சு மொழியில் பல கிளைகள் இருப்பது போலவே எழுத்து மொழியிலும் பல வேறுபாடுகள் உண்டு. அவைகளை நடை அடிப் படையில் இலக்கிய ஆராய்ச்சியாளர் ஆராய்வார்கள். மொழி அமைப்பு அடிப்படையிலும் பலவகைகள் இருப்பதை உணரலாம். அதுபற்றி விரிவான ஆராய்ச்சி நடைபெறாததால் சுருக்கமாகக் குறிப்பிடுவோம்.

பண்டிதர் நடை என்று சிவஞானம் (1960:69) குறிப்பிடு கிறார். தமிழ் படித்தவர்கள் தங்களைப் போன்று பிறருக்கும் தமிழ் இலக்கியம் படிக்கும் மாணவர்களுக்கும் இலக்கியம், சமயம் குறித்து எழுதவே இந்த நடையைப் பயன்படுத்துகிறார்கள். மொழித் தூய்மையும் பழைய மொழியின் செல்வாக்கும் இதன் தனிச் சிறப்புகள். இதை இலக்கணத் தமிழ் என்று குறிப்பிட லாம்.

---

7. "'Great writers, Thiru Vi.ka, Subramania Bharathi and others rendered valuable service in moulding the modern literary Tamil on the syntax of the spoken Tamil through their writings in journals which served as the media of mass communication."

Varadarajan, 1962:84

இன்னொரு வகைத் தமிழை இலக்கியத் தமிழ் என்று அழைக்கலாம். இது மொழியில் தனிப்புலமை இல்லாதவர்களை நோக்கி, படைப்பு இலக்கியமான நாவல், சிறுகதை, வரலாறு, சமூக சீர் திருத்தம் முதலிய பல பிற துறை பற்றியே பெரிதும் பயன் படுத்தப்படும். இதில் பேச்சு மொழியின் செல்வாக்கும் பிறமொழிச் செல்வாக்கும் காணலாம். இது பல உட்பிரிவுகளை உடையது. அரசியல் வாதிகள் பயன்படுத்தும் மொழிக்கும் படைப்பு இலக்கிய வாதிகளுக்கும் சில வேறுபாடுகள் உண்டு.

சமயத்தமிழ் என்ற மற்றொரு வகையையும் அமைக்கலாம், சமயம் பற்றிப் பொதுமக்களுக்காகச் சமய நோக்கத்தோடு எழுதப் படுவது இது. இதில் வடமொழிச் செல்வாக்கு அதிகம் இருக்கும்.

கடைசியாக, பத்திரிகைத்தமிழ் என்ற ஒன்றும் உண்டு. இது பொது மக்களுக்காக உலக நடப்பு, நாட்டு நடப்பு விஷயங்களை எளிய முறையில் சொல்ல முயற்சிக்கும். உலகில் எல்லாப் பகுதி யிலும் நடக்கும் முக்கிய அரசியல், கலாச்சார விஷயங்களே இதற்குரிய பொருள். இதற்கு ஆதாரம் பிற மொழியாயினும் ஆங்கிலமே நேரடியாகப் பயன்படும். எனவே, ஆங்கிலமொழியின் மறைமுகச் செல்வாக்கை ஆங்காங்கே பார்க்க முடியும். புதிய புதிய தொகைகளும் தொடர்களும் உண்டாக்கப்படும். வார, மாதப் பத்திரிகைகளில் இலக்கியத் தமிழிலும் சமயத்தமிழிலும் அடங்கு வனவாகக் கொண்டு செய்தித்தாள் தமிழே பத்திரிகைத் தமிழ் என்று கொள்ளவேண்டும். எனினும் எழுத்து அடிப்படையில் பார்க்கும்போது பொதுவாகப் பத்திரிகைகளே பல திருத்தங்களை முன்னோடியாக இருந்து செய்து வந்திருக்கின்றன; செய்தும் வருகின்றன. எனவே பத்திரிகைத் தமிழ் என்பது எல்லா தின, வார, மாத பத்திரிகைகளில் பயன்படும் தமிழைக் குறிப்பதாகக் கொள்ளலாம், பத்திரிகைத் தமிழ் பற்றி இப்பொழுது தங்கமணி யன் (1978) தனி நூலே எழுதியிருப்பது குறிப்பிடத்தகுந்தது.

இப்படி எழுத்துத்தமிழ் பலவகைப்படுவதை விரிவாக ஆராய்ந்து தனித்தனி இலக்கணம் எழுதலாம்; எழுதவேண்டும். அப்போது தான் தமிழ் எல்லாத் துறையிலும் சிறப்பாகப் பயன் படத்தக்க மொழியாய் விளங்கும்.

2. எழுத்தாக்கம்

2.0. எழுத்துமொழி

எழுத்துமொழி காலத்தால் மிக்வும் பிற்பட்டது என்பதும் அது மனிதனால் அமைத்துக் கொள்ளப்பட்டது என்பதும் முன்னரே விளக்கப்பட்டது. அதனால்தான் உலகத்தில் உள்ள பல மொழிகள் வெவ்வேறு கால்கட்டத்தில் எழுத்துருவம் பெற்றுள்ளன. இந்த உண்மையை, ஒவ்வொரு மொழியின் மிகப்பழமையான எழுத்துமொழிச் சான்றின் காலவேறுபாட்டால் உணரமுடிகிறது. முன்னரே குறிப்பிட்டபடி தமிழ்மொழியின் தொன்மையான எழுத்துச்சான்று கி.மு. மூன்றாம் நூற்றாண்டாகும். கன்னட மொழி கி.பி. 500-ஆம் ஆண்டிலும், தெலுங்குமொழி கி.பி. 576-ஆம் ஆண்டிலும், பழமையான எழுத்துச் சான்றுகள் பெற்றுள்ளன. இந்திய ஆரிய மொழிகளான வங்காளம் கி.பி 950-இலும் மராத்தி கி.பி. 1000-இலும் குஜராத்தி 12-ஆம் நூற்றாண்டிலும் தொன்மையான எழுத்துச் சான்றுகள் பெற்றிருக்கின்றன.

2.1. மொழியும் எழுத்தும்

ஒவ்வொரு மொழியும் தனித்தனி வரிவடிவம் பெறாது, பல மொழிகள் ஒரே விதமான வரிவடிவத்தைப் பயன்படுத்துகின்றன. இந்தியாவில் ஹிந்தி, மராத்தி, சமஸ்கிருதம், சிந்தி ஆகியவை

நாகரி (அதாவது தேவநாகரி) எழுத்துக்களால் எழுதப்படுகின்றன. ரோமன் எழுத்துகளை ஐரோப்பாவில் இங்கிலீஷ், பிரெஞ்சு, ஜெர்மன், நார்வேஜியன், டச்சு போன்ற மொழிகளும்; ஆசியாவில் துருக்கி, மலாய், பாஷாஇந்தோனேஷியா, பிலிப் பெனா, வியட்னாமிஸ் போன்ற மொழிகளும் ஆப்பிரிக்காவில் சுவாகிலி போன்ற மொழிகளும் பயன்படுத்துகின்றன. சிரிலிக் எழுத்தை ரஷ்யன், உஸ்பெக், கஸாஹ், கராக்கால்பாக், கிர்கிஸ் போன்ற மொழிகள் (எல்லாம் சோவியத் யூனியனில் வழங்குபவை) கையாளுகின்றன.

வேறுபட்ட எழுத்துகள் என்று கருதப்படுபவையும் கூட இன்னொரு மொழி எழுத்தின் செல்வாக்கால் ஏற்பட்டனவயே என் பதை வரலாறு நிரூபிக்கிறது. இந்தியாவில் வழங்கும் பல்வேறு பட்ட எழுத்துகளும் அசோகன் பிராமி எழுத்துக்களின் பரிணாம வேறுபாட்டால், வித்தியாசப்பட்டவையாகவே கருதப்படுகின்றன. அதுபோலவே சிரிலிக்கும் ரோமனும் ஒரே எழுத்து மூலத்தை உடையன. ஆகையால், உலக மொழிகள் அனைத்தும் எழுத்து மொழியில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒரு மூலத்திலிருந்து உண்டாகியிருக்கலாம் என்று எழுத்துகளை ஆராயும் அறிஞர்கள் நம்புகிறார்கள் (Gelb, 1962:22). அதாவது, வரிவடிவத்திற்கு தனித்தனி ஒலி மதிப்பு கொடுத்து சொல்லைப் பலகுறிகளால் எழுத ஆரம்பித்தது மனித இன்வரலாற்றில் ஒரு சாதனை. அதை ஒலியாக்கம் (Phonetization) என்று குறிப்பிடுகிறார்கள் (Gelb, 1962:192)[1]. அந்த ஒரு மொழியிலிருந்து பல்வேறு மொழி களுக்கும் பரவியிருக்க வேண்டும்; பல்வகை மொழிச் சமூகங்களும் அதைப் பின்பற்றியிருக்க வேண்டும்.

இதனால், ஒரு மொழிக்கு எழுத்துருவம் கொடுப்பது — எழுத்தாக்கம் செய்வது, அந்த மொழிச் சமூகத்தின் கலாச்சார

---

1. A Primitive logographic writing can develop into a full system only if it succeeds in attaching to a sign a phonetic value independent of the meaning which this sign has a word. This is phonotization, the most important single step in the history of writing.

Gelb, 1962:192

வளர்ச்சியில் காணும் ஒரு மைல் கல்லாகக் கருதப்படுகிறது. ஏனெனில் அந்த மொழி, வரலாறு உடையதாகி விடுகிறது. ஆகவே அது மொழி வரலாற்றின் துவக்க காலமாய் அமைகிறது. மேலும், எழுத்து மூலமே முன்னோர்களின் சாதனைகளையும் சிந்தனைகளையும் தெரிந்துகொள்ள முடிகிறது. எனவே, வரலாற்று நிலையில், ஒரு மொழியின் எழுத்துப் படைப்பு — எழுத்தாக்கம், எழுத்துமொழியுடைய மற்றொரு மொழிச் சமூகத்தோடு தொடர்பு ஏற்பட்டதைக் காட்டுகிறது; அந்தத் தொடர்பு அரசியல் பொருளாதாரத் தொடர்பாக இல்லாமல் வெறும் கலாச்சாரத் தொடர்பாக மட்டும் இருக்கலாம். இதனால், புதிய எழுத்துமொழி பெற்ற சமூகம் எழுத்தாக்கத்தை விருப்பு வெறுப்பற்ற நிலையில் நோக்குவது அருமை.[2] எழுத்து மொழியை ஏற்றுக் கொள்வதும் பரப்புவதும் அந்தச் சமூகத்தின் குழு ஒற்றுமைக்கும், குழுவின் அடையாளத்துக்கும் உதவுவதாகக் கருதப்படும். எனவே, எழுத்தாக்கம் மொழியியலோடு பிறதுறை பற்றிய உண்மைகளையும், அதாவது நாட்டு வரலாறு, சமூக உணர்வு முதலியன பற்றியும் வெளிப்படுத்துகிறது.

2·2. எழுத்தாக்கம்

எழுத்தாக்கம் என்பதில் ஒரு மொழியினை எழுதுவதற்குரிய வரிவடிவங்களை அமைப்பது—வரிவடிவ அமைப்பு-ஒரு கூறாகும். ஏனெனில், அந்த வரிவடிவத்தை அமைக்கும் போது எழுத்து உருவம் எத்தனை — எவ்வளவு எண்ணிக்கை — உடையதாய் படைப்பது என்ற பிரச்சனை உடனே எழும். எனவே, எழுத்து எண்ணிக்கையை நிர்ணயிப்பது எழுத்தாக்கத்தின் இரண்டாவது

2 The Creation of writing system is itself necessarily an outgrowth of cultural contact, if not of political and economic domination from outside. Thus, creation of a writing system is singularly unlikely to be viewed dispassionatey and its propagation and acceptance by indigeneous networks are necessarily viewed as having implications for group loyalty and group identity.

— Fishman, 1977: XV

கூறு. அடுத்து, சொல்லை எப்படி எழுதுவது என்று முடிவுகட்ட வேண்டும். அது சொல்லுக்குரிய எழுத்து — சொல்லெழுத்து பற்றிய பிரச்சனை ஆகி எழுத்தாக்கத்தின் மூன்றாவது கூறாக அமையும். இப்படி எழுத்தாக்கம் என்பது 1) வரிவடிவ அமைப்பு 2) எழுத்தின் எண்ணிக்கை, 3) சொல்லெழுத்து நிர்ணயம் ஆகிய மூன்று முக்கியப் பகுதிகளை உடையது.

எழுத்தாக்கத்திற்கு மொழியமைப்பில் ஒலியனியல், சொற் களஞ்சியம் ஆகியவை நன்கு தெரிந்திருப்பது அவசியம். இதுவே மொழியியலோடு நேரடித் தொடர்பு உடையது, ஆனால், எழுத்து மொழி, சமூக கலாச்சார தொடர்பால், அக்காரணிகளின் விளை வால் ஏற்படுவதால், மொழியியலும் சமூக கலாச்சார காரணிகளும் பிரிக்க முடியாதபடி இணைந்து செயல்படும்.[3]

எழுத்தாக்கம் செய்யப்படும் மொழியின் தொழிற்பாடும் ஓரளவு எழுத்தாக்க முறையை நிர்ணயிக்கிறது. இன்று பொதுவாகத் தாய்மொழி மூலமாக எல்லா நிலையிலும்-ஆரம்பப்பள்ளி, உயர் நிலைப்பள்ளி, கல்லூரி ஆகியவற்றிலும் — போதிக்க வேண்டும்; போதிப்பதனால் பல நன்மைகள் உண்டு என்ற கருத்து பெருகி வருகிறது. அந்த நிலையில் சிறுபான்மையினரின் மொழி யாகவும், பழங்குடி மக்களின் மொழியாகவும் இருக்கின்றவற்றில் ஆரம்பக் கல்வியாவது போதிக்கப் படவேண்டும் என்ற ஆர்வம் பலநாட்டு அரசாங்கங்களிடையே காணப்படுகிறது. அதற்காக அந்த மொழிகளுக்கு எழுத்தாக்கம் செய்யும் முயற்சியும் மேற்கொள்ளப் படுகிறது. அந்த முயற்சி பெரும்பான்மையும் இடைக்கால எழுத்

---

3 To create scientifically based orthography one must first have a clear grasp of the language's phonology and vocabulary. And the modern linguist, most earlier orthographers, consciously seeks to acquire this knowledge. At the same time, writing systems are definitely the product of socio-cultural factors which are often so numerous and varied and so intricately associated that it is quite difficult to separate them even for analytical purpose.

— Sjoberg, 1966: 264

தாக்கமாக — அதாவது தாய்மொழி மூலம் கல்வி கற்றாலும், அதன் எழுத்துமுறை தேசிய எழுத்துகளை — வரிவடிவங்களையும் சில சமயங்களில் சொல்லெழுத்துகளையும் கூடத் தழுவி அமைக்கப் படுகிறது. இப்பபடிப்பட்ட எழுத்தாக்கம் — இடைக்கால எழுத்து மொழி (Transitional orthography) என்று அழைக்கப்படுகிறது (Berry, 1977:6). இதில் வரிவடிவம் தேசியமொழிக்குரிய வரிவடிவமே என்பது எல்லோரும் ஒப்புக்கொண்ட முடிவு. ஆனால், சொல்லெழுத்து பற்றிய கருத்தில் மாறுபாடு காணப்படுகிறது. அது சொல்லெழுத்து நிர்ணயத்தின் கீழ் § 5 விவாதிக்கப்படும்.

தமிழ்நாடு அரசு 'படகா' மொழிக்குத் தமிழ் எழுத்துகளைக் கையாளும் முயற்சியில் எழுத்தாக்கம் செய்ய இந்தியமொழி நடுவண் நிறுவனம் (Central Institute of Indian Languges) கேட்டுக் கொண்டுள்ளது. இப்படி இன்று ஒவ்வொரு மாநிலத்திலும் வழங்கும் சிறுபான்மையினர் மொழிக்கும், பழங்குடி மக்களின் மொழிக்கும் அந்த மாநில மொழியின் எழுத்தை ஒட்டி எழுத்தாக்கம் செய்யப்பட்டு வருவதும் குறிப்பிடத்தகுந்தது (Roy, Burman, 1969).

2.3. வரிவடிவ அமைப்பு

2.3.1. எழுத்துமுறை

மொழி பலவிதக்கூறுகளால் ஆனது. எழுத்தாக்கத்தில் ஒலியன், அசை, சொல் ஆகிய மூன்று கூறுகள் முக்கியமானவை. ஒவ்வொரு ஒலியனுக்கும் தனித்தனி வடிவம் அமைத்தால், அதை ஒலியன் எழுத்து (Phonemic writing) அல்லது நெடுங்கணக்கு எழுத்து (Alphabetic writing) என்று அழைப்பார்கள். அப்படியே அசைகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி வடிவம் கொடுத்தால் அதை அசைநிலை எழுத்து (Syllabic writing) என்றும், சொற்கள் அல்லது உருபன்கள் ஒவ்வொன்றும் வேறுவேறு வடிவம் பெற்றால் அதை ஓவிய எழுத்து அல்லது உருபன் எழுத்து (Logographic writing) என்றும் குறிப்பார்கள்.

2.3.2. எழுத்துமுறையும் எழுத்தாக்கமும்

ஒரு மொழிக்கு எழுத்தாக்கம் செய்யும் போது எந்த முறையை மேற்கொள்வது என்ற பிரச்சனை எழும். இந்த மூன்றுமே எழுத்தாக்கத்தின் வளர்ச்சி நிலைகள். அதாவது; ஓவிய எழுத்திலிருந்து அசைநிலை எழுத்தும், அசை நிலையிலிருந்து ஒலியன் எழுத்தும், தோன்றியிருக்கவேண்டும் என்ற கருத்து தொல்லியல் எழுத்து வல்லுனரால் ஒத்துக்கொள்ளப்படுகிறது. சில்மொழிகளில் அசைநிலைமட்டும் உடையதாகவே இருக்கிறது என்றால், பொதுவாக ஒருமொழியின் எழுத்துவடிவம் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ வேறு ஒரு மொழியெழுத்தைக் கடனாண்டிருக்க வேண்டும் என்றே அறிஞர்கள் கருதுகிறார்கள். மேலும், சில மொழிகள் எழுத்தாக்க வளர்ச்சியில் ஓவிய நிலையில் மட்டும் நின்று விடலாம். வேறுசில அசை நிலைவரையில் வளர்ச்சி பெறலாம். அதாவது; சில மொழி எழுத்துகள் ஒரு குறிப்பிட்ட நிலையோடு வளர்ச்சி பெறாமல் நின்றுவிடும்.[4] எனவே, எந்த முறையைத் தேர்ந்தெடுப்பது என்பதை வரலாற்றுச் சூழலே முடிவு செய்யும்; அன்றி நம்முடைய விருப்பத்திற்கு ஏற்பத் தேர்ந்தெடுப்பதற்கில்லை.

வரிவடிவ அமைப்பு எழுதப்பயன்படுத்தும் பொருள், எழுதுகோல் ஆகியவற்றையும் பொறுத்தது. எனவே மொழியின்

---

4 What this principle means in the history of writing is that in reaching its ultimate development, writing what ever its forerunners may be, must pass through the stages of logography, syllabography and alphabetography, in this and no other order. Therefore, no writing can start with a syllabic or alphabetic stage unless it is borrowed, directly or indirectly, from a system which has gone through all the previous stages. A system of writing can naturally stop at one stage without developing further. Thus a number of writing stopped at the logographic or syllabic stage.

Gelb, 1962: 201

வரிவடிவம் அந்தமொழிச்சமூகத்தின் தொழிலியல் வளர்ச்சியை (Technological development) ஒட்டியும் அமையும் என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தது.

சீனம், அராபிக், ரோமன், பிராமி, சிரிலிக் ஆகிய எழுத்துக் களைப் பலமொழிகள் பயன்படுத்துகின்றன என்று மேலே குறிப்பிட்டோம். சீன எழுத்துகளை அரசியல் ஆதிக்கம், கலாச் சாரத் தொடர்பு காரணமாக வியட்நாமிஸ், ஜப்பானிஸ் ஆகிய மொழிகள் பழங்காலத்தில் பயன்படுத்தின. இஸ்லாமிய சமய ஒற்றுமை காரணமாகப் பலமொழிச் சமூகங்கள் அராபிக் எழுத்தைத் தங்கள் மொழிகளுக்கு உரிய எழுத்தாக ஏற்றுக் கொண்டன. துருக்கி, மலாய் போன்ற மொழிகள் அராபிக் எழுத்தைக் கையாண்டதற்கு இஸ்லாம் மதத்தாக்கமே காரணம். இதே காரணத்தினால் தான் ருமேனியன், ரோமன் எழுத்தைத் தழுவியது. இங்கு கிறிஸ்துவச் சமயம் செல்வாக்கு பெற்றதே காரணம். அரசியல் அல்லது தேசிய நிலையே சிரிலிக் எழுத்தை மத்திய ஆசியாவில் உள்ள பல டர்க்கிக் மொழிகள் ஏற்றுக் கொள்வதற்குக் காரணமாயிருந்தது. ரோமன் எழுத்துகளைப் பல மொழிகள் ஏற்றுக் கொள்ள அரசியல், சமயம், கலாச்சாரம் போன்ற தொடர்புகள் காரணமாக அமைந்தன. பிராமி எழுத்து களைத் திராவிட மொழிகள் ஏற்றதற்கும் கலாச்சாரத் தொடர்பே காரணமாகும். இந்த நிகழ்ச்சிகளின் முடிவுமட்டும் நமக்குத் தெரிகிறதே தவிர, அப்பொழுது இரண்டு சமூகத்துக்கும் இருந்த் உறவு என்ன? எழுத்தை யார் புகுத்தினார்கள்? எப்படி மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது? எப்படி நாடு முழுவதும் பரவியது? யார் பரப்பினார்கள்? போன்ற கேள்விகளுக்குச் சரியான விடை கிடைக்கவில்லை; இன்னும் இந்த நோக்கில் எழுத்தாக்கம் ஆராயப்படவில்லை.

சில மொழிச் சமூகத்தில் அண்மைக் காலத்தில் எழுத்தாக்கம் ஏற்பட்டபோது, அந்த மொழிச் சமூகத்தின் மொழியுணர்வைப் பற்றிக் காணப்படும் குறிப்புகள் சில பொது உண்மைகளைப் புலப்படுத்துகின்றன.

2.3.3. ஒத்தோமி

நைடா என்ற மொழியியல் அறிஞர் ஒத்தோமி (Otomi) குவச்சுவா (Quechua) என்ற மொழிபேசும் மக்கள் தங்கள் மொழிக்குரிய எழுத்துகள், தங்கள் நாட்டின் ஆட்சிமொழியாக இருக்கும் ஸ்பானிஷ் மொழியைப் போன்ற வரிவடிவமும், சொல் லெழுத்தும் பெற்றிருக்க வேண்டுமென்று விரும்பியதற்குக்காரணம் அவர்களுடைய கலாச்சாரம் பாதுகாப்பு இல்லாமல் தவிப்பதே என்று குறிப்பிட்டுள்ளார்.[5]

சந்தால் என்ற பழங்குடி மக்கள் வங்காளம், ஒரிசா, பீஹார் ஆகிய மாநிலங்களில் வாழ்கிறார்கள். அவர்களில் கிறிஸ்தவர் களும் உண்டு. சமயம், வாழும் இடங்கள் ஆகியவற்றை ஒட்டிச் சந்தாலி மொழி, ரோமன், தேவநாகரி, ஒரியா ஆகிய மொழி களின் எழுத்துகளால் எழுதப்பட்டு வருகிறது (Roy Burman, 1969:254). இந்தச் செய்திகள் பிறமொழித்தொடர்பு ஏற்படும் பொழுது அந்தமொழி சிறப்புடையதாக இருந்தால், அதன் எழுத்துகளைத் தங்கள் மொழிக்குப் பயன்படுத்துகிற முறையைக் காட்டுகின்றன.

2.3.4. ஆர்மேனியன்

சில மொழிச் சமுகங்கள் இன்னொரு மொழியோடு தொடர்பு கொள்ளும்போது அந்த வரிவடிவை அப்படியே தழுவிக் கொள்ளாது புதிதாக இருக்கும்படித் திருத்தி அமைத்துக் கொண்டதும் உண்டு.

கி.பி. 5ஆம் நூற்றாண்டில் புனிதர் மெஸ்ராப் (St. Mesrop) என்பார் ஆர்மேனிய மொழிக்கு எழுத்துருவம் அமைக்க முற்பட்ட

5: Both Otomi and Quechua suffer from cultural insecurity and want their writing systems not only to look like Spanish but also to operate with grapheme alternances as does Spanish whether they are needed or not in terms of their own phonemic System,

Nida (1953) as quoted in Fishman, 1977: Xii

போது, அண்டை நாடுகளின் மொழிகளாகிய கிரேக்கம், சிரியாக் ஆகியவற்றின் எழுத்துகளிலிருந்து மாறுபட்டு இருக்கும்படிப் பார்த்துக் கொண்டார். இதன் மூலம் ஆர்மேனிய மக்கள் தங்களுடைய மொழிக்குரிய வரிவடிவம் தனித்தன்மையானது என்று எண்ணும்படிச்செய்தார் (Ferguson, 1968:260). சில சமயங்களில் எப்படி மாற்றியமைத்தாலும், எந்தமொழி மூலமாக அமைந்தது என்பது வேறுவழிகளால் புலனாகிவிடும். உதாரண மாக, பதினான்காம் நூற்றாண்டில் புனிதர் ஸ்டீபன் (St. Stephan) என்பார் 'கோமி' மொழிக்குச் செய்த எழுத்தாக்கத்தில் கிரேக்கமொழி வரிவடிவத்திலிருந்து வித்தியாசப்படும்படி அமைத் தாலும், எழுத்து எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் கிரேக்க மொழியையே ஆதாரமாகக் கொண்டார் என்பது ஆய்வுகளால் புலனாகிவிட்டது.

2.3.5. கோமி

புனிதர் ஸ்டீபனுக்குக் கிரேக்கம், சர்ச்ஸ்லாவானிக் ஆகிய மொழிகள் தெரியும். அவர் கோமி மொழி பேசும் பகுதியில் பிறந்தவர். அங்கு பதினொன்றாம் நூற்றாண்டு ஆரம்பம் முதற்கொண்டே ரஷ்யர்கள் குடியேறியிருந்தார்கள். இவரும் பிறப்பாலும், பண்பாட்டாலும் ரஷ்யரே. இவர் மதபோதகர் ஆனதும் கிரேக்கம், சர்ச்ஸ்லாவாணிக் ஆகிய மொழிகளைக் கற்று கோமி மொழிப் பிரதேசத்திற்கு மதபோதகராக வந்தார். அப்போது கோமி மக்கள் தங்கள் பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் போற்றிப் பாதுகாப்பதில் ஆர்வம் உடையவர் களாய் இருப்பதையும், ரஷ்யர்கள் அரசியல், பொருளாதாரச் செல்வாக்கு பெற்றிருந்ததை வெறுப்பதையும் உணர்ந்து கொண்டார். இந்த நிலையில் சமய எதிர்ப்பு இருந்ததை மாற்றி அவர்களைக் கிறிஸ்தவர்களாக ஆக்கினார். ஆனால், அந்த மக்களின் ரஷ்ய வெறுப்பை ஆதரித்து கோமி மக்கள் பக்கம் இருந்தார்.

கோமி மொழியை அதிகம் பயன்படுத்தி, மொழி வளர்ச்சிக்குப் பாடுபட்டு, அம்மொழிக்கு எழுத்துருவம் கொடுக்க முன்வந்தார். இதனால் ஹங்கேரிய மொழியை அடுத்து கோமி மொழிதான்

எழுத்துமொழி உடையதாக ஆயிற்று. அதனால்தான் பிற ரஷ்ய மதபோதகர்களை விட இவர் தன்னுடைய தொழிலில் வெற்றி பெற்றார். பெரும்பாலான கோமி மக்கள் கிறிஸ்தவ சமயத்தில் ஆர்த்தோடாக்ஸ்சர்ச் (Orthodox Church) பிரிவில் சேர்ந்தார்கள். அந்தப் பிரிவினர் கிரேக்க மொழியைச் சமய மொழியாகப் போற்று பவர்கள். இவர் கோமி மொழிக்கு எழுத்துருவம் அமைத்தபோது மூன்று வழிகளைக் கையாண்டார்: 1) அபுர் என்று கோமி எழுத்துகளுக்குத் தனிப்பெயர் இட்டார். 2) கிரேக்கம், சர்ச்ஸ்லா வானிக் ஆகியவற்றின் எழுத்து வடிவத்திலிருந்து மாறுபட்டு இருக்கும்படிச் செய்தார். 3) கோமி மக்கள், பொருள்களின் அடையாளக் குறியீடுகளாகவும் அலங்காரச் சின்னமாகவும் கையாளும் குறிகளை ஒத்து இருக்கும்படிச் சில வடிவங்களை அமைத்தார்.[6]

ஆயினும், ஒலியனுக்கும், எழுத்துக்கும் உள்ள உறவு முறையை முழுமையாகப் போற்றாமல் கிரேக்க மொழிச் செல் வாக்குக்கு உட்பட்டுவிட்டார் என்பது எழுத்து எண்ணிக் கையிலிருந்து புலப்பட்டுவிடுகிறது.

கோமி மொழியில் இரண்டுவகை ஓகாரமும் இரண்டுவகை ஏகாரமும் ஒலியன்களாக அமைந்துள்ளன. ஆனால், கிரேக்க மொழியில் இரண்டுவகை ஓகாரமும் ஒருவகை எகரமும் ஒலியன் களாய் அமைந்தால் அந்த உயிர் ஒலியன்களுக்கு மூன்று தனி வடிவங்களே இருந்தன. இந்த நிலையில் கிரேக்க வரிவடிவங் களைக் 'கோமி' மொழிக்குத் தழுவிக் கொண்ட பொழுது அங்கு

---

6. Stephan invented an alphabet, called Abur, which was clearly based on his knowledge of Greek and Church Slavonic, but he deliberately made the forms of the letters sufficiently different from either so that the Komi could regard the writing system as distinctively theirs and not an alphabet used for another language. It even seems likely that he has some of the letters an appearance suggested of the Tamga signs in use among Komi as property markers and decorations.

Ferguson, 1968: 259

இரண்டுவகை ஒகரத்துக்கு இரண்டு எழுத்துகளும் இரண்டு வகை எகரத்துக்கு ஒருவகை வரிவடிவம் மட்டுமே அமைத்து விட்டார்.[7] எனவே வரிவடிவத்தில் தனித்தன்மையைக் காட்டினாலும், எழுத்து எண்ணிக்கையில் அந்த எழுத்து மொழிக்கு உரிய மூலத்தை அவரால் மறைக்க முடியவில்லை.

2.3.6. இந்தோனேஷிய மொழி

இன்னொரு மொழிக்குரிய வரிவடிவை ஏற்றுக் கொண்டாலும் மூலமொழியில் ஒரு வரிவடித்துக்குள்ள ஒலி மதிப்பையோ, ஒரு ஒலிக்குரிய வடிவத்தையோ கடனாண்ட மொழி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நியதி இல்லை. பாஷா இந்தோனேஷியாவில் ரோமன் எழுத்தைக் கையாண்டாலும், <c> என்ற எழுத்தை எப்போது /c/ என்ற ஒலியைக் குறிப்பதற்கு மட்டுமே பயன்படுத்து கிறார்கள். ஆனால், ஆங்கில மொழியில் அது சொல்லுக்கு முதலில் வரும்போது 'க' [k] என்ற ஒலி உடையது என்பதும் குறிப்பிடத் தகுந்தது. உதாரணமாக 'cat' என்பது [kaet] கேட் (பூனை) என்ற உச்சரிப்பு உடையது. இருந்தாலும் <c> என்ற எழுத்தை இந்தோனேஷியாவில் /ச/ என்றே உச்சரிக்கிறார்கள். இப்படி வரிவடிவத்துக்குக் கொடுக்கிற அல்லது கற்பிக்கிற ஒலி மதிப்பு மாறுபடுவதற்கும், சமூக பண்பாட்டுக் காரணிகளே துணை நிற்கின்றன.

2.3.7. அய்மாரா மொழி

பிரதேச மொழியாக வழங்கும் மொழிகள் தேசிய மொழியில் வழங்கும் எழுத்து மரபைப் பின்பற்றுவதும் உண்டு. அதாவது, பிரதேச மொழியின் அமைப்புக்கு மாறுபட்டிருக்கும் போதும் தேசியமொழித் தாக்கத்தால் அதே மரபைக் கடைப்பிடிப்பதும் உண்டு. உதாரணமாக, தென் அமெரிக்காவில் உள்ள பொலி

---

7 St. Stephan provided two letters for the phonemically distinct O's of Komi but failed to do so for the E's and this reflects the existence of two O's in the Greek alphabet and only one E.

Fergnson, 1968: 260

வியாவில் பேசப்படும் அய்மாரா மொழியில் ஒகரம் உகரத்தின் மாற்றொலியாகவும் எகரம் இகரத்தின் மாற்றொலியாகவும் அமைந்துள்ளன. ஆனால், தேசியமொழியான ஸ்பானிஷில் எ, ஒ, இ, உ ஆகிய நான்குமே ஒலியன்கள். எனவே அதைப் பார்த்து அய்மாரா மக்களும் உகரத்துக்கு மாற்றொலியாக ஒகரம் இருந்தாலும் உகரத்துக்கும் ஒகரத்துக்கும் வேறு வேறான எழுத்தை அமைத்துக் கொண்டுவிட்டார்கள் (Sjoberg, 1966;268).

2.3.8. ஸப்பொட்டாக் மொழி

சில மொழிச் சமூகங்கள் பிற மொழியின் வரிவடிவை ஏற்றாலும், வடிவுக்கு ஒலிமதிப்புக் கொடுப்பதில் தனித்தன்மை உடையதாக இருக்கும்படி விரும்புவார்கள். உதாரணமாக, மெக்ஸிகோவில் இருக்கும் ஸப்பொட்டாக் (Zapotec) மொழியில் ரோமன் எழுத்து சிலவற்றிற்கு புதிய ஒலி மதிப்புக் கொடுத்ததன் மூலம், ஸ்பானிஷ் எழுத்து மரபிலிருந்து வேறுபடுத்திக் கொண்டுள்ளார்கள். /ž/ என்ற ஒலியனை <x> என்ற எழுத்தாலும், /š/ என்பதை <xh> என்றும் /j/ என்பதை <dx> என்றும் எழுதுகிறார்கள். இதன் மூலம் தேசிய மொழியிலிருந்து மாறுபட்டுத் தங்கள் கலாச்சாரத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தைப் புலப்படுத்துகிறார்கள் (Sjoberg, 1966:269).

2.3.9. நகுவாத்ல்

பழையநாகரிகம் ஒன்றின் வாரிசாகக் கருதப்படும் சில மொழிகள் இன்று எழுத்துமொழி பெற்றிருக்காவிட்டாலும் அந்த எழுத்துமொழியில் காணப்படும் மரபுகளை இன்று தங்களின் மொழிக்குரிய எழுத்திலும் பின்பற்ற வேண்டும் என்று நினைப்பது உண்டு.[8] மெக்ஸிகோவில் அஸ்டெக் (Aztec)

---

8 Regional or local factors affecting orthographics is the survival of earlier writing system among peoples who, though functionally preliterate today were at one time influenced by civilizations that have since receded. The writing systems of the latter still carry a high degree of prestige and may even be used by a few persons.

Sjoberg, 1966: 269

நாகரிகத்தின் வழித்தோன்றலாகக் கருதும்நகுவாத்ல் (Nahuatl) மக்கள் /š/ என்ற ஒலியைக் குறிக்க <x> என்று எழுதும் பழைய முறையைத் தொடரவே விரும்பு கிறார்கள்.

2.3.10. சாம்

தென் வியட்நாமில் இருக்கும் சாம் (Cham) மக்கள் இந்திய எழுத்துகளிலிருந்து தோன்றிய பழைய சாம் எழுத்தில் காணப் படும் சில மரபுகளைப் புதுப்பிக்க விரும்புகிறார்கள். இது அச்சு கும் படிப்பதற்கும் கடினமாக இருந்தும், பழைய எழுத்து மரபில் எழுதிய புத்தகங்களை ஆரம்ப பள்ளிகளில் பயன்படுத்த வேண்டும் என்று ஆர்வம் காட்டுகிறார்கள். அதனால், கல்வியில் ஊக்கம் ஏற்படவும், எழுதப் படிக்க மக்கள் ஆர்வம் கொள்ளவும் ரோமன் எழுத்திலும் பழைய எழுத்திலும் ஆரம்ப பள்ளி நூல்கள் எழுதப் படுகின்றன(Sjoberg, 1966;269).

இந்தியாவில் பல பிரதேசமொழிகள் பிற்காலத்தில்தான் எழுத்தாக்கம் பெற்றதென்றாலும், அவை வடமொழியின் வாரிசு கள் எனக் கருதி, அதை ஒட்டியே எழுத்து அமைக்கப்பட வேண்டும் என்று விரும்பி, வடமொழி எழுத்து மரபைப் பின்பற்றி யிருப்பதும், மேலே குறிப்பிட்ட காரணத்தினாலேயே ஆகும்.

2.4. எழுத்து எண்ணிக்கை

ஒரு மொழிக்குரிய எழுத்தின் எண்ணிக்கையை நிர்ணயிப் பதற்கு அந்தமொழியின் ஒலியன் பற்றிய அறிவு தேவை. அதாவது, அந்த மொழியில் வரும் ஒலிகளில் வேற்றுநிலை வழக்கில் வரக்கூடியவற்றையும், ஒலியமைப்பின் ஒழுங்கையும் அறிந்து ஒலியனின் எண்ணிக்கையை முடிவுசெய்ய வேண்டும். எனவேதான் எழுத்தாக்கத்திற்கு அடிப்படையாக ஒலியனியல் (Phonology) பற்றிய அறிவு வேண்டும் என்று கருதப்படுகிறது. இதுவே மொழியியலோடு நேரடித் தொடர்புடையது.

ஒலியனியல் கோட்பாடு இந்த நூற்றாண்டில்தான் தெளிவு பட்டது. என்றாலும், மொழிகளுக்கு எழுத்துருவம் கொடுத்த

பலர் அந்தக் கோட்பாட்டை உள்ளூர உணர்ந்தே எழுத்து எண்ணிக்கையை வரையறுத்துள்ளார்கள் என்று மொழியியலாரும் கருதுகிறார்கள். அதாவது மொழியியல் வளர்ச்சியால் ஒலியனியல் கோட்பாடு இப்பொழுது தோன்றினாலும், அது பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அறிஞர் பெருமக்களால் உணரப்பட்டதுதான். இந்த உண்மையைத் தமிழ்மொழிக்கு எழுத்தாக்கம் செய்தவர்கள் உணர்ந்திருந்தார்கள் என்று டேனியல் ஜோன்ஸ் பாராட்டியுள்ளார்.[9] இது பழைய காலத்தில் எழுத்து மொழியுள்ள வேறுபல மொழிக்கும் பொருந்தும். ஆகையால், ஒருமொழியில் ஒலியனுக்கும் எழுத்துக்கும் வித்தியாசம் இருக்கிறது என்றால், அது ஒலியனியல் கோட்பாட்டை அறிந்துகொள்ளாதது காரணம் ஆகாது என்று ஊகிக்க வேண்டியுள்ளது.

2.4.1. இந்தோனேஷியா

ஒரு மொழியின் எழுத்து எண்ணிக்கை அதன் ஒலியன் அமைப்பை மட்டும் பொறுத்து அமையாது, பிறதுறைகளின் செல்வாக்கையும் ஒட்டியே அமைகிறது. அவற்றில் முக்கியமானது அந்த மொழித் தேர்ந்தெடுக்கும் மூல மொழியில் உள்ள வரிவடிவங்

---

9 It is noteworthy that Tamil orthography does not make any difference between all these (i.e. voiced stops, fricatives and voiceless stops) sounds. Those who originally invented orthography must have had a clear conception of the phoneme idea, though the theory had never been formulated.
Jones, 1976:23

ஆனால் இன்றைய தமிழ்மொழி ஆராய்ச்சியாளர்களும், திராவிடமொழி ஆராய்ச்சியாளர்களும், வல்லெழுத்தில் காணப்படும் இந்த மாற்றம் பழைய காலத்தில் இருந்திருக்க முடியாது என்றே கருதுகிறார்கள் (உ.ம். Subrahmanyam, 1982) எனவே இந்தக் கருத்தை வரலாற்று உண்மையாகக் கருதமுடியாது.

Tamil has atleast some indirect evidence for the absence of the voiced allophones at its earlier stage, Subrahmanyam, 1982:169

களின் எண்ணிக்கை ஆகும்.[10] மேலே கோமி மொழியில் இரண்டு வித எகர ஒலியன் இருந்தும் ஒரே எழுத்தே அமைக்கப்பட்டதற்கு மூலமொழியான கிரேக்க மொழியின் செல்வாக்கே காரணம் என்றும் குறிப்பிட்டோம். பாஷா இந்தோனேஷியாவில் /e/, /ə/ என்ற இரண்டு ஒலியனும் <e> என்றே எழுதப்படுகிறது. ரோமன் எழுத்தைக் கடனாண்டபோது, அதாவது இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் /ə/ என்பதை <e> மீது அழுத்தக்குறி (Accent mark) இட்டு <è> என்று எழுதினார்கள். இருந்தும் இப்பொழுது <e> என்று எழுதிவருகிறார்கள். ரோமன் எழுத்தைப் பயன்படுத்தும் பிறமொழிச் சமூகங்களோடு ஒற்றுமையாகவும், தட்டச்சு போன்றவற்றிற்கு எளிமையாகவும் இருக்கவேண்டும் என்ற எண்ணமே அதற்குக் காரணம் (Harimurti Kridalakshna, 1968).

சில மொழிகளில் சில ஒலிகள் ஒலியனாக அமைந்தும் தனி வரிவடிவம் பெறாததற்கு மூலமொழியில் (வரிவடிவத்தைத் தழுவும் மொழியில்) தனி வரிவடிவம் இல்லாமையே காரணம்.

சில சமயத்தில் மூல மொழியில் வரிவடிவம் இல்லாத ஒலியன் களைக் குறிப்பதற்கு இரண்டு எழுத்துகளைச் சேர்த்தும், ஒலி ஒற்றுமையுடைய எழுத்தில் சில குறியீடுகளைச் சேர்த்தும் புதிய ஒலியன்களைக் குறிக்க வரிவடிவம் அமைப்பதுண்டு. இந்தோனேஷிய மொழியில் /ங்/ என்ற ஒலியனைக் குறிக்க <ng> என்ற கூட்டெழுத்தும், /ஞ்/ என்ற ஒலியனைக் குறிக்க <ny> என்றகூட்டெழுத்தும் பயன்படுத்தப்படுகிறது (Shanmugam 1979:18). மெக்ஸிகோவில் உள்ள தராங்கன் மொழியிலும் கூட்டெழுத்துக்களாலே புதிய ஒலியன்களுக்கு வடிவம் அமைத்துள்ளார்கள். (Sjöberg, 1966:266). வியட்நாமிஸ் மொழியில் ஆறுவகைப்பட்ட குரல் அழுத்தம் (tones) தனித்தனி ஒலியன் களாக அமைந்துள்ளன. அவைகளைக் குறியீடுகள் மூலமே குறிப்பிடுகிறார்கள் (DeFrancis, 1977). ஆப்ரிக்காவில் சஹாராவுக்குத்

---

10 The chief limitation on the phonemic principle in the later alphabet invention has been the orthographic conventions of the source alphabet.

Ferguson, 1968:260

தென்பகுதியில் உள்ள மொழிகளில், சில சிறப்புக் குறிகளைக் கொண்டே அந்தந்த மொழியில் உள்ள சிறப்பு ஒலியன்களை எழுத்தாக்கம் செய்துள்ளார்கள்.

2.4.2. தமிழ்

தமிழ்மொழி எழுத்துகள் அசோகன் பிராமியிலிருந்து தழுவப் பட்டன என்பதை வரலாற்று அறிஞர் பெரும்பாலோரும் ஒத்துக் கொள்கிறார்கள். அந்தத் தழுவலில் தமிழ் கல்வெட்டுகளைப் பொறுத்த வரையில் பின்வரும் மாற்றங்கள் காணப்படுகின்றன. 1) ஏகாரத்துக்கு உள்ளே புள்ளியிட்டு எகரத்தைக் குறித் துள்ளார்கள். 2) ஆகாரத்தைக் குறிப்பிட அகரத்தின் நடுவே ஒரு சிறு கோடு வரைந்துள்ளார்கள்.

இந்த இரண்டிலும் குறியீட்டின் மூலம் புதிய ஒலியன்களைக் குறிப்பிட்டுள்ளார்கள், ஆனால், ஓகாரத்திற்கு ஒகரத்திலிருந்து வரிவடிவில் வித்தியாசம் செய்யவில்லை. 3) ள, ன ஆகிய இரண்டு ஒலியன்களைக் குறிக்க முறையே ல, ந என்ற பிராமி எழுத்துகளில் சிறு வளைவு கோடு சேர்த்துப் புதிய எழுத்துகளாக ஆக்கியுள்ளார்கள். 4) றகரம், என்பது தகரம், டகரம் சேர்த்து ஒரு வடிவமாக அமைக்கப்பட்டது என்று மீனாட்சி சுந்தரனாரும் (1965; 41), டகரத்தின் திருத்தப்பட்ட வடிவம் என்று மகாதேவனும் (1968; 80) கருதுகிறார்கள். ழகர வடிவை <dh> வடிவத்தின் திருந்திய வடிவமாக மகாதேவன் (1968:80) கருதுகிறார். எனவே, ள, ன, ற ஆகிய மூன்றுக்கும் ஒலி ஒற்றுமையுடைய மற்ற வடிவத்தில் சிறிய திருத்தம் செய்து, புதிய எழுத்துகளைப் படைத்துக் கொண்டார்கள் என்றும், ழகரத்தைப் பொறுத்த வரையில் தமிழுக்குத் தேவையில்லாத எழுத்தைக் கொண்டு, தேவையான ஒலியைக் குறிக்கப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்றும் கொள்ளலாம். 5) அகர உயிர்மெய்யையும் தனிமெய்யையும் வேறுபடுத்திக் காட்டவில்லை.

தொல்காப்பியர் கூறும் எழுத்துமுறையிலிருந்து அவர் கால வரிவடிவு பற்றிய சில உண்மைகள் புலனாகின்றன.

1. அகர உயிர்மெய்யும், தனிமெய்யும் வரிவடிவில் வேறு படுத்திக் காட்டப்பட்டன; அதாவது தனிமெய் புள்ளி வைத்து எழுதப்பட்டது.

2. எகரமும் ஒகரமும் அதன் இணையான நெடில்களின் மேலே புள்ளி வைத்து எழுதி வேறுபடுத்தப்பட்டன.

பிராமித்தமிழ்க் கல்வெட்டுக்களில் பிற்காலத்தில் புள்ளி வைக்கும் பழக்கம் காணப்படுவதாக மகாதேவனும் (**Mahadevan**, 1968), நாகசாமியும் (1972: 15, 23) கருதுகிறார்கள். என்னும் அந்தப் பழக்கம் ஏன் செம்மையாகக் கடைப்பிடிக்கப்படவில்லை என்பதற்குச் சரியான விளக்கம் தரப்படவில்லை. ஆயினும், கல்லில் எழுதும்போது-செதுக்கும்போது, புள்ளியிடுவது கடினமாகையால் அந்தமுறை மேற்கொள்ளப் படவில்லை என்ற விளக்கம் பொதுவாகத் தரப்படுகிறது. அப்படியானால், தொல்காப்பியர் தன்னுடைய கால நிலையைச் சுட்டாமல், இப்படி இருந்தால் தமிழ் எழுத்து நன்றாக இருக்கும் என்ற லட்சியமுறையைக் குறிப்பிடுகிறாரா? அல்லது தமிழில் வேறு எழுத்துமுறை இருந்தது என்பதைச் சுட்டுகிறாரா? என்று ஆராயவேண்டும். வேறு எழுத்துமுறை என்பது மாறுபட்ட வரிவடிவமாகவோ, மாறுபட்ட எழுதும் முறையாகவோ இருக்கலாம். சித்திரம் வரைவது போலச் செம்பஞ்சுக் குழம்பு தோய்த்து மடல்கள் எழுதும்முறை பற்றிச் சிலப்பதிகாரத்தில் மாதவி எழுதிய கடிதத்தால் அறியலாம் (சண்முகம், ச. 1978:82). எனவே, இப்படிப்பட்ட முறையைக் குறிப்பிடுகிறாரா? என்பதும் ஆராயத்தகுந்தது.

2.4.3. குறைப்பும் சேர்க்கையும்

மூலமொழியில் சிறப்பாக அமைந்திருக்கின்ற ஒலிகளுக்குரிய எழுத்துக்களைக் கடனாண்ட மொழி எப்படிப் பயன்படுத்துகிறது என்றும் பார்க்கவேண்டும். வேண்டாத எழுத்துகளை விலக்கி விட்டு, வேண்டிய எழுத்துகளை மட்டும் ஏற்றுக்கொள்வது இயல்பான ஒன்று. தமிழ்மொழி அப்படித்தான் ஒலிப்புடைய வல்லொலிகளையும் வெடிப்பொலிகளையும் குறிக்கும் எழுத்துகளை அறவே நீக்கிவிட்டது. வியட்நாமிஸ் ரோமன் எழுத்துகளில்

24 எழுத்துகளையே ஏற்றுக்கொண்டுள்ளது. இந்தோனேஷிய மொழி, Q,X என்ற எழுத்துகளைக் கணிதம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் பயன்படும் என்று கருதி 26 எழுத்துக்களையும் ஏற்றுக் கொண்டுவிட்டது. மொழியமைப்பு மட்டுமன்றி மொழியின் தொழிற்பாடுகளையும் மனதில் கொண்டே மொழியியல் நோக்கில், தேவைக்கு அதிகமான எழுத்துகளையும், மூலமொழியில் உள்ள எழுத்துகளையும் - பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

மத்திய ஆசியாவில் இருக்கும் டர்கிக் மொழிகள் சோவியத் யூனியனைச் சேர்ந்த மொழிகளாகையால், சிரிலிக் எழுத்துகள் எல்லாவற்றையுமே ஏற்றுக்கொண்டன. ஏனெனில் ரஷ்ய மொழியைக் கற்றுக் கொள்வதற்கு எளிதாக இருக்கவும், ரஷ்ய மொழிச்சொற்களைத் தழுவிக் கொள்வதற்கு வசதியாக இருக்கவும் சிரிலிக் எழுத்தாக்கம் பயன்படும் என்பதே ஆகும். டர்க்மென் மொழியில் சிறப்பாக வழங்கும் மூன்று ஒலிகளுக்குரிய வடிவங்களைச் சேர்க்கவேண்டும் என்று ஆலோசனை சொன்னபோது, புதிய எழுத்துகளைச் சேர்ப்பதால் மாணவர்கள் சொல்லெழுத்தில் செய்யும் பிழைகள் அதிகரிக்கும் என்ற சமாதானம் கூறப்பட்டது. அதே சமயத்தில் டர்க்மென் மொழிக்குத் தேவையில்லாத ஏழு எழுத்துகளை நீக்கிவிட வேண்டும் எனச் சிலர் கருத்து தெரிவித்த போது எழுத்து எண்ணிக்கையைக் கூட்டினாலோ குறைத்தாலோ சொல்லெழுத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுவிடும் என்று கூறி மறுக்கப்பட்டது.[11] இது, மொழியில் திட்டமிட்ட வளர்ச்சி

---

11 One of the participants proposed that three new letters be added to the cyrilic alphabet as now used for the Turkman language. His suggestion was turned down because this change in Turkmen Spelling would not be justified in practice because the number of errors made by students in writting would increase to a marked degree. On the other hand another participant proposed that seven letters—all required to write Russian words but not necessary to represent Turkmen be dropped from the Turkmen alphabet. This proposal was rejected because increasing or decreasing the number of letters in the alphabet would......unavoidably lead to a significant change in Turkmen spelling;

Henze, P.B. 1977:387.

மத்திய அரசின் ஆதரவில் நடக்கும்போது, மாநிலமொழிகள் தங்களின் மொழியின் அமைப்புக்கு ஏற்ப எழுத்து எண்ணிக்கையை அமைத்துக்கொள்ளாத நிலையைச் சுட்டுகிறது. எழுத்து எண்ணிக்கை அரசியல் சூழ்நிலையை ஒட்டி அமைந்து விடுவதையும் இது புலப்படுத்துகிறது.

2.5. சொல்லெழுத்து நிர்ணயம்

சொல்லெழுத்தை நிர்ணயிக்கும் போது தனிச் சொல்லின் வடிவங்களை எப்படி எழுதுவது என்றும், சொல்லெழுத்தை எந்த பேச்சுமொழியின் அடிப்படையாகக் கொள்வது என்றும் தீர்மானிப்பது முக்கியமாகும். முன்னதைச் சொல்லெழுத்து அமைப்பு முறை என்றும், பின்னதை நிலைமொழித் தேர்வு என்றும் குறிப்பிடலாம்.

2.5.1. சொல்லெழுத்து அமைப்பு

பேச்சுமொழியில் ஒருசொல் அல்லது உருபன் ஒரு வடிவத்துடனோ பல வடிவங்களுடனோ அமையலாம். ஒருசொல் பலவடிவங்களுடன் அமையும் போது அச்சொல்லை எப்படி எழுதுவது என்று மொழியியல் நோக்கில் முடிவு செய்வது ஒரு வகை. பிறமொழிச் சொற்களை சிறப்பாக கடனாளப்பட்ட தேசியமொழிச் சொற்களை எப்படி எழுதுவது என்று மக்களின் மனநிலைக்கு ஏற்ப முடிவு செய்வது மற்றொரு முறை.

மொழியியல் நோக்கில் மாற்றுவடிவங்களை உடைய ஒரு சொல்லை இரண்டு விதமாக எழுதலாம். ஒன்று மாற்று வடிவங்களை அப்படியே எழுதுவது. இதற்கு ஒலியன் சொல்லெழுத்து (Phonemic Spelling) என்று பெயர். தமிழில் படம் படங்(கள்) படத்(தை) படக்(கடை) போன்ற உச்சரிப்பை ஒட்டி ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொருவிதமாக எழுதுவதுதான்ஒலியன் எழுத்துமுறை. அதுபோலவே பத்து, பதின், பன் (னிரண்டு), பது போன்று எழுதுவதும் நீ, உன் என்று எழுதுவதும் ஒலியன் சொல்லெழுத்துமுறைதான். இரண்டு: சொல்லின் உச்சரிப்பு வேறுபட்டாலும் ஒரே மாதிரியாக எழுதுவது மற்றொருமுறை. இதற்கு உருபொலியன் சொல்லெழுத்து (Morphophonemic Spelling)

என்று பெயர். தமிழில் தலை, தலைமை/[தல(மய்)], தலையில் /தல(யில்)/ என்று உச்சரிப்பு வேறுபடும்போதும் (தலய்,தல) ஒரே விதமாக (தலை) எழுதுவது உருபொலியன் சொல்லெழுத்து ஆகும். ஆங்கிலத்தில் <educate> /எஜீகேட்/, <education> /எஜீகேஷன்/ என்று உச்சரிப்பு மாறுபடும் போது (இறுதியில் உள்ள t என்பது ஷ் ஆக மாறுகிறது) ஒரேவித சொல்லெழுத்தால் எழுதப்படுவதால், அது உருபொலியன் சொல்லெழுத்தில் அடங்கும்.

தமிழில் ஒலியன் சொல்லெழுத்து உடைய சொற்கள் மிகுதியாகவும் உருபொலியன் சொல்லெழுத்து உடைய சொற்கள் குறைவாகவும் இருக்கின்றன. ஒலியன் சொல்லெழுத்து மிகுதியாக இருப்பதால்தான் சந்தி அல்லது புணர்ச்சி விதி அதிகமாகத் தமிழில் உள்ளது.

மக்களின் மனநிலையை ஒட்டியோ, அமைப்போரின் நோக்கை ஒட்டியோ, கடனாளப்பட்ட சொற்களின் வடிவம் அமைக்கப் பெறும். இங்குக் கடனாளும் மொழியில் வழங்கும் உச்சரிப்பை ஒட்டி அமைவதா? அல்லது கடன்கொடுத்த மொழியின் சொல்லெழுத்துப்படி அமைப்பதா? என்பதே பிரச்சனை. இடைக்கால எழுத்து மொழியில் பெரும்பாலும் மூலமொழியில் உள்ள சொல்லெழுத்தையே தழுவிக் கொள்வார்கள். அதனால், ஒலியனுக்கும் எழுத்துக்குமுள்ள உறவு பாதிக்கும்—அதாவது, புதிய உறவு உண்டாகிவிடும். இந்தோனேஷிய மொழியில் டெலிவிஷன் <Television> என்ற ஆங்கிலச் சொல்லை டெலிவிஸி [telivisi] என்று உச்சரித்தாலும் எழுதும் போது ஆங்கிலத்தை ஒட்டி <televisi> என்று எழுதுகிறார்கள். இதற்கு வேர்ச்சொல் சொல்லெழுத்து (etymological spelling) என்று பெயர். அதனால், இந்தோனேஷியமொழியில் <e> என்ற எழுத்துக்கு [e], [*i*] என்ற இரு உச்சரிப்பு உண்டாகிவிட்டது. இப்படிப்பட்ட சொல்லெழுத்து இருமொழியாளர்களுக்குச் சிறப்பாக ஆங்கிலமும் தாய்மொழியும் தெரிந்தவர்களுக்குச்—சிரமமாக இருக்காது. ஆனால், தாய்மொழி மட்டும் தெரிந்தவர்களுக்குக் கொஞ்சம் தொல்லை தருவதாக அமையும்.

ஆங்கில மொழியில் வேர்ச்சொல் சொல்லெழுத்து மிகுந்திருப்பதே அதன் சொல்லெழுத்து சிக்கலுடையதாகத் தோன்றுவதற்குக் காரணம்.

வேர்ச்சொல் அடிப்படையில் உச்சரிப்புக்கேற்ப எழுதுவதாக இருந்தால், மேலே சொன்ன இரண்டில் ஒன்றைப் பின்பற்ற வேண்டும். இது தாய்மொழி மட்டும் தெரிந்தவர்களுக்கு எளிதாக இருக்கும்.

ஒலியன் சொல்லெழுத்துமுறை, உருபொலியன் சொல்லெழுத்துமுறை ஆகிய இரண்டில் எது நல்லது என்று முடிவுசெய்ய மொழியியல் உதவி செய்யாது. இன்று உளமொழியியலின் **(Psycholinguistics)** ஒரு பிரிவாகிய வாசிப்புக் கொள்கையே **(Theory of reading)** உதவும். வேகமாக வாசிப்பதற்கு உதவியாக இருக்கும் சொல்லெழுத்து முறை பற்றி உளமொழியியலாளர் ஓரளவு துணை செய்யக்கூடும். பொதுவாக உருபொலியன் சொல்லெழுத்து வாசிப்பதற்குச் சுலபமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.[12]

2.5.2. நிலைமொழித் தேர்வு

ஒருமொழி ஒரு குறிப்பிட்ட பகுதியில், ஒரு குறிப்பிட்ட மக்களால் மட்டும் பேசப்படுவதில்லை. ஓரளவு பரந்துபட்ட பகுதியில், பலதரப்பட்ட மக்களால்—(தொழிலாளிகள், கற்றோர், கல்லாதவர் போன்றவர்களால்) பேசப்படுவது. எனவே, ஒவ்வொரு மொழியிலும் பிரதேசக் கிளைமொழியும் **(Regional dialect)**, சமூகக் கிளைமொழியும் **(Social dialect)** உடையதாகக் கருதப்படுகிறது. அப்படியானால், எந்தப் பிரதேச மக்களின், எந்த சமூக மக்களின் மொழியை ஒட்டி சொல்லெழுத்து முறை அமைக்க வேண்டும் என்பதுதான் நிலைமொழித் தேர்வு அகும்.

நிலைமொழியைத் தேர்ந்தெடுக்க மூன்று விதமான வழிகள் உண்டு, ஒன்று: அந்த மொழிபேசும் மக்கள் எந்தக்கிளைமொழியை

---

12. If anything a morphophonemic spelling facilitates reading better than the reverse.

Berry, 1977:12

உயர்வாக — சிறப்புடையதாகக் கருதுகிறார்கள் என்று அறிந்து. அந்தக் கிளைமொழியின் பேச்சை ஒட்டி அமைப்பது. இரண்டு: சொல்லெழுத்து அமைப்போருக்குத் தெரிந்த கிளைமொழியை ஒட்டியே அமைப்பது. மூன்று: பல கிளைமொழிகளுக்கும் பொது வான் ஒன்றைத் தேர்ந்தெடுப்பது; அதாவது, ஒவ்வொரு கிளை மொழிக்கும் சிறப்பாகக் கருதக்கூடிய கூறுகளை - மற்ற கிளை மொழியிலிருந்து வேறுபடுத்தும் கூறுகளைக் குறைத்து எல்லாக் கிளைமொழிகளுக்கும் பொதுவானவற்றைத் தேர்ந்தெடுப்பது. இவற்றிற்கெல்லாம் மேலாக மொழியின் தேசிய நிலையை ஒட்டிய மன உணர்வைப் பொறுத்தும் சொல்லெழுத்து அமைவதுண்டு.

ஒரு மொழியில் அந்தந்த தேசத் தலைநகரில் வாழும் கற்றோர் பேசும் மொழி அல்லது, கலாச்சாரச்சிறப்பு. வணிகச் சிறப்பு ஆகியன மலிந்த இடங்களில் வாழும் மக்களது மொழி பிற பகுதியினரால் உயர்ந்தாகக் கருதப்படலாம், இந்தக் கிளைமொழி யின் பேச்சு வழக்கை ஒட்டிச் சொல்லெழுத்து அமைவதே முதல் வகையில் அடங்கும். செனகலில் பேசப்படும் உலாஃப் மொழியில் சொல்லெழுத்துகள் இவ்வாறே அமைந்துள்ளன.

ஸ்டீபனால் அமைக்கப்பட்ட 'கோமி' மொழியின் சொல் லெழுத்துகள் இரண்டாவது வகையைப் பின்பற்றியது. மூன்றாவது வகைக்கு உதாரணம் ஆப்ரிக்க மொழிகளில் ஒன்றான இபோ (Ibo) மொழியின் சொல்லெழுத்து ஆகும்.

தேசிய உணர்வை ஒட்டி சொல்லெழுத்து அமைவதற்கு ஹவ்ஸா (Hausa) மொழியும் மத்திய ஆசியாவில் பேசப்படும் டர்கிக் மொழியும் உதாரணம். ஹவ்ஸா மொழி பேசும் மக்களில் ஒரு பகுதியினர் "ஆங்கில ஆட்சியிலும் மற்றொரு பகுதியினர் பிரெஞ்சு ஆட்சியிலும் இருந்தார்கள். ஆகவே, அவரவர்கள் தேசியமொழி அல்லது ஆட்சிமொழிகளை ஒட்டிச் சொல்லெழுத்து அமைத்துக் கொண்டார்கள்.[13] நைஜீரியா பகுதி ஆங்கிலேயர்

---

13. Another example — where language differences were heightened to express national differences was the establish ment of two different national spelnsigs for Hausa in order to emphasize national differences although no real linguistic needs would be served.

Rubin. J. 1977:172

ஆட்சிக்குள்ளும், நைஜிர் பகுதி பிரஞ்சுக்காரர் ஆட்சிக்குள்ளும் உட்பட்டிருந்ததன் பயனே இரண்டு விதமான சொல்லெழுத்துகள் அந்தமொழியில் தோன்றக்காரணமாக இருந்தது. மேலே குறிப்பிட்டது போல் ஒத்தோமி, குவச்சுவர் மொழி பேசும் மக்கள் தங்களின் ஆட்சி மொழியான ஸ்பானிஷைப் போன்று சொல்லெழுத்து அமையவேண்டும் என்று விரும்பியது இங்கு நினைவு கூரத்தகுந்தது.

சோவியத் யூனியனைச் சேர்ந்த மத்திய ஆசியாவில் உள்ள பல டர்கிக் மொழிகள் கிளைமொழி வேறுபாடு அதிகம் இல்லாதவை. லண்டன் இங்கிலீஷீக்கும், லங்காஷயர் இங்கிலீஷீக்கும் உள்ள வேறுபாடுதான் கஸாஹ் (Kazakh) மொழிக்கும் உஸ்பெக் மொழிக்கும் உள்ள வித்தியாசம். ஆயினும், மத்திய அரசின் ஆணையின் பேரில் வேறுபட்ட கிளைமொழிகள் நிலைமொழியாக ஆக்கப்பட்டு (Henze, 1977:411). சிரிலிக் எழுத்தைக் கையாண்ட போதும் ஒரே ஒலியைக் குறிக்க வேறுவேறு எழுத்துகள் பயன்படுத்தப்பட்டன.[14]

2.6. முடிவுரை

இதுவரைக் கூறியவற்றால் எழுத்தாக்கம் என்பது மொழியின் அமைப்பை ஒட்டி அமைவதாயினும்—அதாவது மொழியியலை ஒட்டியதே ஆயினும், வரிவடிவைத் தேர்ந்தெடுத்தல், எழுத்து எண்ணிக்கையை நிர்ணயித்தல், சொல்லெழுத்தை வரையறுத்தல் ஆகிய மூன்று பிரிவிலும் அரசியல் சூழல், சமூகக் கலாச்சார சூழல், மொழியின் தொழிற்பாடு, மொழியுணர்வு ஆகியனவும் பங்கு கொள்கின்றன என்பதை அறியலாம். சில சமயத்தில் மொழி அமைப்பே புறக்கணிக்கப்பட்டுப் பிறதுறைச் சூழலே வெற்றி பெறுகிறது என்றும், எழுத்தாக்கத்தில் பிற இயலின் பங்கையும் கண்டு கொள்ளலாம்.

---

14 In Russion Turkic orthographic representations of the same sound in different languages were deliberately written distinctly in order to counteract recognition of strong cultural affinities among Turkic peoples.

Ibid.

3. எழுத்துத் திருத்தம்

3.0. எழுத்துத் திருத்தம்

பலவேறு மொழிகளின் வரிவடிவ வரலாற்றைக் கவனித்தால், வரிவடிவத்தில் அவ்வப்பொழுது மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதைக் காணலாம். இதை எழுத்துத் திருத்தம் (Revision of writing) என்று பொதுவாக அழைக்கிறார்கள். எழுத்தாக்கத்தைப் போலவே எழுத்துத் திருத்தமும் ஒரு மொழிச் சமூகத்தின் அரசியல், சமூக, பண்பாட்டுச் சூழலை உணர்த்தும்படி அமையும்.

உலகமொழிகளின் எழுத்து வரலாற்றை நோக்கினால், 1) மொழிகள் ஒரு எழுத்தை — வரிவடிவத்தை விட்டு மற்றொரு வரிவடிவத்தை மேற்கொண்டுள்ளதையும், 2) இருக்கின்ற வரிவடிவத்தில் திருத்தம் செய்துகொண்டுள்ளதையும், 3) எழுத்து எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டுள்ளதையும், அல்லது குறைத்துக் கொண்டுள்ளதையும், 4) சொல்லெழுத்தில் மாற்றம் ஏற்படுத்திக் கொண்டுள்ளதையும் காணலாம். இவைகளை முறையே 1) வரிவடிவு மாற்றம், 2) வரிவடிவு திருத்தம், 3) எழுத்தின் எண்ணிக்கை மாற்றம், 4) சொல்லெழுத்து மாற்றம் என்று சுருக்கமாகக் குறிப்பிடலாம். இந்த நான்குமே எழுத்துத் திருத்தம் என்ற பெயரால் இங்கு அழைக்கப்படுகிறது. எழுத்துத் திருத்தம் என்னென்ன மொழிகளில் நடைபெற்றன என்று குறிப்பிட்டு, அதற்குரிய காரணங்களையும் சுட்டிக்காட்ட முயலுகிறது.

இந்தப்பகுதி. பல மொழிகளில் நடந்த எழுத்துத் திருத்தம் பற்றிய செய்திகள் முழுமையாகக் கிடைக்கவில்லை; என்னென்ன மொழிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன என்ற விவரம் கூட இன்னும் சரியாகத் தொகுக்கப்படவில்லை. இந்த நிலையில், கிடைத்த செய்திகளின் அடிப்படையில் மட்டுமே எழுத்துத் திருத்தத்தின் வகையையும் அதற்குரிய காரணத்தையும் பொதுமைப்படுத்த இங்கு முயற்சி செய்யப்பட்டுள்ளது.

எழுத்துமொழி கலாச்சாரத் தொடர்பைப் புலப்படுத்தக் கூடியது என்று மேலே பார்த்தோம். ஆயினும், அது ஒரு மொழிச் சமூகத்தின் மனநிலையையும் (attitudes), எழுத்து வடிவத்திற்கு அந்தச்சமூகத்தில் உள்ள இடம், அதாவது தொழிற்பாடு (function), மொழியின் தேசீய நிலை ஆகியவற்றையும் பொறுத்தே அதன் சிறப்பு அமைகிறது.

பொதுவாக ஒரு நிலைமொழி (standard language) நான்கு விதத் தொழிற்பாடு உடையதாக இருக்கும் எனக் கார்வின் (Garvin, 1959) குறிப்பிடுகிறார். அவையாவன. 1) ஒற்றுமைபடுத்தும் தொழிற்பாடு (Unifying function), 2) வேறுபடுத்தும் தொழிற்பாடு (Separatist function), 3) கவுரவ தொழிற்பாடு (Prestige function). 4) முன் மாதிரித் தொழிற்பாடு (Frame of reference function). இந்த நான்கிலும் எழுத்து மொழி முதல் இரண்டு தொழிற்பாட்டையும் சிறப்பாக உடையதாகக் காணப்படுகிறது. இன்னொரு மொழியின் எழுத்தோடு ஒப்புமையோ, வேற்றுமையோ உடையதாக அமையவேண்டும் என்று பிடிவாதம் கொள்ளும் மொழிச் சமூகத்தைக் கூட காணமுடிகிறது. அதையொட்டியும் எழுத்துத்திருத்தம் சில மொழிகளில் ஏற்பட்டுள்ளன. கவுரவ தொழிற்பாடு என்பதை எழுத்துத் திருத்தத்தை எதிர்த்து நிற்கும் உணர்வாகக் கொள்ளலாம். முன்மாதிரி தொழிற்பாடு எழுத்துமொழியில் இல்லை யென்றே கூற வேண்டும் ஆனாலும் சொல்லெழுத்தைப் பொறுத்தவரையில் பழங்கால இலக்கிய மொழியை ஒட்டிய சொல்லெழுத்தா அல்லது தற்காலப் பேச்சு மொழியை ஒட்டிய சொல்லெழுத்தா என்ற விவாதத்தில் ஓரளவு முன்மாதிரி தொழிற்பாட்டு உணர்வு இருக்கிறது என்றே தோன்றுகிறது. எது முக்கியத்துவம் பெறுகிறது என்பது அரசியல், சமூக, பண்பாட்டுச்சூழல்களே நிர்ணயிக்கின்றன.

மொழியின் தேசீயநிலை என்பதைப் பெருநிலையில் மூன்று வகையாகப் பிரித்துப் பேசலாம் 1) ஒரு தேசத்தின் தேசீய மொழியாக இருப்பது: இத்தாலியன், நார்வீஜியன் போன்றவை இந்தப் பிரிவில் அடங்கும். 2) ஒன்றுக்கு மேற்பட்ட தேசங்களின் தேசீய மொழியாக இருப்பது: இதைப் பன்னாட்டுத் தேசீயமொழி (Cross or Supernational language) என அழைக்கலாம். ஆங்கிலம், ஸ்பானிஷ், ஜெர்மன் ஆகிய மொழிகள் இந்தப் பிரிவைச் சேர்ந்தவை. 3) சிலமொழிகள் பிராந்தியமொழியாகவே விளங்கும். இங்கும் இருவேறு நிலைகளைக் காணமுடிகிறது. அ) ஒரு தேசத்தின் ஒரு பகுதியில் மட்டும் பிராந்திய மொழியாக வழங்குவது. மலையாளம், ஒரியா போன்றவை இந்தப் பிரிவில் அடங்கும். ஆ) சில மொழிகள் ஒரு தேசத்தின் பிராந்திய மொழியாக இருந்தாலும் ஒன்றுக்கு மேற்பட்ட தேசங்களில் அது தேசீயநிலையை அடைந்திருக்கும். இதற்கு தமிழ்மொழி சிறந்த ஒரு உதாரணமாகும். தமிழ்மொழி இந்திய தேசத்தின் ஒரு பிராந்திய மொழியாக இருந்தாலும், ஸ்ரீலங்கா, சிங்கப்பூர் ஆகியநாடுகளில் தேசீயமொழிகளில் ஒன்ருக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இப்படிப் பலவகைப்பட்ட மொழிகளின் தேசியநிலையும் எழுத்துத் திருத்தத்தின் போக்கை நிர்ணயிக்கக் கூடும்.

இனி, எழுத்துத் திருத்தத்தின் பல்வேறு கூறுகளிலும் எந்தெந்த மொழியில், ஏன் மாற்றம் ஏற்பட்டது? என்பதைப் பார்ப்போம்.

3.1. வரிவடிவ மாற்றம்

வரிவடிவ மாற்றம் மொழிச் சமூகத்தில் பெரிய அரசியல் மாற்றமும் பண்பாட்டு மாற்றமும் நடைபெற்றபோது ஏற்பட்டிருக்கிறது. வரிவடிவத்தின் மூலம் ஒரு நாட்டு மக்களிடையேயும், ஒரே சமயத்தைச் சேர்ந்த நாடுகளிடையேயும் ஒற்றுமை உணர்வு ஏற்பட்டிருப்பதைக் காணலாம். அதே சமயத்தில் சில தேசங்கள் அண்டை நாட்டோடு வேறுபாடு இருக்கவும் வரிவடித்தைத் திருத்திக் கொண்டுள்ளத்தையும் அறியமுடிகிறது.

3.1.1. தமிழ்

தமிழ்நாட்டில் பிற்காலச் சோழப் பேரரசு நிறுவப்பட்டு தென்னிந்தியா முழுமையும் ஒரு ஆட்சிக்குக் கீழ் வந்தது; பாண்டிய நாடும் சோழ அரசில் இணைந்தது. அதன் விளைவாகப்பாண்டிய நாட்டில் வழங்கி வந்த வட்டெழுத்து கைவிடப்பட்டுத் தமிழ்எழுத்து அல்லது கோலெழுத்து என்று பிறபகுதிகளில் சிறப்பாகச் சோழ நாட்டில் வழங்கி வந்த வடிவு புகுத்தப்பட்டது. இதைச் செய்தது முதல் ராஜராஜன் என்ற கருத்தும் நிலவுகிறது (Meenakshi sundaran, 1966:24). இந்த வடிவு மாற்றத்திற்குத் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் இரண்டு காரணங்களைக் குறிப்பிட்டுள்ளார்[1]. 1) வட்டெழுத்து படிப்பதற்குக் கடினமானவை, 2) ராஜராஜன் தன்னுடைய சாம்ராஜ்யத்தில் தமிழ்ப்பகுதி முழுமையும் எழுத்து ஒற்றுமை ஏற்படப் புகுத்தியிருக்கலாம்.இங்கு இன்னொரு காரணமும் இருக்கலாமா? என்றும் தோன்றுகிறது. சோழ அரசர்கள் அடிக்கடி பாண்டிய மன்னர்களுடனும், கேரள அரசர்களுடனும் போரிட்டுக் கொண்டிருந்தார்கள். வட்டெழுத்து பாண்டி நாட்டிலும், கேரளாவிலும் பயன்படுத்தப்பட்டு வந்தது. எனவே அந்தப் பண்பாட்டு ஒற்றுமையைக் குலைக்கும் வகையிலும், அதே நேரத்தில் தமிழ்நாட்டின் பிறபகுதியோடு ஒற்றுமை ஏற்படும் வகையிலும் கோல் எழுத்து புகுத்தப்பட்டிருக்குமா? என்றும் சிந்தித்துப் பார்க்கலாம்.

3.1.2 மலையாளம்

பிற்காலத்தில் கேரள மன்னர்களும் வட்டெழுத்தைக் கைவிட்டு 'ஆர்ய எழுத்து' என்ற இன்றைய மலையாள எழுத்தின், முன்னோடி எழுத்தை மேற்கொண்டார்கள். பழைய மலையாளம்

---

1 'It was because of the difficulty of reading the cursory style and also because bringing about the unity in hemisphire through inscriptions written in a common script that the Chola emperor Rajaraja the Great, displaced the *valleluttu* by *ko:l eluttu* even in the *Pa:ndya* country'

Meenakshisundaran, 1966:24.

தமிழில் ஒரு கிளைமொழி போல மொழிஅமைப்பில் அமைப்பு வேற்றுமையும் அதாவது சில தனித்தன்மைகளையும் உடையதாக அமைந்திருந்தது. கேரள மக்கள் தங்களின் மொழியைத் தனி மொழியாக வளர்ப்பதற்கான சமூகப் பண்பாட்டுச் சூழலும், அரசியல் சூழலும் பன்னிரண்டு முதல் பதினைந்தாம் நூற்றாண்டு வரையுள்ள சிற்றரசர்களின் காலத்தில் ஏற்பட்டன. 1374-இல் எழுதப்பட்ட திருவிதாங்கூர் சாசனமும் ஆர்ய எழுத்தால் எழுதப் பட்டது (சண்முகம், 1985:38). இங்கு மலையாள மொழியில் ஏற்பட்ட மாற்றமும் வடிவு மாற்றத்திற்குக் காரணமாக அமைந் திருக்கலாம். நிறைய வடமொழிச் சொற்களை மலையாள மொழி கையாண்டதால் ஒலிப்புடைய வல்லொலிகளும், வெடிப்பொலி களைக் குறிக்கும் எழுத்துகளின் தேவையும் வடிவ மாற்றத்திற்குத் துணைபுரிந்திருக்கலாம். எனவே, மலையாள மொழியில் ஏற்பட்டுள்ள எழுத்து மாற்றம் அரசியல், சமூகப் பண்பாட்டுக் காரணத்தோடு மொழியில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் விளைவு என்றே கொள்ளவேண்டும்.

3.1.3 துருக்கி

19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை துருக்கி ஒட்டா மான் பேரரசின் ஒரு பகுதியாகஇருந்தது. அந்தக்காலப் பகுதியில் அங்கு அரபிக் எழுத்துகளைப் பயன்படுத்தி வந்தார்கள். நாடு 1923-இல் விடுதலை அடைந்ததும் குடியரசுத் தலைவரான கமால் அதாதுர்க் மொழிச் சீர்திருத்தத்திலும் சமூகச்சீர்திருத்தத்தி லும் தீவிரமாகச் செயல்பட்டார். அதன்படி அரபிக் எழுத்தை நீக்கி ரோமன் எழுத்தைப்புகுத்தி துருக்கிமொழியை ரோமன் எழுத்துகளாலேயே எழுதும்படிச் செய்தார். இந்த மாற்றத்தால் 1928-இலிருந்து பள்ளிகளில் ரோமன் எழுத்தே சொல்லிக் கொடுக்கப்பட்டது.

1878-இலிருந்து துருக்கி மொழி அறிஞர்கள், ரோமன் எழுத் தால் எழுதலாம் என யோசனை தெரிவித்து வந்தார்கள், நாட்டில் புதிய குடியாட்சி ஏற்பட்டது மட்டுமின்றி அண்டை நாடான சோவியத் யூனியனில் வாழும் டர்கிக் மொழிகளும் ரோமன் எழுத்தைக் கையாண்டதும், வடிவு மாற்றத்திற்குத் தூண்டு

கோலாக அமைந்தது. மேலும் அரபிக் இஸ்லாம் சமயத்தோடும் பழைய கலாச்சாரத்தோடும் தொடர்புடையதாக இருந்ததைத் துண்டிப்பதற்கும், சமய சார்பற்ற அரச நடவடிக்கைக்கு துணை யாகவும் இருப்பதற்கும் பயன்படும் எழுத்து மாற்றம் என்று நம்பப் பட்டது.[2] இங்கு எழுத்து மாற்றம் சமூக சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாகவும் கருதப்பட்டது என்பது குறிப்பிடத்தகுந்தது.

3.1.4. ருமேனியா

1873-இல் ருமேனியர்கள் ரஷ்யமொழியை எழுதப் பயன் படுத்திய சிரிலிக் எழுத்தைக் கைவிட்டுவிட்டு ரோமன் எழுத்தை மேற்கொண்டார்கள். இதற்கு முக்கிய காரணம் ஸ்லாவிக்-முஸ்லீமான பால்கனியர்களின் செல்வாக்கைக் குறைத்துக் கிறிஸ்தவ சமயச் சார்பைப் பெருக்கும் நோக்கமே. இங்குத் தனி தேசம் என்ற உணர்வை வளர்க்கவும் சமயம் காரணமாகப் பிற ஐரோப்பிய நாடுகளோடு உள்ள உறவைப் பெருக்கவும் வரி வடிவ மாற்றம் துணைபுரிந்துள்ளது.

1.3.5. இந்தோனேஷியா

இந்தோனேஷியாவில் இதுவரை மூன்றுமுறை வரிவடிவ மாற்றம் நடந்திருக்கிறது. இந்தோனேஷிய மொழியின் மூலமொழி மலாய் மொழிதான், தேசிய உணர்வு அடிப்படையில் பாஷா இந் தோனேஷியா என்று மாற்றி வைத்துக் கொண்டார்கள். இந்தோ னேஷியாவில் மலாய் மொழிக்கான மிகப்பழைய எழுத்துச் சான்று தென்னிந்தியாவிலிருந்து சென்ற பல்லவ கிரந்த எழுத்துகளில் எழுதப்பட்ட கல்வெட்டுகளே. தென் சுமத்திராவில் 683, 684, 686-ஆம் ஆண்டுகளில் எழுதப்பட்ட கல்வெட்டுகளே மிகப் பழமை

2 'Much more important, however, was Ataturk's desire to cut the new Turkey off form what he held was the dead weight of the Islamic past and his view that the new script should be thought of as a logical part of the corpus of secularist measures taken in the first years of the Republic'

Gallaber, 1971:164

யானவை. இந்தோனேஷியாவில் இஸ்லாம் மதம் 11,12-ஆம் நூற்றாண்டுகளில் புகுந்தது. மக்கள் புதிய சமயத்தை ஏற்றுக்கொண்டதற்கு இணங்க எழுத்து வடிவத்திலும் மாற்றம் ஏற்படுத்திக் கொண்டார்கள். 11-ஆம் நூற்றாண்டின் இறுதியில் (1082-இல்) கீழை ஜாவாவில் கிடைக்கும் அரபிக் மொழி கல்வெட்டே அரபிக் மொழியில்]காணப்படும் மிகவும் தொன்மையான[கல்வெட்டு. அரபிக் எழுத்தில் எழுதப்பட்ட மலாய் மொழிக் கல்வெட்டு 14-ஆம் நூற்றாண்டிலிருந்து தொடர்ந்து காணப்படுகிறது. ஆனாலும் 16-ஆம் நூற்றாண்டு முதலே அரபிக் எழுத்து பெருவாரியாக உபயோகிக்கப்பட்டது. எனவே பல்லவ கிரந்த எழுத்திலிருந்து அரபிக் வடிவிற்கு மாறியதற்குச் சமயச் செல்வாக்கே காரணம். இந்தோனேஷியாவில் அண்மைக் காலத்தில் மற்றொரு வடிவ மாற்றமும் நடைபெற்றுள்ளது, தொழிற்புரட்சிக்குப் பிறகு ஐரோப்பியர்கள் வியாபார நிமித்தம் பல ஆசிய ஆப்பிரிக்க நாடுகளுக்குச் சென்றார்கள். பின்னர் ஆங்காங்கே தங்களது ஆட்சியையும் நிறுவினார்கள். அப்படித்தான் இந்தோனேஷியா டச்சுக்காரர்கள் வசம் சென்றது. அவர்கள் தங்கள் மலாய் மொழியைக் கற்றுக்கொள்ள ரோமன் எழுத்தைக் கையாளத் துவங்கினார்கள். இருபதாம் நூற்றாண்டில் தேசிய எழுச்சி ஏற்பட்டது. அதனால் சுதந்திர ஆட்சி ஏற்பட்டதும் ரோமன் எழுத்தை மொழியின் அமைப்பிற்கு ஏற்பவும் எளிமையாகப் பயன்படுத்தவும் பல திருத்தங்களைச் செய்துகொண்டார்கள் (Shanmugam, 1979). இந்த மாற்றங்களுக்கு முக்கிய காரணம் மேலை நாட்டுச் செல்வாக்கு அல்லது மேலைநாட்டாக்கம் (Westernization) என்று அழைக்கப்படுகிறது. மொழியில் மட்டுமின்றி நடை உடைகளிலும் கூட அங்கு மேலை நாட்டு ஆதிக்கம் அதிகம் என்பது குறிப்பிடத் தகுந்தது. பொதுவாக இதைச் சமூகப் பண்பாடு மாற்றத்தின் விளைவு என்று குறிப்பிடலாம்.

3.1.6. வியட்நாமில்

அரசியல் செல்வாக்கால் வரிவடிவு மாற்றம் செய்து கொண்டதற்கு வியட்நாமிஸ் மொழியும் ஒரு நல்ல உதாரணம்.

வியட்நாம் தேசம் மிக நீண்ட வரலாற்றை உடையது. அதன் ஆரம்பகால வரலாறே கி.மு. 111-இல் சீன சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டதிலிருந்து துவங்குகிறது, வடபகுதி தான் நேரடியாகச் சீன ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அதனால், சீன மொழியே ஆட்சிமொழியாகவும் கல்வி மொழியாகவும் அமைந்ததில் ஆச்சரியம் எதுவுமில்லை.

கி.பி, 2-ஆம் நூற்றாண்டில் புத்தமதம் வியட்நாமில் புந்த சன்னியாசிகளும் சீன எழுத்தும், மொழியும் தேசம் முழுவதும் பரப்புவதில் துணைபுரிந்தார்கள், ஆனால், காலஞ் செல்லச் செல்ல சீன எழுத்துகளை வியட்நாம் மொழிக்கும் பயன்படுத்த ஆரம்பித்தார்கள். கி.பி. 791-இல் சீன எழுத்தில் எழுதப்பட்ட நான்கு எழுத்துகள் கொண்ட ஒரு தொடரே வியட்நாமிஸ் மொழியின் மிகப் பழைய எழுத்துச் சான்றாக இருக்கிறது.

கி.பி. 930-இல் வியட்நாம் சீனாவின் அரசியல் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டது, ஆனாலும், சீன மொழியின் செல்வாக்கு குறையவில்லை. வியட்நாமியர்கள் சீன மொழியில் இலக்கியம் படைத்துக்கொண்டிருந்தார்கள். அவைகளுக்கு சீன - வியட்நாமிஸ் இலக்கியம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. அதே சமயத்தில் இன்னொரு பக்கம், சீன எழுத்துகளைக் கொண்டு வியட்நாமிஸ் மொழியை எழுதிப் பொதுமக்களோடு தொடர்பு கொள்ளும் பழக்கமும் தொடர்ந்து இருந்து வந்தது. அதனால் வியட்நாம் மொழித் தேவையை யொட்டி புதிய எழுத்துமுறை உருவாயிற்று. அதற்கு சுநோம் (Chu nom) அல்லது நோம் (Nom) என்று பெயர். இந்த எழுத்துகள் சீன எழுத்தின் வரிவடிவை ஒத்திருந்தாலும், சில பண்புகளில் வேறுபட்டது, இந்த எழுத்துகளில் சில அப்படியே சீனமொழியிலிருந்து கடனாளப் பட்டது; வேறு சில இரண்டு சீன எழுத்துகளைச் சேர்த்து உருவாக்கப்பட்டவை. இப்படிப்பட்ட நோம் எழுத்துகள் கி பி. 1209-இல் முதன்முதலாகக் காணப்படுகின்றன. 1292-இல் வியட்நாமிஸ் மொழியில் முதல் இலக்கியம் தோன்றிய 17-ஆம் நூற்றாண்டுவரை இந்த எழுத்து தேசம் முழுமையும் பயன்படுத்தப் பட்டது. இந்த முறையில் 2000 முதல் 3000 எழுத்துகள் வரை சாதாரணமாகப் படிப்பதற்கும் எழுதுதற்கும் தேவைப்பட்டன.

17-ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கு வியட்நாமில் ஏற்படஆரம்பித்தது. ஆசியாவின் பிறபகுதியின் வரலாறு போலவே பாதிரிமார்கள் முதலில் வந்தார்கள்; வணிகர்கள் பின்னால் நுழைந்தார்கள். பாதிரிமார்கள் மதத்தைப் பரப்ப ரோமன் எழுத்தைக் கையாண்டார்கள். 1651-இல் டிரோடஸ் (e Rhodes) என்பார் வெளியிட்ட வியட்நாமிஸ்-போர்ச்சுகீஸ்-லத்தீன் அகராதியில் ஒரு செம்மைப்படுத்தப்பட்ட முறை காணப்படுகிறது. ஆனாலும் 19-ஆம் நூற்றாண்டின் ஒரு பகுதி வரை வேறு நூல் எதுவும் ரோமன் எழுத்தில் எழுதப்படவில்லை. 1938-இலிருந்து தான் அது பரவலாகப் பழக்கத்திற்கு வந்தது.

1862-இல் வியட்நாமின் தென்பகுதி முதன் முதலில் பிரெஞ்சுக்காரர்களின் ஆட்சிக்கு உட்பட்டது. அதனால், அங்கு ஆட்சி மொழியாகப் பிரெஞ்சு மொழியைப் பயன்படுத்தினாலும், பொது மக்களுடன் தொடர்பு கொள்ள ரோமன் எழுத்தில் எழுதப்பட்ட வியட்நாமிசை உபயோகித்தார்கள். 1867-இல் ரோமன் எழுத்து க்வாக்ஙு (quoc Ngu) 'தேசிய மொழி' என்று அழைக்கப்பட்டது. அந்தப் பெயரே இன்றும் நீடித்து வருகிறது.

சீன எழுத்தும் நோம் எழுத்தும் க்வாக்ஙுவும் பழக்கத்தில் இருந்து வந்தன. க்வாக்ஙு பெரும்பான்மையும் கிறிஸ்தவர்களால் மட்டுமே ஆரம்ப காலத்தில் பயன்படுத்தப்பட்டது. இரண்டு உலகப் போர்கள், தேசிய எழுச்சி விடுதலைப் போராட்டம் ஆகிய சூழல்களால் ரோமன் எழுத்தின் பயன் அதிகரித்தது. வடபகுதி மட்டும் 1945-இல் விடுதலைப் பெற்றுச் சுதந்திரஆட்சி பெற்றபோதுரோமன் எழுத்தே வியட்நாமிசுக்கு உரிய எழுத்தாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ரோமன் எழுத்து முறை 24 எழுத்துகளைக் கொண்டது. வியட்நாமிஸ் குரல் அழுத்தம் உடைய மொழியானதால் சில குறியீடுகளும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. இன்று தேசம் முழுமையும் ஒத்துக்கொள்ளப்பட்ட எழுத்தாக அது அமைந்துவிட்டது.

பிற மொழிக்குரிய எழுத்து என்றாலும், தேசியப் போராட்டத்திலும் தேசிய ஐக்கியத்திலும் க்வாக்ஙு பெரிய அளவில் துணை நின்றது; கல்வியைப் பொது மக்களிடையே பரப்புவதற்கு உதவியாக இருந்தது. 1945 செப்டம்பரில் தேசம் விடுதலை அடைந்தபோது

படித்தவர்களின் எண்ணிக்கை 27 லட்சமாக இருந்தது. அதாவது கிட்டத்தட்ட 20 சதவிகிதமே. அரசின் தீவிர இயக்கத்தால் டிசம்பர் 1945-இல் 116 லட்சமாக இருந்த படித்தவர்களின் எண்ணிக்கை 1953-இல் 70 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. (De Francis 1977:240).

முதலில் சீன எழுத்தும் அடுத்து அதைத் தழுவிய நோம் எழுத்தும் சீன அரசியல் செல்வாக்கால் அமைந்தது; 19-ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சுச் செல்வாக்கால் - ஆட்சி முறையால் நோம் எழுத்து மறைந்து ரோமன் எழுத்து க்வாக்ங 'தேசிய மொழி' என்ற கவுரவமான பெயரோடு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3.1.7. சோவியத் மொழிகள்

சோவியத் யூனியனைச் சேர்ந்த மத்திய ஆசியாவில் பேசப்படும் பல டர்கிக் மொழிகளில் இரண்டு முறை வரிவடிவ மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதுவும் அங்குப் பொது உடைமைக் கட்சி ஆட்சிக்கு வந்த பிறகே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. கஸாஹ் (Kazakh), கிர்கிஸ் (Kirghiz) போன்ற பல மொழிகள் சமயச் சார்பு காரணமாக அரபிக் எழுத்துகளை ஏற்றுக்கொண்டிருந்தன. பொதுஉடைமைக் கட்சி ஆட்சிக்கு வந்தபோது கற்றவர்கள் எண்ணிக்கையும் குறைவாக இருந்தது. அரபிக் எழுத்துகளைவிட ரோமன் எழுத்துகளைக் கற்றுக்கொள்வது எளிது; அச்சிடுவது சுலபம் என்று கருதியதோடு ரோமன் எழுத்து இஸ்லாமிய சமய நூல்களையும், அரபிக் மொழியில் எழுதப்பட்ட பிற நூல்களையும் படிக்க முடியாதபடி செய்துவிடும் என்று எண்ணியுமே புகுத்தப்பட்டது.[3] டர்கிக் மொழிகள் சோவியத்

---

3 It was declared Communist policy to raise the level of literacy as rapidly as possible but the Arabic alphabet was not considered a desirable medium for this purpose. Abandonment of the Arabic alphabet had the political advantage of cutting off the rising generation from earlier books and written materials as well as current periodical literature from the Moslem countries south of the Russian borders.

Henze, P. B 1977.375

யூனியனின் தேசிய மொழிகள் அல்ல; பிராந்திய தேசிய மொழிகள். எனவே வடிவு மாற்றம் மத்திய அரசின் செல்வாக்கால்தான் ஏற்பட்டது. இந்த நூற்றாண்டின் இருபதுகளில்தான் ரோமன் எழுத்தை ஏற்றுக்கொண்டன. இருபது ஆண்டு கழித்து சிரிலிக் எழுத்துகளை மேற்கொள்ளும்படியான கட்டாயநிலை ஏற்பட்டது மற்றொரு வரிவடிவ மாற்றம் ஆகும்.

ஸ்டாலின் அதிபராகப் பதவியேற்றதும் தீவிர உணர்ச்சி ஏற்பட்டது. ஸ்லாவிக் இனத்தைச் சாராத பிராந்திய தேசியத் தலைவர்கள் வெளிநாட்டாரோடு தொடர்பு கொண்டுள்ளார்கள் என்ற அய்யத்திற்கு ஆளானார்கள். உஸ்பெக் முதன்மந்திரி கொஜாவ் (Khojaev)வும் கம்யூனிஸ்ட் செயலர் இக்ரமாவ் (Ikramov)வும் 1938-இல் துரோகிகளாக்க் கருதப்பட்டு உயிர் துறக்க நேர்ந்தது. இந்த நிலையில்தான் டர்கிக் மொழிகள் எல்லாம் 1939-40-இல் சிரிலிக் எழுத்திற்கு மாற்றம் செய்யப் பட்டன. இதற்குக் கூறப்பட்ட முக்கிய காரணம் ரஷ்ய மொழியை அவர்கள் சுலபமாகக் கற்றுக்கொள்ளத் துணைசெய்யும் என்பது தான். மேலும், மொழி வளர்ச்சிக்கும் ரஷ்ய பண்பாட்டைத் தழுவுவதற்கும் வசதியாக இருக்கும் என்று விளக்கப்பட்டது.[4] இந்த மாற்றம் டர்கிக் மொழிகளுக்கு இடையே அமைந்த அமைப்பு ஒற்றுமையையும் புறக்கணிக்கும் வழியில் அமைக்கப் பட்டது என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தது. நிலை மொழி கூட வெவ்வேறு கிளை மொழிகளை அடிப்படையாகக் கொண்டு சொல்லெழுத்து முறையும் வேறுவேறாக அமைக்கப்பட்டன. அதனால், டர்கிக் மொழிகளுக்கு இடையே இருந்த ஒற்றுமை

---

4 The Arabic alphabet used by some people and the Latin alphapet introduced later could not keep pace with the development of the national languages of the previously backward peoples of the U. S. S. R. The adoption of the Russian script by the most of the languages has not only contributed to their development but has been of notable assistance to the various nationalities of the Soviet union in their successful mastery of the Russian language and in the assimilation of Russian culture.

Baskakov, quoted in **Henze**. 1977:381

குலைந்தது.[5] இங்கு வடிவ மாற்றமும் பிறவும் அரசியல் சூழலைப் பிரதிபலிக்கும்படி அமைந்துவிட்டன.

3.1.8. சிந்தி

சிந்தி மொழி அந்த மக்கள் வாழும் தேசப்பகுதியை ஒட்டிய எழுத்தை உடையதாகக் காணப்படுகிறது. இந்தியா சுதந்தரம் பெறுவதற்கு முன்னால் சிந்தியர்கள் வடமேற்குப் பகுதியில்-குறிப்பாகப் பாகிஸ்தான் பகுதியில் வாழ்ந்து வந்தார்கள். அப்போது பாரசீக - அராபிக் எழுத்தைக் கையாண்டு வந்தார்கள். பாகிஸ்தான் தனி தேசமாக உருவானதும், இந்துமதத்தைச் சேர்ந்த அவர்கள் இந்தியப் பகுதிக்குக் குடியேறினார்கள். இந்திய நாட்டின் தேசிய உணர்வை ஒட்டி இப்பொழுது நாகிரி என்ற எழுத்தால் தங்கள் மொழியை எழுதிவருகிறார்கள் (Pandit n.d.: 108). இன்று சிந்தியும் தேசிய மொழிகளில் ஒன்றாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

3.1.9. மராத்தி

கலாச்சார மாற்றத்தோடு தொழிலியல் வளர்ச்சி அதாவது அச்சுவாகன வளர்ச்சியும் வரிவடிவ மாற்றத்திற்கு உதவிசெய்திருக்கின்றது என்பதற்கு மராத்தி மொழியும் ஐரிஷ் மொழியும் சாட்சியாக இருக்கின்றன.

மராத்தி மொழி மோடி எழுத்துகளால் 18-ஆம் நூற்றாண்டு வரை எழுதப்பட்டு வந்தது. மேலை நாட்டு கிறிஸ்துவப் பாதிரிகள் இந்தியாவில் எல்லாப் பகுதிகளிலும் தங்கிச் சமயப் பிரச்சாரப் பணிகளுக்கிடையே நாட்டு மொழிகளின் வளர்ச்சியிலும் பாடு பட்டார்கள். பல இந்திய மொழிகளில் புத்தகங்களை அச்சடிக்கும் பணியிலும் ஈடுபட்டார்கள். அந்த முறையில் மராத்திப் பகுதியில் இருந்த பாதிரிமார்கள் மராத்தி மொழி நூல்களை அச்சடிக்க முன்வந்த போது மோடி எழுத்துகளைத் தனித்தனியே பிரித்து

---

5 The Cyrilic alphabets devised for the Central Asian languages were deliberately made as different from each other as possible. Likewise dialects that differed as much as possible from the related neighbouring languages were chosen as norms for the Cyrilic written languages Ibid P.382

அச்சுக்கட்டை உருவாக்க முடியாமல் தவித்தார்கள். அதனால் தான் நாகிரி எழுத்துகளைப் பயன்படுத்தி மராத்தி மொழி நூல்கள் அச்சில் வெளிவரலாயின. அப்போது படித்தவர்கள் அனைவரும் ஓரளவாவது வடமொழி படித்திருந்ததால், அவர்களுக்கு நாகிரி எழுத்து பழக்கமானதாக இருந்தது. அவர்கள் தாங்கள் அதிகம் பாராட்டும் வடமொழிக்குரிய எழுத்து என்பதால் தாய் மொழியான மராத்திக்கும் நாகிரி எழுத்தை உபயோகிப்பதை கவுரவமாகக் கருதியிருக்க வேண்டும். அக்காலத்தில் கல்வி அறிவு குறைவாக இருந்ததும் நாகிரி எழுத்து ஏற்றுக்கொள்ளப் பட்டதற்குத் துணை செய்திருக்கவேண்டும்.

3.1.10 ஐரிஷ்

ஐரோப்பாவில் பேசப்படும் ஐரிஷ் மொழி தனக்கெனச் சிறப்பாக அமைந்த ஐரிஷ் வரிவடிவைக் கைவிட்டுவிட்டு ரோமன் எழுத்தை மிகச் சமீபகாலமாகவே ஏற்றுக்கொண்டுள்ளது. ஐரிஷ் எழுத்து பழைய ரோமன் எழுத்திலிருந்து கிளைத்துள்ளதுதான். 15,16, ஆம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட கையெழுத்து பிரதிகள் ஐரிஷ் எழுத்தால் எழுதப்பட்டுள்ளன. ஆனால், முதன்முதலில் 1567 இல் அச்சடிக்கப்பட்ட புத்தகம் ரோமன் எழுத்துகளைக்கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் அந்த நூல் எடின்பரோவில் அச்சடிக்கப் பட்டது தான். ஆனால் 1571-இல் அயர்லாந்தில் அச்சடிக்கப்பட்ட புத்தகம் ஐரிஷ் எழுத்துகளைப் பெற்றிருக்கிறது. பின்னர் வந்த பல நூல்கள் ஐரிஷ் எழுத்துகளைப் பயன்படுத்தியிருக்கின்றன. இந்த நிலை 19-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை நீடித்தது.

ஐரிஷ் எழுத்துகள் என்பன d,e,f,g,i,p.r,s,t, என்ற ஒலிகளுக்கு தனி வரிவடிவையும் மீதி ஒலிகளுக்கு ரோமன் எழுத்துகளையுமே கொண்டவை. f,s, என்ற எழுத்தோடு புள்ளிவைத்து எழுதினால், அது அந்தச் சொல்லில் உச்சரிப்பு பெறாமல் இருக்கிறது என்று பொருள். இந்த முறை பின்னர் எல்லா மெய்யெழுத்துகளுக்கும் நீடிக்கப்பட்டது. பிற்காலத்தில் புள்ளிக்குப் பதிலாக h என்ற எழுத்தைச் சேர்த்து எழுதி, அந்த ஒலி நிலையைக் குறித்தார்கள். இதனால் புதிதாக 9 எழுத்துகள் தேவைப்பட்டன. மேலும், ஆங்கில அச்சுவேலை எளிமையாக இல்லை என்ற எண்ணம்

ஏற்பட்டது. 1922-இல் ஐரிஷ் தேசம் உருவாயிற்று. அதன் விளைவாக அச்சுவேலை மிகுந்தது. மேலும், ஆங்கில மொழியும் ஐரிஷ் மொழியும் அரசாங்க ஆணைகளிலும் படிவங்களிலும் இடம் பெற்றன. எனவே, ரோமன் எழுத்துகளாலே ஐரிஷ் மொழி அச்சடிப்பது எளிது என்று கருதி அதைப் பயன்படுத்தத் துவங்கினார்கள். 1945-இலும், 1947-இலும் வெளியிடப்பட்ட ஐரிஷ் மொழியில் புதிய சொல்லெழுத்துகளும் ரோமன் எழுத்துகளையே கொண்டிருக்கின்றன. அதிகமாக ரோமன் எழுத்து பரவவே 1963-64-ஆம் கல்வி ஆண்டிலிருந்து ஆரம்பப் பள்ளிகளில் ரோமன் எழுத்தே கற்பிக்கப்பட்டது. எனவே, இன்று ரோமன் எழுத்தே ஐரிஷ் மொழிக்கும் உரியதாக ஆகிவிட்டது. புதிய தேசம் என்பதற்கு ஒப்ப பழமையை விட்டு புதிய மரபுகளையும் கலாச்சாரத்தையும் மேற்கொள்ளுவதன் அடையாளமாக ரோமன் எழுத்து அமைந்தது[6] என்ற உணர்வும் ஏற்பட்டுவிட்டது. ஜெர்மன்மொழியும் சமீப காலமாகவே கோதிக் வடிவை நீக்கி விட்டு ரோமன் வரிவடிவை ஏற்றுக் கொண்டுள்ளது. அதனால் எந்திர லர்பம் (Mechnical efficiency) அதிகமாய் உள்ளது என்ற கருத்தும் காணப்படுகிறது.

3.2 வரிவடிவத் திருத்தம்

முன்னர் வழங்கி வருகிற வரிவடிவங்களைத் திருத்தம் செய்து கொண்டு பயன்படுத்தி வருவதே வரிவடிவ திருத்தம் என்று

---

6 Despite such sentimental attachment to the Irish type, the revival effort generated an inevitable pressure to adopt Roman type: it was more universally available, a fact which gained significance as the writing in the language increased and after the foundation of the State, it generally facilitated the printing of the bilingual forms and other official documents. In addition to such pragmatic considerations, there was to be encountered the more emotive argument that Roman type written Irish a 'modern,' 'progressive' appearance suited to its new status as a national language'

Murchi, 1977:284.

அழைக்கப்படுகிறது. சீனமொழியும் மலையாள மொழியும் இதற்கு உதாரணமாக உள்ளன.

3.2.1 சீனம்

சீனமொழியின் எழுத்துத் திருத்தத்தையும் எழுத்தின் செயற்பாட்டையும் நோக்கினால் அங்கு ஏன் வரிவடிவு மாற்றம் வெற்றி பெறாமல், வடிவு திருத்தம் மட்டும் ஏற்பட்டது என்பது புலனாகிறது.

சீன மொழி ஓவிய எழுத்துகளைக் (logograph) கொண்டது. எனவே, அங்கு எழுத்து எண்ணிக்கை அதிகம். சாதாரண அன்றாடத் தேவைக்கு மட்டும் 7000 அல்லது 8000 எழுத்துகள் ஒருவன் அறிந்திருக்க வேண்டும். மொழி அறிஞர்கள் 20,000-க்கு மேற்பட்ட எழுத்துகளைத் தெரிந்து வைத்திருப்பார்கள்.

ரோமன் எழுத்தையோ அல்லது வேறு ஒலிய எழுத்து முறையையோ பின்பற்ற வேண்டும் என்று பல அறிஞர்கள் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து பாடுபட்டு வந்திருக்கிறார்கள். 1949-இல் சீனாவில் கம்யூனிஸ்டு ஆட்சி துவங்கிய போது எழுத்து சீர்திருத்தம் செயல்வேகம் கொண்டது. இதில் மூன்று கோட்பாடுகள் வற்புறுத்தப்பட்டன.

1. எழுத்துத் திருத்தம் அல்லது வடிவுத்திருத்தம் கூட்டெழுத்துகளில் உள்ள கோடுகளின் எண்ணிக்கையைக் குறைத்தல்

2. பீகிங் பேச்சு மொழியை ஒட்டிய நிலைமொழி அமைத்து தேசம் முழுவதும் பரப்புதல்.

3. ஒலிய எழுத்துகளைப் படைத்தல். இதைச் சீன எழுத்துகளை விளக்கவும், பொதுமொழி உண்டாக்கவும் சீனாவில் வாழும் சிறுபான்மையினர் மொழிக்கு வரிவடிவம் கொடுக்கவும் வருங்காலத்தில் எப்பொழுதாவது ஓவிய எழுத்துகளை நீக்கிவிடவும் பயன்படுத்துதல்.

இதுவரை முதலிரண்டு பணிகளே மேற்கொள்ளப்பட்டு ஓரளவு வெற்றியுடன் அமுலாகி வருகின்றன. அன்றாட பொதுத் தேவையில் வழங்கும் 7000-8000 எழுத்துகளில் திருத்தம்

செய்யப்பட்டுள்ளவை சுமார் 3000 எழுத்துகளே. இதை 1956-ஆம் ஆண்டு முதல் அரசாங்கம் ஏற்றுச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திருத்திய வடிவங்கள் என்பது சாதாரணமாக வேகமாக எழுதும்போது பயன்படுத்தப்படும் சுருங்கிய வடிவங்கள்தான். அதாவது சில கோடுகளைக் குறைத்தும், ஒரு பகுதியை மட்டும் முழு எழுத்தாகக்கொண்டும், சிக்கல் நிறைந்த எழுத்தாக இருந்தால் அதே ஒலிப்பு உடைய சொல் எளிமையான வடிவம் கொண்டிருந்தால், அந்த வடிவத்தை ஏற்றும் திருத்தம் செய்து கொண்டார்கள்.[7]

இன்று பீகிங் பேச்சு மொழி அடிப்படையில் அமைந்த நிலை மொழி பரவிவருகிறது; இருந்தும் கிளை மொழிக்கும் நிலை மொழிக்கும் உறவு எப்படி இருக்கவேண்டும் என்பது சரியாக நிர்ணயிக்கப்படவில்லை. அதாவது, நிலைமொழி கற்றுக்கொண்டு எல்லாவற்றுக்கும் அதையே பயன்படுத்துவதா அல்லது சில தொழிற்பாட்டிற்கு மட்டும் கையாண்டு ஏனையவற்றிற்குக் கிளை மொழியை உபயோகிப்பதா என்பதுதான் பிரச்சனை. அதுபற்றி இங்கு விளக்கம் தேவையில்லை. ஆயினும் பல கிளைமொழிகள் இருப்பதும் சீன மொழி அமைப்பும் ஒலிய எழுத்து முறை ரோமன் எழுத்து முறை வெற்றி பெறாததற்கு காரணமாக அமைகிறது.

55 கோடிக்கு மேற்பட்ட மக்களால் பேசப்படும் சீன மொழி 8 கிளை மொழிகளை உடையது. அதில் பீகிங் கிளை மொழி - வடக்கத்திய கிளை மொழி 33 கோடி மக்களால் பேசப்படுகிறது. ஏனைய கிளைமொழிகள் 4 கோடி, 2 கோடி என்று அதிக எண்ணிகையில் தான் பேசப்படுகிறது. மேலும், அவை ஒவ்வொன்றும் வேறு மொழி என்று கருதத்தக்க அளவு வேறுபாடு உடையன.

---

7 The simplification which have been adopted are by and large those which have been customarily used by Chinese in hasty and informal writing primarily they involve a reduction in number of strokes by such devices as letting part of a character stand for the whole, replacing a complicated character by a simpler homophone, condensing several strokes into one or two and so on.

John De Francis, 1977:130)

ஆங்கில மொழிக்கும் டச்சு மொழிக்கும் உள்ள வேறுபாடு போலவும் இத்தாலிய மொழிக்கும் ஸ்பானிஷ் மொழிக்கும் உள்ள வித்தியாசம் போலவும் சீனக் கிளைமொழிகள் வேறுபட்டுக் காணப்படுகின்றன. ஆனால், எழுத்தியலில் மட்டும் வேறுபாடுகள் அதிகம் என்று அந்த வேறுபாடுகளைச் சில விதிகளில் அடக்கிக் காட்ட முடியும் என்றும், சொற்களஞ்சியத்தில் குறைவாகவும் வாக்கிய அமைப்பில் மிகவும் குறைவாகவும் வேறுபாடுகள் உள்ளன என்றும் சீன மக்களிடையேயும் அறிஞர்களிடையேயும் கருத்து நிலவுகிறது.

ஓவிய எழுத்து முறை இருப்பதால் எழுத்து மொழியில் வேறுபாடு இல்லை; எழுத்து மொழி பல கிளை மொழி பேசுவோரையும் ஒன்றுபடுத்துகிறது; மேலும், ஓவிய எழுத்து முறையில் எழுதுவதை ஒலிய எழுத்து முறையில் எழுதினால் ஒரு சொல் பன்மொழி (Homophonous forms) மிகுந்து சரியான பொருளைத் தெரிந்து கொள்ளச் சிரமம் ஏற்படும் என்றும் கருதப்படுகிறது. எனவே, எழுத்துமொழியுடைய ஒற்றுமைப்படும் தொழிற்பாடுதான் வரிவடிவ மாற்றத்திற்குக் குறுக்கே நிற்கிறது. ஆயினும், சிலச்சில துறைகளில் ஒலிய எழுத்து இன்றும் கையாளப்பட்டு வருகிறது.

3.2.2. மலையாளம்

மலையாள மெழியில் 1971-ஆம் ஆண்டிலிருந்து எழுத்துத் திருத்தத்தை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இப்போது எல்லா செய்தித்தாள்களும் பத்திரிகைகளும் ஒருபகுதி திருத்திய எழுத்திலும் பிற பகுதியைப் பழைய எழுத்திலும் வெளியிட்டு வருகின்றன. தமிழைப்போலவே ஔகாரத்திற்கு இரண்டு வடிவம் (ஔ,ள) வழங்கியதை விட்டு ஒரேவடிவமாக அதுவும் துணை வடிவமாக இருப்பதையே உயிர் எழுத்திலும் உயிர்மெய் எழுத்திலும் பயன்படுத்தப் பட்டு, அதுவே திருந்திய வடிவமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. உகர ஊகார உயிர்மெய் எழுத்துகள் நிறைய மாற்று வடிவம் உடையதாக அமைந்திருப்பதை நீக்கி, எல்லா மெய்யோடும் ஒரு வடிவமே வரும்படி அமைத்துக் கொண்டுள்ளார்கள். மெய் யெழுத்துகள் இரண்டு மெய்கள் சேர்ந்து வரும்போது சில மாற்று வடிவங்கள் உடையதாக இருப்பதை நீக்கி, முழு மெய்

களைத் தனித்தனியே எழுதும்படி திருத்திக் கொண்டுள்ளார்கள் முன்னர் 500 அச்செழுத்துகள் (type scripts) வேண்டியிருந்தது. இந்தத் திருத்தத்தினால் அவை 90 எழுத்துகளாகக் குறைந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது (Prabhodachandran Nair, 1979:59). மலையாள மொழியில் ஏற்பட்ட வடிவத் திருத்தம் கல்வியியல் நோக்கிலும் தொழிலியல் நோக்கிலும் எளிமையாக்கப்பட்டிருப்பதைத்தான் காட்டுகிறது.

3.3. எழுத்து எண்ணிக்கை மாற்றம்

பேச்சுமொழியில் ஏற்படும் மாற்றத்தால் மொழியில் சில ஒலியன்கள் புதியதாகத் தோன்றக்கூடும்; சில மறையக் கூடும். மேலும், நிறைய பிறமொழிச் சொற்களைக் கடனாள்வதாலும் புதிய ஒலியன்கள் அமைய முடியும். இவையெல்லாம் மொழி வரலாற்றில் அடங்கும். அப்படியில்லாமல் இன்னொரு மொழியின் வரிவடிவை ஏற்கும் போதும், மொழிப் பயனாக்கம் விரிவடையும் போது எழுத்தில் மாற்றம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

3.3.1. தெலுங்கும் கன்னடமும்

தெலுங்கு, கன்னட மொழிகளில் பழங் காலத்தில் 6,7-ஆம் நூற்றாண்டுகளில் ற, ழ என்ற ஒலிகளுக்கு தனித்தனி வடிவங்கள் இருந்தன. பின்னால் றகரம் ரகர உச்சரிப்புடன் இணைந்து விட்டது. அதாவது றகரம் ரகரமாக உச்சரிக்கப்பட்டது. கன்னடத்தில் ழகரம் ளகரமாகவும் வேறு ஒலிகளாகவும் மாறி பேச்சு மொழியில் மறைந்து விட்டது; தெலுங்கிலும் ழகரம் டகரமாகப் பெரும்பான்மை இடங்களில் மாறிவிட்டது. அதனால் இரண்டு மொழியிலும் ற, ழ நீக்கப்பட்டதால் எழுத்து எண்ணிக்கை இரண்டு குறைந்துவிட்டது.

3.3·2. இந்தோனேஷியா

இந்தோனேஷிய மொழி ரோமன் எழுத்துகளை ஏற்றுக் கொண்டபோது q, x என்ற எழுத்துகள் மொழியின் ஒலியன் அமைப்புப்படி தேவை இல்லாவிட்டாலும், விஞ்ஞானம், கணிதம் போன்ற பிற துறைகளில் பயன்படுத்த வேண்டியிருக்கிறது என்று

கருதி, அவற்றை மொழி எழுத்துகளாக ஏற்றுக்கொண்டிருக் கிறது. இது இன்னொரு மொழியைக் கடனாண்டதால் ஏற்பட்ட விளைவு என்று கூறலாம்.

3.3.3. சோவியத் மொழிகள்

சோவியத் யூனியனில் உள்ள டர்கிக் மொழிகளும் சிரிலிக் எழுத்துகளை ஏற்றுக்கொண்டபோது சிரிலிக் எழுத்தில் பலவற்றை அப்படியே ஏற்றுக் கொண்டதன் மூலம் எழுத்து எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்டுள்ளன. ரோமன் எழுத்துகளைக் கையாண்ட போது 39 எழுத்துகளைக் கொண்டிருக்க, சிரிலிக் எழுத்துகள் வந்தபோது அதன் எண்ணிக்கை 74 ஆக உயர்ந்தது.[8]

3.3.4. பிலிப்பினா

ஒரு தேசத்தில்வழங்கும் பல மொழிகளில் ஒன்று தேசிய மொழியாக உயர்த்தப்பட்டபோது பிற பிராந்திய மொழிகளில் வழங்கும் சிறப்பு ஒலிகளைக் குறிக்கும் எழுத்துகளை ஏற்றுக் கொள்வதன் மூலம் தன் எழுத்தின் தொகையை உயர்த்திக் கொண்டுள்ளதையும் காணலாம். இப்படிப்பட்ட மாற்றம் பிலிப் பைன்ஸ் மொழியில் நடைபெற்றுள்ளது. பிலிப்பைன்ஸ் நாட்டில் அதன் தலைநகரான மணிலாவில் பேசப்படும் தகலாக் (Tagalog) என்பதே தேசிய மொழியாக ஒப்புக்கொள்ளப்பட்டது. அதன் புதிய அந்தஸ்திற்கு ஏற்ப பிலிப்பினா என்ற பெயர் மாற்றப் பட்டு விட்டது. தகலாக் 20 எழுத்துகளை உடைய மொழி. தேசிய மொழி ஆக்கப்பட்டதும் இன்று 31 எழுத்துகளை உடையதாக அமைத்துக் கொள்ளப்பட்து.[9]

---

8 'The unified Turkic Latin alphabet consisted of 39 sounds. The total number of signs on the basis of Cyrilic consists of 74 symbols inspite of the fact that the group of symbols actually necessary to represent the separate sounds of the Turkic languages has not changed and remains 39,
Baskakov's quotation taken from Henze, 1977:408.

9 The abakada (i.e. alphabet) consists of the vowels a, e, i, o u, and the consonants p, t, k, d, g, h, l, r, m, n, ,s, w, y, and the digraph ng..........

இங்கு வரிவடிவ எண்ணிக்கையில் மட்டும் அல்லாமல் மொழியின் பெயரைக்கூட அந்த நாடு மாற்றிக் கொண்டது. முழுமையான தேசிய உணர்வின் — நாட்டு ஒருமைப்பாட்டு உணர்வின் பிரதிபதிலிப்பாகும்.

3 2.5. தமிழ்

தமிழ் மொழி வரலாற்றிலும் எழுத்து எண்ணிக்கை கூடியிருப்பதைக் காணமுடிகிறது. இலக்கிய மொழியில் முதன்முதலில் 10 ஆம் நூற்றாண்டில் தோன்றிய திருமந்திரத்தில் ஹ, க்ஷ, ஸ ஸ்ரீ, ஆகிய எழுத்துகள் குறிக்கப்பட்டுள்ளன. 15-ம் நூற்றாண்டு இலக்கியங்களில் கிரந்த எழுத்துகள் எனப்படும் ஸ, ஷ, ஜ, ஹ, ஸ்ரீ, க்ஷ என்ற ஆறு எழுத்துகளும் காணப்படுகிறது. இன்று பெரும்பாலானோர்களுடைய எழுத்தில் முதல் நான்கு எழுத்துகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன (சண்முகம் 1978:79).

3.2.6. பழைய எழுத்துகளும் புதிய ஒலிகளும்

புதிய எழுத்துகளைச் சேர்ப்பதற்குப் பதிலாக மொழியில் ஒலியனாக வழங்காத எழுத்துகளையோ அல்லது எழுத்துச் சேர்க்கைகளையோ பயன்படுத்திக் கொள்கிற மரபும் சிலமொழிகளில் காணப்படுகிறது. தமிழில் ஆய்த எழுத்தையும் சேரத்து உர சொலியைக் குறிக்கும் பழக்கம் உண்டாகியுள்ளது. தெலுங்கில் /ae/ என்ற (பேங்க் என்ற ஆங்கிலச் சொல்லில் வருவது) உயிரொலி <ஆய்> என்ற கூட்டெழுத்து மூலம் தெரிவிக்கப்படுகிறது. கன்னடத்திலும் <ஜ> வுக்குரிய எழுத்தின் அடியில் இரண்டு

......On October 4, 1971, the foreign letters' c, f, j, ñ q, v, x and z were declared part of the Pilipino alphabet by the nine member board of the Institute of Nation Language together with the combinations, ch, ll, rr (the combination ng was in the 'original abakada') added to the original twenty letters, the thirty one Pilipino alphabet now consists of : a, b, c, ch, d, e, f, g, h, i, j, k, l, ll, m, n, ñ, ng, o, p, q, r, rr, s, t, u, v, w, x, y, z'

Sibayan, 1974 : 235

புள்ளியிட்டு எழுதினால் /Z/ என்ற ஒலியையும் /ae/ என்ற ஒலியை <ஆய்> என்று எழுதும் முறையும் காணப்படுகிறது (Bright, 1958 : 72).

மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழி (ph) என்ற ஒலிக்குரிய எழுத்து /f/ என்ற ஒலியைக் குறிக்கக் கையாளப் படுகிறது. இந்தியில் <ph> வுக் குரிய எழுத்தின் அடியில் புள்ளி வைத்தால் [f] என்ற ஒலியைக் குறிக்கும்.

3.4. சொல்லெழுத்து மாற்றம்

பேச்சு மொழியில் ஏற்படும் மாற்றமே சொல்லெழுத்து மாற்றத்துக்கு முக்கிய காரணம். பொதுவாகவே எழுத்து மொழி பழங்கால பேச்சுமொழியையும் பழைய இலக்கிய இலக்கண மரபுகளையும் ஒட்டி அமைந்திருக்கும். மொழிச் சமூகத்தில் பெரியதொரு அரசியல் - கலாச்சார மாற்றம் ஏற்பட்டபோது மொழியிலும் மாற்றம் செய்துகொள்ள வேண்டும் என்று எண்ணுவது இயற்கை. இது மொழியை ஜனநாயகப்படுத்துதல் (democratisation of language) என்றும் கருதப்படுகிறது. மேலே குறிப்பிட்டபடி வரிவடிவு மாற்றத்தோடு சொல்லெழுத்து மாற்றமும், சொல்லெழுத்தில் மட்டும் மாற்றமும் நடைபெற்ற மொழிச் சமூகங்கள் உலகில் காணப்படுகின்றன. உதாரணமாக, துருக்கி, இந்தோனஷிய மொழிகளில் வடிவு மாற்றமும் சொல்லெழுத்து மாற்றமும் ரஷ்யன், டச்சு, நார்வீஜியன் போன்ற மொழிகளில் சொல்லெழுத்து மாற்றம் மட்டும் நடைபெற்றுள்ளன.

3.4.1. துருக்கி

துருக்கி ஒட்டமான் பேரரசின் கீழ் இருந்தபோது இலக்கியப் பொது மொழியாக இருந்தது ஒஸ்மான்லிக்கா (Osmanlica) என்ற மொழி. இது ஆராயிக், பாரசீகம், துருக்கி ஆகிய மூன்றும் கலந்த கலவை மொழி ஆகும். அது பொதுமக்களுக்கு எளிதில் புரியாத மொழியாக இருந்தது. பேச்சுமொழி கபா துர்க்கிஷ் (kaba Tüce) என்று அழைக்கப்பட்டது. ஒஸ்மானலிக்கா இஸ்லாம் சமய மொழியாகவும் கலாசார மொழியாகவும் விளங்கியது. அரசியல் புரட்சி ஏற்பட்டு தேசிய அரசு உருவாகி ரோமன்

எழுத்துகள் புகுத்தப்பட்ட போது தலைநகரான இஸ்தான்புல்லி லும் பிற பெரிய நகரங்களிலும் வழங்கும் படித்தவர்களின் பேச்சு மொழியை ஒட்டி நிலைமொழியை உண்டாக்கிப் புதிய சொல்லெழுத்துகளை அமைத்தார்கள்.

3.4.2. இந்தோனேஷியா

இந்தோனேஷியா 1945-இல் சுதந்திரம் அடைந்தது. அதற்கு பிறகு ஆறுமுறை எழுத்துச் சீர்திருத்த முயற்சி மேற்கொள்ளப் பட்டு, இறுதியாக 1972-ஆம் ஆண்டு நாட்டின் குடியரசுத் தலைவரே சுதந்திர நாளன்று புதிய சொல்லெழுத்தை அறிவித் தார். அதன்படியே அரசாங்கமும் கல்விக்கூடங்களும் பத்திரிகை களும் வெளியீட்டாளர்களும் புதிய சொல்லெழுத்தைப் பின்பற்றி வருகிறார்கள்.

3.4.3 ஐரிஷ்.

ஐரிஷ் மொழி பேச்சுமொழியாகவும் இலக்கிய மொழியாகவும் 19-ஆம் நூற்றாண்டு வரை பயன்பட்டு வந்தது. 1952-இல் ஐரிஷ் குடியரசு ஏற்பட்ட பின்னரே ஆட்சி மொழியாகவும் கல்வி மொழி யாகவும் உபயோகப்பட ஆரம்பித்தது. எனவே, புதிய நிலை மொழியும் அதையொட்டிப் புதிய சொல்லெழுத்தும் ஏற்பட்டன. மூன்றுமுறை சொல்லெழுத்து அமைவதற்கு அரசு குழு அமைத் தது.1937-ல் அரசியல் சட்டம் ஒருவித சொல்லெழுத்தால் எழுதப் பட்டது. அடுத்து 1945-இல் நாடாளுமன்றத்தின் இரு சபை களைச் சார்ந்த உறுப்பினர்கள் கூடிய குழு புதிய சொல்லெழுத்து முறை ஒன்றை வெளியிட்டது. அதன் திருந்திய வடிவம் 1947-இல் வெளியிடப்பட்டது. அதுவே, இன்று பெரும்பாலான மக்களாலும் அறிஞர்களாலும் வெளியீட்டார்களாலும் பயன்படுத்தப்பட்டு வரு கிறது.

3.4.4 ரஷ்யன்.

ரஷ்ய மொழியிலும் சொல்லெழுத்து மாற்றம் பெரிய அளவில் பொது உடைமை ஆட்சியின்போது ஏற்படுத்தப்பட்டது. பேச்சு மொழியில் இல்லாத ஒலிக்குரிய எழுத்துகள் குறைக்கப்பட்டன.

சொல் வடிவத்திலும் திருத்தம் செய்யப்பட்டன (Ferguson, 1977; 10). இங்கு அரசியல் புரட்சிக்கு ஏற்ப சொல்லெழுத்தில் மாற்றம் ஏற்பட்டது.

3.4.5. நார்வீஜியன்

நார்வீஜிய மொழியில் நடந்த மொழித் திட்டமிடுதலும் மொழிப் போராட்டமும் உலகப்புகழ் பெற்றது. ஏனெனில் அதுபற்றி விரிவாக ஆராயப்பட்டு நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

15-ஆம் நூற்றாண்டு முதல் 10-ஆம் நூற்றாண்டு வரை நார்வேயும் டென்மார்க்கும் சேர்ந்து ஒரு தேசமாக இருந்தது. 1814-இல் தான் நார்வே தனி தேசமாக அமைந்தது. அப்போது நார்வீஜிய மொழி என்பது டேனிஷ் சொல்லெழுத்தும் இலக்கணக் கூறுகளும் கொண்டு, சொற்களஞ்சியத்தில் மட்டும் மாறுபட்டு இருந்தது. அதாவது டேனிஷ் மொழிக்கும் நார்வீஜிய மொழிக்கும் அதிக வேறுபாடு இல்லாமல் இருந்தது. தேசத்தின் தனித்தன்மையைப் பிரதிபலிக்கும் வகையில் வேறுபட்ட நார்வீஜிய மொழியை உருவாக்கும் வேலையில் அறிஞர்கள் ஈடுபட்டார்கள். இந்த முயற்சியினால் இரண்டு விதமான மொழி உருவாக்கப்பட்டது. ஒன்று: கிராமப்புற மக்களின் பேச்சு-சிறப்பாக மத்திய, மேற்கு பகுதிகளில் வாழ்ந்த மக்களின் பேச்சை ஒட்டிய பழைய நார்வீஜிய மொழியின் இலக்கண அமைப்பைத் தழுவி லாண்ட்ஸ்மால் (Lands mal) என்ற மொழி உருவாக்கப்பட்டது. இதில் பிற மொழிச் செல்வாக்கு குறைவு; மொழித் தூய்மையும் சிறப்பாக வற்புறுத்தப் பட்டது. மற்றொன்று: நகர்ப்புற மக்களின் பேச்சை ஒட்டி அமைந்த ரிக்ஸ்மால் (Ricksmal) 'தேசிய மொழி' என்பது. இதில் பேச்சு வழக்கில் இருந்த பிறமொழிக் கூறுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இந்த இண்ரடு வகை மொழிபற்றியதே நார்வீஜி மொழிப் போராட்டம். இரண்டும் காலஞ் செல்ல செல்ல சிலமாற்றங்களை ஏற்றுக்கொண்டன; எனினும்,இரண்டில் எதைத்தேசிய மொழியாக ஏற்றுக் கொள்வது என்பதற்கு இதுவரை அந்த நாடு விடைகாண வில்லை. ஆயினும், அரசாங்கம் இதுவரை நான்கு தடவை 1907, 1917, 1938, 1959 ஆகிய ஆண்டுகளின் எழுத்துத் திருத்த முயற்சி மேற்கொண்டுள்ளது. 1964-இல் அரசு பொதுவான அடிப்

படையான, மொழித் தொடர்பான வேலைகளைச் செய்ய ஒரு குழு அமைத்தது. அதன் ஆலோசனைப்படி புதிய நார்வீஜிய மொழி வாரியம் (The Norwegian Language Commission) 1972 இலிருந்து அமைக்கப்பட்டு வேலை செய்து வருகிறது. இதுவரை அரசு மேற்கொண்ட முயற்சியினால், மொழியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை மறுக்க முடியாது. அந்தமாற்றம் பேச்சு மொழியை ஒட்டி அமைக்கப்பட்டு, ஜனநாயகப் பண்பு நிறைந்து விளங்குவதையும் காணலாம். மொழியின் திட்டமிட்ட வளர்ச்சியால் சொல்லெழுத்து மாற்றம் கொஞ்சம் சீக்கிரமாகவே வந்து விட்டது.[10]

3.4.5. டச்சு

டச்சு மொழியிலும் பலதடவை சொல்லெழுத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளதை அந்த மொழிவரலாறு காட்டுகிறது.

3.4.6. வங்காளம்

இந்திய மொழிகள் சிலவற்றில் முறையில் மொழி மாற்றம் குறிப்பாக இலக்கிய நிலை மொழியிலும் சொல்லெழுத்து, சொற்களஞ்சியம் ஆகியவற்றிலும் நடைபெற்றுள்ளது. அவற்றின் வங்காள மொழியில் இந்த நூற்றாண்டு ஆரம்பத்தில்தான் ஏற்பட்டு விட்டது; தெலுங்கு மொழியில் மிக சமீபகாலத்தில்தான் ஏற்பட்டுள்ளது. மலையாளத்தில் அதன் எழுத்துத் திருத்தத்தை ஒட்டிச் சிலவகை சொல்லெழுத்துகள் மட்டும் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

---

10 If we compare the nineteentn century orthography of each standard to that of today, we find steady progress in democratization and in conformity to spoken language by which everybody, and especially the young generation, has benefitted: It is open to debate how much of this would have come any way by 'natural development' but it would certainly have come later rather than sooner.'

Dog Gundersen, 1977:261.

புதுமையாக்கத்தால் வங்காள மொழி 19-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே தாக்கப்பட்டுள்ளது. 1800-இல் கல்கத்தாவில் ஃபோர்ட் வில்லியம்ஸ் கல்லூரி வங்காள மொழி கல்விக்கும் வளர்ச்சிக்கும் பெரிய அளவில் துணைநின்றது. வங்காள மொழிகற்ற ஆங்கிலேயர்கள் எல்லா மக்களுக்கும் புரியும் படியான எளிய மொழியில் நூல்கள் எழுதினார்கள். பொதுவாக வங்காளத்தில் கற்றவர் எனப்படுவோர் வடமொழி கற்றவர்களே. அவர்கள் பயன்படுத்திய வங்காளமொழி வடமொழிச் செல்வாக்கும் பழைய இலக்கிய மொழிச் செல்வாக்கும் கொண்டது. மாறாக ஆங்கிலேயரும் ஆங்கிலக்கல்வி கற்ற வங்காளிகளும் பேச்சு மொழியை ஒட்டிய நடையில் எழுத ஆரம்பித்தார்கள். இதுவே சாலித் பாஷா (Calit bhasa) (பேச்சு மொழி) என்று பெயர்பெறும். ஏனையோர் எழுதிய மொழி சாது பாஷா (Sadhu bhasa) (இலக்கிய மொழி) என்று பெயர்பெறும். ஆனால், நவீனங்களும் பிற புதியதுறை இலக்கிய முயற்சிகளும் சாலித் பாஷாவில் எழுதப்படுகின்றன. பிரமதா சவுத்திரி என்பவர் இந்த நூற்றாண்டில் சாலித் பாஷாவிலே இலக்கிய முயற்சிகளை மேற் கொண்டார். ரவீந்திரநாத் தாகூர் இந்த மொழியைக் கை யாண்டதும் தான் அது கவுரவம் பொருந்தியதாகக் கருதப்பட்டது. 1901-2 இல் தாகூர் எழுதிய கோரே பாய்ரே (Ghore baire) என்ற நாவலில் சாலித் பாஷா முழுவளர்ச்சி பெற்றது. இப்போது பலரும் சாலித் பாஷாவையே இலக்கிய மொழியாகப் பயன்படுத்தி வருகிறார்கள்.

சாலித் பாஷாவுக்கும் சாது பாஷாவுக்கும் எழுத்தியல், சொல் லியல், சொற்களஞ்சியம் ஆகியவற்றில் வித்தியாசம் உண்டு. சாது பாஷா பழைய எழுத்து மொழியோடு பழங்கால இலக்கணக் கூறுகளையும் உடையது.

வினைச்சொல்	**சாதுபாஷா வடிவம்**	**சாலித்பாஷா வடிவம்**	
நிகழ்கால முற்று	čɔli (சொலி)	čɔli (சொலி)	நடக்கிறேன்
இறந்தகால முற்று	čɔlilam (சொலிலம்)	čɔllam (சொல்லம்)	நடந்தேன்

செயின் வாய்பாட்டு எச்சம்	čclitam (சொலிதம்)	čɔltam (சொல்லம்)	நடந்தால்
செய்தாலும் வாய்பாட்டு எச்சம்	čɔliya (சொலிய)	čɔle (சொலெ)	நடந்தாலும்

பெயர்ச்சொல்

எழுவாய்	amra (அம்ர)	amra (அம்ர)	நாங்கள்
6-ம் வேற்றுமை	amadiger (அமதிகர்)	amader (அமதெர்)	நம்முடைய
2-ம் வேற்றுமை	amadigɔke (அமதிகொகெ)	amader (அமதெர்) amadike (அமதிகெ) amaderke (அமதெர்கெ)	நமக்கு

3.4.7. ஆங்கிலம்

ஆங்கிலமொழி ஒரு பன்னாட்டு மொழி. பிரிட்டிஷ் ஆங்கிலத்துக்கும் அமெரிக்க ஆங்கிலத்துக்கும் சொல்லெழுத்திலும் சொற்களஞ்சியத்திலும் வேறுபாடு உண்டு. சொல்லெழுத்தைப் பொறுத்த வரையில் கீழ்கண்டவை முக்கியமானவை:—

	பிரிட்டிஷ் ஆங்கிலம்	அமெரிக்க ஆங்கிலம்
our = or	favour	favor
	colour	color
ogue = og	dialogue	dialog
ce = se	difference	differense
	offence	offense
re = er	calibre	caliber
	centre	center

முதலியன.

பொதுவாக இந்தச் சொல்லெழுத்து மாற்றங்கள் அமெரிக்க தேசத்தின் தனித்தன்மையைக்காட்டும்படியாக அமைக்கப்பட்டவை.

அமெரிக்கரின் ஆங்கிலத்தைப் பிரிட்டிஷார் இகழ்வாகக் கருதியதை எதிர்த்துத் தங்களுக்கும் உரிய தாய்மொழி என்பதை நிலை நாட்டும் வகையில் நோவெப்ஸ்டர் (Noah webster) என்ற அகராதி ஆசிரியர் பல மாற்றங்களைப் புகுத்தினார். மென்கன் (Menchen) என்பவர் எழுதிய 'அமெரிக்க மொழி' என்ற மிகப் பெரிய நூல் வெளிவந்ததும் அமெரிக்க மொழியின் தனித்தன்மை யின் பெருமை உயர்ந்தது.

இந்த நிலையில் ஆங்கில மொழியில் எழுத்துத்திருத்தம் ஏன் வெற்றிபெறவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தகுந்தது. ஆங்கில மொழியின் ஒலியன் எண்ணிக்கைக்கும் எழுத்து எண்ணிக் கைக்கும் அதிக வேறுபாடு உண்டு. 45 ஒலியன்கள் உள்ள அந்த மொழியில் 26 எழுத்துகளே உள்ளன. அதிலும் சில எழுத்துகள் அவசியம் இல்லாமல் இருக்கின்றன. எனவே, எழுத்து எண்ணிக் கையில் மாற்றமும் பெரிய அளவில் திருத்தம் மேற்கொள்ள வேண்டிய அவசியமும் இருக்கிறது. ஆனால், முன்னரே மொழியைக் கற்றவர்களுக்கு அதிக தொல்லை தருவதாக அமையும். இப் பொழுது இருக்கிற எழுத்து வடிவம் கல்வி நோக்கிலும், தொழிலியல் நோக்கிலும் (அச்சுக்கு) சுலபமானது. ஆங்கில மொழியின் சொல்லெழுத்தில் எழுத்துக்கும் உச்சரிப்புக்கும் வேறு பாடு இருப்பதற்குப் பிரெஞ்சு, லத்தீன் போன்ற மொழிச் சொற் களைக் கடனாண்ட போது அந்த மொழியில் வழங்கிய சொல் லெழுத்தைஅப்படியே ஏற்றுக்கொண்டதுதான் காரணம். இதனால் அந்த மொழியின் இன உறவு கூட மாறிவிட்டதாகக் கருது கிறார்கள் (Baugh, 1935). இந்திய ஐரோப்பிய மொழிக் குடும் பத்தில் ஆங்கிலம் ஜெர்மானிக் பிரிவைச் சார்ந்தது. ஆனால் இன்று ரோமன் அல்லது லத்தீன் பிரிவைச்சேர்ந்த மொழியோடு ஒற்றுமை மிகுந்து அதனால் மேற்கு ஐரோப்பாவில் பல மொழி பேசுவோருக்கும் ஆங்கில எழுத்து மொழி எளிதாக இருக்கிறது.

ஒரு மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் ஆரம் பத்தில் எழுத்து மொழியைக் கற்றுக் கொள்வது கொஞ்சம் கடினம். எழுத்து மொழி தொழிலியல் நோக்கிலும் கையெழுத்து நோக்கி லும் எளிமையானது. கல்வி நோக்கில்தான் கடினமானது. அதை

எளிமைப்படுத்த பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று ஆரம்பக் கல்வி நெடுங் கணக்கு (Initial teaching alphabet) என்பது. அதன்படி முதலில் சொல்லிக் கொடுத்துப் பின்னால் சாதாரணமாக வழக்கத்தில் உள்ள சொல்லெழுத்து களைச் சொல்லிக் கொடுக்கும் முயற்சி காணப்படுகிறது. ஆங்கிலம் ஒரு பன்னாட்டு மொழியாய் இருப்பதும் அளவுக்கு அதிகமாய் நூல்கள் வெளியாவதும் அடிப்படையான சொல்லெழுத்து மாற்றம் மேற்கொள்ளத் தடையாக இருக்கிறது. எனவே, ஆங்கில மொழியில் எழுத்துத் திருத்தம் வெற்றி பெறாததற்குப் பழமையைப் போற்ற வேண்டும் என்பது மட்டும் காரணம் அல்ல; மொழியின் தேசிய நிலைமையும், வரிவடிவும் கையெழுத்துக்கும் தொழிலியல் தேவைக்கும் எளிமையாக இருப்பதும், இன்று உலக மொழியாகப் பயன்படுவதும்தான் தடையாக இருக்கின்றன. ஆயினும் எழுத்துத் திருத்தம்பற்றிய முயற்சி இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக நடைபெற்று வந்து கொண்டிருக்கிறது என்பதும் குறிப்பிடத் தகுந்தது.

3.5. தமிழ் மொழியின் நிலை

உலகில் பல மொழிகளில் நடைபெற்ற எழுத்துத் திருத்தம் பற்றி அறிந்து கொண்டது தமிழ்மொழியில் உள்ள பிரச்சனையை அறிவியல் நோக்கோடு அணுகி விடை கண்டு செயல்படுத்த உதவும். தமிழில் வரிவடிவு மாற்றம், வரிவடிவு திருத்தம், எழுத்து எண்ணிக்கை மாற்றம், சொல்லெழுத்து மாற்றம் ஆகிய நான்கிலும் தேவைப்படும் திருத்தம் விவாதத்திற்கு உரியதாக உள்ளது.

3.5.1. வரிவடிவு மாற்றம்

தமிழ்மொழி வரலாற்றில் பாண்டிய நாட்டில் மட்டும் ஒரு வடிவு மாற்றம் நடைபெற்றதை மேலே குறிப்பிட்டோம். இந்த நூற்றாண்டு ஆரம்ப முதல் மற்றொரு வடிவு மாற்றம் சிலரால் ஆதரிக்கப்பட்டு வருகிறது. ராஜாஜி, பெரியார் ஈ.வெ.ரா. ஆகியோர் ரோமன் வடிவங்களைக் கையாளுவதில் அக்கறை காட்டியிருக்கிறார்கள். மு. வரதராசனாரும் முதலில் அந்தக் கருத்தை ஆர்வத்தோடு முயற்சி செய்து பார்த்திருக்கிறார் என்பது

டாக்டர் மா.ரா.பொ. குருசாமி (கோவை) என்னிடம் ஒரு உரையாடலின் போது குறிப்பிட்டார். இப்படி இன்னும் சிலர் ரோமன் எழுத்துகளை ஏற்றுக்கொள்வதில் ஈடுபாடு கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள். அவர்களுள் டாக்டர் குழந்தைசாமி (இன்றைய அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர்) அதிக ஆர்வம் காட்டியதோடு ரோமன் எழுத்தை ஏற்றுக்கொள்வதால் ஏற்படும் நன்மைகளும், தீமைகளைத் தவிர்க்கும் முறையும், ஏற்றுக்கொள்ளத் தடையாய் இருக்கும் உணர்வு பற்றியும் விரிவாகவே விளக்கியுள்ளார் (1978:29-35). அவர் கருத்துப்படி எழுத்துகளைத் தழுவுவதால் ஏற்படும் நன்மைகளும் தீமைகளும் வருமாறு:

நன்மைகள்

1. ''ரோமன் வரிவடிவம் எழுதுவதற்கும் கற்பதற்கும் மிக எளியது.
2. இந்த விஞ்ஞான யுகத்தில் ஆங்கிலத்தை நமது சமுதாயத்தில் கணிசமான பகுதியினர் என்றுமே கற்றாகவேண்டும். எனவே இருவரிவடிவங்களைக் கற்கும் தேவை குறையும்.
3. ஆங்கிலம், தமிழ் இரண்டிற்கும் ஒரே அச்சு ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். உலகின் எந்தப்பகுதியிலும் தமிழ் தட்டச்சும் தமிழ் பதிப்பீடும் எளிதாகிவிடும். இது தமிழ் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரியும்.
4. பிற மொழியினர் தமிழைக் கற்பதற்கும் தமிழர் பிற மொழியைக் கற்பதற்கும் எளிது.
5. அறிவுத்துறை நூல்களில் ஏராளமான குறியீடுகளும், எண்ணிறந்த வாய்பாடுகளும் (formulae), சமன்பாடுகளும் (equations) தேவைப்படுகின்றன. அவற்றைப் பயன்படுத்துவதற்கு ரோமன் எழுத்து சாதகமாக அமையும்.

தீமைகள்

1. இன்றைய வரிவடிவத்தில் ஏராளமாக உள்ள தமிழ் நூல்கள், சுவடிகள் முதலியவற்றை ரோமன் எழுத்தில் பதிப்பிக்க முடியாது. அப்படி முயல்வதும் பெருஞ் செலவுக்கும் காலவிரயத்துக்கும் காரணமாகிவிடும்

2. தமிழ் பேசும் பிற பகுதிகளில் (ஸ்ரீலங்கா, சிங்கப்பூர்) ரோமன் எழுத்துகளைப் பயன்படுத்துவார்கள் என்று சொல்வதற்கில்லை. எனவே, தமிழ் மக்களிடையே வரி வடிவத்தில் இருக்கும் தொடர்புக்கு ஊறு நேர்ந்துவிடும்
3. நம்முடைய வரிவடிவம் என ஒன்று இல்லாது போய் விடும்.
4. பிறமொழிச் சொற்கள் தமிழில் அதிகமாகக் கலப்பதற்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடும்.

ரோமன் எழுத்துகளை நீண்டகாலத் திட்டமாகப் பரப்பலாம். பெரும்பாலும் உயர்நிலைப் பள்ளியின்போது ரோமன் எழுத்து களைப் பயன்படுத்த ஆரம்பிக்கலாம். பல்கலைக்கழக மட்டத்தில் அறிவியல், தொழிலியல் போன்ற அறிவுத்துறைகளில் மட்டும் தமிழ் நூல்கள் ரோமன் எழுத்துகளில் வெளியிடப்படலாம். எனவே இரண்டு வடிவங்களும் பலகாலம் பழக்கத்தில் இருக்கும். பிற நாட்டில் வாழும் படித்த தமிழர்களுக்கு ரோமன் எழுத்து பழக்க மானதால் அவர்கள் அறிவியல் நூல்களை எளிதில் படிக்கமுடியும்.

வரிவடிவம் பொதுவாக எல்லா மொழிகளுக்கும் காலத்துக்குக் காலம் மாறியே வந்திருப்பதால் நமது வரிவடிவம் என ஒன்று மில்லாமல் போய்விடும் என்பது அவ்வளவாகப் பாராட்டப்பட வேண்டிய ஒன்று அல்ல.

இன்று பரவலாகக் கல்வியறிவு பெருகி மொழிவளர்ச்சி பொது மக்கள் மன்றத்திற்கு வந்துவிட்டது. இனி யாரும் எளிதில் மொழிக்கு ஊறுசெய்யும் கூறுபாடுகளைத் திணிக்கமுடியாது. இந்தப் பிரச்சனையில் வரிவடிவம் முழுக்க முழுக்கத் தொடர்பு இல்லாதது என்று கூறமுடியாவிட்டாலும், அதற்கு முக்கிய இடம் இல்லை. பிற சொற்கள் புகுவது, நாம் ஏற்றுக்கொள்ளும் ஒலியைப் பொறுத்தது தானே தவிர எழுத்தைப் பொறுத்தது அல்ல. இன்றுவரை வழக்கத்தில் இல்லாத ஒலிகள் எதுவும் தமிழ் மொழியின் வழக்கத்தில் ரோமன் வரிவடிவத்தை ஏற்பதாலேயே தானாகக் குடியேறிவிடப் போவதில்லை.''

இப்படிக் குழந்தைசாமி (1988) தீமைகளாகக் கருதப்படு வதற்குச் சமாதானங்களும் விளக்கங்களும் தந்துள்ளார்.

பொதுவாக ரோமன் எழுத்து என்றால் ஆங்கிலத்தில் உள்ளது போல எழுத்துக்கும் உச்சரிப்புக்கும் நேரடித் தொடர்பு இல்லாமல் ஒரு எழுத்து ஒன்றுக்கு மேற்பட்ட ஒலியைக் குறிப்பதும் ஒரு ஒலி ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்தால் எழுதும் முறையும் ஏற்பட்டு விடுமோ என்று பலர் அச்சம் தெரிவித்துள்ளார்கள். (உதாரணம், சிவராம கிருஷ்ணன் 1978) அது பற்றியும் குழந்தைசாமி விளக்கி யுள்ளார்.

அது ஆங்கில மொழியில் உள்ள தனிப்பட்ட பிரச்சனை. ரோமன் வடிவத்தின் குறைபாடு அல்ல. மேலும், ஜெர்மன்மொழி ரோமன் எழுத்தில் எழுதப்படுகிறது. அங்கு சொற்கள் எழுதப்படுவதற்கும் உச்சரிப்பதற்கும் தமிழைவிடச் சற்று அதிகமான தொடர்பு இருக் கிறது. ரோமன் எழுத்தில் எழுதப்படும் இந்தோனேஷிய மொழியில் எழுத்துக்கும் உச்சரிப்புக்கும் வேறுபாடு இல்லாமல் அமைத்துக் கொண்டுள்ளார்கள் (Shanmugam 1978: 38). எனவே, ரோமன் எழுத்தை ஏற்றுக்கொண்டாலும், நாம்தான் நம்முடைய மொழி இயல்புக்குத் தகுந்தபடி ஒரு எழுத்துக்கு ஒரு உச்சரிப்பு என்ற முறையில் அமைத்துக்கொள்ளலாம்; கொள்ளவேண்டும்.

இன்றும் தமிழ் அறிஞர் சமூகம் எழுத்து மாற்றத்தைப் பற்றிச் சிந்திக்ககூடத் தயாராக இல்லை. எழுத்துத் திருத்தத்துக்கே ஒரு சிலர் மிகக் கடுமையான முறையில் போர்க்கொடி உயர்த்தியதை நினைத்தால், அவர்களுடைய மனநிலையைப் புரிந்து கொள்ளலாம்.

தமிழைப் பிற மொழியினருக்குக் கற்பிப்பதற்கும் தமிழ் மொழி ஆராய்ச்சிக்கும், ரோமன் எழுத்து இன்று பயன்பட்டுவருகிறது. பேச்சு மொழியைக் குறிக்க இன்றும் சில எழுத்துகள் தேவைப் படுகின்றன. அவற்றைப் பயன்படுத்துவதில் இன்னும் ஒரு நெறி முறை காணப்படவில்லை. அதை உடனடியாக மேற்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

பொதுவாக ரோமன் எழுத்துகளை மாற்று வரிவடிவமாகப் பயன்படுத்தும் முறையாவது சிந்திக்கப்பட வேண்டும் என்று குழந்தைசாமி இன்னொரு கட்டுரையில் கூறியுள்ளார் (1979:66). அது தமிழ் மொழி ஆராய்ச்சிக்கும், பிறமொழியினருக்குக் கற்பிப்

பதற்கும், நூல் நிலையங்களில் அட்டவணை தயாரிக்கவும் பொது நிலையங்களில் தமிழ் எழுத்தோடு பிற மொழியினருக்காக ரோமன் எழுத்தைப் பயன்படுத்தவும் உதவியாக இருக்கும்.

3.5.2. வரிவடிவத் திருத்தம்

இப்போது தமிழக அரசு அறிவித்த எழுத்துச் சீர்திருத்தம் 13 எழுத்துகளின் வரிவடிவத்தைப் பாதித்துள்ளது. அதாவது அவைகளின் வரிவடிவம் அந்தந்த உயிர் மெய்களின் எழுத்துகளில் பெரும்பான்மையாகக் காணப்படும் முறையே எல்லா உயிர் மெய்க்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. அப்படியே இ, ஈ, உ, ஊகார உயிர் மெய்களில் வரும் உயிர்க்குரிய துணை எழுத்தை மாற்றுவது பற்றிப் பல யோசனைகள் சொல்லப்பட்டு வருகின்றன. இகர ஈகாரத்தைப் பொறுத்த வகையில் அதற்குரிய குறிகளைத் தனியே மெய்யெழுத்துக்குப் பக்கத்தில் எழுதும்படிச் செய்யலாம் என்பதே பலருடைய யோசனை. அது அரசு ஆணையாக்கப்பட வேண்டும்.

உகர ஊகாரத்தைப் பொறுத்தவரையில் முறையே ு, ூ என்ற குறிகளைப் பயன்படுத்தலாம் என்று பலரும் ஆலோசனை சொல்லியுள்ளார்கள். கொடுமுடி சண்முகம் அந்தக் குறியீடுகளையும் இன்னும் இரண்டுவகைக் குறியீடுகளையும் 2000 பேரிடம் கருத்துக் கணிப்பு நடத்திப் பார்த்துள்ளார். அதில் 80 விழுக்காடு ு, ூ என்ற குறிகளையே தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளார் (கொடுமுடி சண்முகம், 1979).

ஆனால் அவரே 'இந்தக் குறிகள் வடநாட்டில் இல்லை. வடமொழியிலும் இல்லை; இருந்தாலும் தமிழில் வடமொழி எழுத்துகளை (ஏன், ஜூன். ஜூலை போன்ற ஆங்கில எழுத்துகளையும்) எழுதப் பயனாகின்றதே என்ற களங்கம், நெஞ்சை உறுத்துகிறது'' (1979:37) என்று கூறுகிறார். இப்படிப்பட்ட தயக்கம் இன்னும் சிலருக்கு இருக்கிறது.

'தமிழர்கள் தமிழ் மொழியில் வடமொழியின் வல்லாணமை கூடாது என்று கருதுகின்றார்கள். வடமொழியின் ஆட்சி தமிழ்

மொழியில் ஏற்படுமோ என்று தமிழர்கள் அஞ்சுகிறார்கள். என்னால் அதனை ஆதாரமற்ற அச்சம் என்று எவ்வாறு குறிப்பிட முடியும்? வடமொழிக்குரிய உகர ஊகர ஓசைக் குறியீடுகளாகிய ு, ூ இவற்றைத்தான் தமிழில் சேர்த்துப் புதிய உகர ஊகர ஓசையை உடைய எழுத்துகளை உண்டாக்க முடியுமா? அவையின்றி வேறு வகையில் எண்ணக்கூடாதா? என்ற கேள்விகள் எல்லாம் எழுகின்றன''

என்று உலகநாதன் கூறும்போது (1978 : 15) வெளிப்படும் உணர்ச்சி, கொடுமுடி சண்முகம் மேலே குறிப்பிட்ட உணர்ச்சியோடு ஒற்றுமை உடையது என்பது வெளிப்படை.

இந்த நூற்றாண்டில் முதல் கால் பகுதியில் இருந்த மொழி உணர்வின் பிரதிபலிப்பே இது. இன்றைய அரசியல், சமூகப் பண்பாட்டு நிலையிலும் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. அறிவுத்துறையில் சிறப்பாக மொழித்துறையில் நடைபெற்ற ஆராய்ச்சியால் பல புதிய உண்மைகள் புலப்பட்டுவிட்டன. சேனாவரையர் போன்ற உரையாசிரியர்கள் வடமொழி பிறமொழிச் சொற்களைக் கடனாளாது என்ற கருத்து உடையவர்களாக இருந்தார்கள். இன்று, ருக் வேதத்தில்கூட திராவிட மொழிச் சொற்கள் (Burrow, 1955) இருக்கின்றன என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இரண்டு மொழிகள் ஒரே நிலப்பகுதியில் வழங்கும் போது ஒன்றுக்கு ஒன்று கொண்டும் கொடுத்தும் இருப்பது இயல்பானதே. எனவே, நாம் இன்று அந்தக் குறியீடுகள் வட மொழி சொற்களை எழுதப் பயன்பட்ட காரணத்தைக் கருதித் தமிழுக்கு ஏற்றுக்கொள்ளத் தயங்க வேண்டியதில்லை. உலகில் வாழும் பிற சமூகத்தினரைப் போலவே தமிழ்ச் சமூகமும் பிறமொழியாளரின் ஆயிரக்கணக்கான கண்டுபிடிப்புகளையும் பிற சமூகத்தின் சில பழக்க வழக்கங்களையும் ஏற்றுக்கொண்டுள்ளது என்பதை மறந்துவிடக் கூடாது. பல மொழிகள் பிறமொழி எழுத்துகளை அப்படியே கடனாண்டு தேசிய வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்துக்கும் பயன்படுத்திக் கொண்டுள்ளன என்பது மேலே விளக்கப்பட்டதையும் மறந்துவிடக் கூடாது. எழுத்து வடிவை அச்சுக்கு எளிதா, கையெழுத்துக்கு சுலபமா, எல்லோரும்

எளிதில் மாற்றத்தைப் புரிந்து கொள்வார்களா? என்ற கேள்விகளைக் கேட்டு அவைகளின் அடிப்படையில் ஏற்கவோ, தள்ளவோ செய்யவேண்டும்.

இன்றைய தமிழ் எழுத்தில் இன்னும் செய்யவேண்டிய மாற்றங்களைச் செய்ய அறிஞர்களும் அரசும் முன்வரவேண்டும்.

3.5.3. எண்ணிக்கை மாற்றம்

கிரந்த எழுத்துகளை ஏற்றுக் கொள்ளுவதா? இல்லையா என்ற ஒரு கேள்விக்கு இன்னும் விடை கண்டபாடில்லை. இன்றைய பேச்சுத்தமிழில் புதிய ஒலியன்களாக அமைந்துள்ள ஒலிப்புடைய வல்லொலியன்கள் போன்றவற்றைக் குறிக்க புதிய வரிவடிவங்களைச் சமைத்துக் கொள்வதா அல்லது குறியீடுகளைக் கொண்டு அவைகளைக் குறிப்பதா என்ற பிரச்சனைக்கும் வழிகாண முன்வர வேண்டும்.

தமிழில் பெரும்பாலானோர் கையாளும் எழுத்துகளின் எண்ணிக்கையைப் புறக்கணித்துப் பழைய இலக்கணத்தில் கூறப்பட்ட எண்ணிக்கையே போதுமானது என்பது தமிழின் புதிய புதிய தொழிற்பாட்டையும் இன்றைய தமிழின் தேவைகளையும் புறக்கணிப்பதாகும்; மொழிப் பயன்பாட்டைச் சுருக்குவதாகும். தான் வாழும் காலத்தை மறந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வாழும் மனநிலை ஆகிவிடும்.

3.5 4. சொல்லெழுத்து மாற்றம்

தமிழ் நூல்களில் சொல்லெழுத்து உறழ்ச்சி ஓரளவு காணப்படுகிறது. கலைச்சொல்லாக வழங்குவதைத் தவிரப் பொதுச்சொற்களிலும் பேச்சு மொழியில் ஏற்பட்ட மாற்றத்தின் பிரதிபலிப்பாகப் புதிய சொல்லெழுத்துகளைப் பார்க்கமுடிகிறது. அவைகளைக் கண்டித்துச் சில நூல்களும் வெளிவந்துள்ளன. இன்று தமிழ் எழுதுவோர் எல்லோரும் இலக்கிய இலக்கணம் படித்துப் பட்டம் பெற்றவர்கள் அல்ல; மேலும், பழைய நூலில் இல்லாத சொற்களையும் புதிய புதிய செய்திகளைக் குறிக்கும் சொற்களையும் எழுதவேண்டியுள்ளது. எனவே, அப்படிப்பட்ட சொற்களைத் தொகுத்து அவைகளின் எந்த வடிவத்தை நிலையாக்கம் செய்யலாம் என்று முடிவு செய்யவேண்டும்.

இன்னொரு வகையான சொல்லெழுத்து விஞ்ஞானத் தொழில் நுட்ப கலைச்சொற்கள் பற்றியது. இதில் இரண்டு விதமான பிரச்சனைகள் இருக்கின்றன. பிறநாட்டு அறிஞர்களின் பெயரைத் தமிழில் எழுதும்பொழுது எந்தவித உச்சரிப்பைக் கொள்வது? இதுபற்றி கா. மீனாட்சிசுந்தரம் கூறுவது இங்குக் குறிப்பிடத் தகுந்தது: (1976:26).

''அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆங்கில நாட்டுக்கு மட்டும் உரியதல்ல. செர்மானியர், இத்தாலியர், பிரெஞ்சுக்காரர் போன்றவர்கள் கண்ட உண்மைகளை அவரவர்கள் மொழியிலேயே எழுதியுள்ளார்கள். பிறகு அவைகள் ஆங்கிலத்தில் பெயர்க்கப்பட்டுள்ளன. அப்படிப் பெயர்க்கப்படும்போது அந்தந்த மொழிக்குரிய ஒலியோடு அவை பெயர்க்கப்பட்டுள்ளன என்று சொல்ல இயலாது. கலிலியோ (Galilio) என்பவர் இத்தாலி நாட்டினர். இத்தாலி மொழியில் இச்சொல் காலிலீயோ என்றும் காலில்யோ என்றும் இருவகையாக ஒலிக்கப்படுகிறது. அப்படியானால் இந்தச் சொல்லை எந்த உச்சரிப்புப்படி பெயர்ப்பது? இதேபோல்தான் ஐன்ஸ்டைன் என்ற பெயரும். ஐன்ஸ்டையன் எனவும் ஈன்ஸ்டீன் எனவும் அயன்ஸ்டீன் எனவும் உச்சரிக்கப்படுகிறது அல்லவா?'' என்பதே அவருடைய வாசகம்.

நாட்டுக்கு நாடு உச்சரிப்பு வேறுபடுவது இயல்புதான். இன்று நம்முடைய பிறமொழி உச்சரிப்பு ஆங்கில வழியாகத்தான் ஏற்பட்டுள்ளது. அதுவும்கூட இந்திய உச்சரிப்பு என்ற பொதுவான ஆங்கில உச்சரிப்பு ஒன்று காணப்படுகிறது என்பதையும் உணர்ந்து கொள்ளவேண்டும். அதையொட்டியே இன்று பிறமொழிப் பெயர்களை நாம் உச்சரிக்கிறோம்; அந்த உச்சரிப்பை யொட்டியே எழுதுகிறோம். முதலில் தமிழர்கள் அனைவரும் ஒரேவிதமாக எழுதவேண்டும். அது இந்தியாவின் பிறபகுதியினர் உச்சரிப்புக்கு அதிகம் மாறுபடாமல் இருக்கவேண்டும். அதன் பின்னரே அனைத்துலக உச்சரிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

பொதுவாக, ஒரு தேசிய மொழி இருக்கும்போது அங்குள்ள பிராந்திய மொழிகளில் உள்ள பிறமொழிச் சொற்கள் தேசிய

மொழியின் உச்சரிப்பையும் சொல்லெழுத்தையும் ஒட்டியே இருக்கும். ரஷ்யாவில் உள்ள டர்கிக் மொழிகளின் உச்சரிப்பு ரஷ்ய மொழிகளின் உச்சரிப்பை ஒட்டியே அமைக்கப்பட்டுள்ளது[11]. ஆனால் பலதேசிய மொழிகளும், ஆட்சி மொழி இரண்டாகவும் உள்ள நம் தேசத்திலும் கூட உச்சரிப்பில் கூடிய வரையில் பொதுமை காண வேண்டும். ஒரு தேசத்தில் வாழும் ஆராய்ச்சியாளர்களிடையே தொடர்பு அதிகம் இருக்கும். ஒரு பகுதியில் செய்யப்படும் ஆய்வு தேசிய அளவில் ஒப்புதல் பெறுவதற்குக் கலைச்சொற்களில் ஒற்றுமை ஏற்படுத்துவதும் அவசியம். எனவே தேசிய அளவில் உச்சரிப்பு ஒற்றுமையும் சொல்லெழுத்து ஒற்றுமையும் இருப்பது நல்லது.

இன்றும் விஞ்ஞானிகளால் மட்டும் கையாளப்படுகிற சொற்களின் உச்சரிப்பை மூலமொழியை ஒட்டியும், பொதுவாகப் பலரும் பயன்படுத்தும் சொற்களின் சொல்லெழுத்தைப், பெரும்பாலான படித்தவர்கள் பேச்சின் அடிப்படையிலும் அமைக்கலாம். இன்றைய விஞ்ஞானத்தமிழுக்கு உரிய கலைச்சொற்கள், விஞ்ஞானிகளின் பெயர் ஆகியவற்றை எழுதும் சொல்லெழுத்து முறையையும் வரையறுப்பது அவசியம்.

3.5.5. தமிழில் எழுத்துத் திருத்தத்தின் அவசியம்

தமிழ் எழுத்துத்திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு மூன்று முக்கிய காரணங்கள் இருக்கின்றன. ஒன்று: எழுதுகருவி, எழுத்து பரப்பும் முறையில் மாற்றம். இரண்டு: தமிழ் மொழி சமூக தொழிற்பாட்டிலும் மொழிப்பயனிலும் மாற்றம்; மூன்று: அரசியல், சமூகப்பண்பாட்டில் மாற்றம். இந்த மூன்றும் வளரும் மொழி பலவற்றுக்கும் பொதுவானதே.

---

11 He (Baskakov, the eminent Sovist Turcolosist) also outlined a number of measures necessary for the improvement of existing alphabets and standardization of spelling and went so far as to suggest that the alphabets of the various Turkic languages be co-ordinated to bring them as possible to Russian and thus remove present inconsistancies.

Henze, 1977:384.

அச்சு, தட்டச்சு, தொலையச்சு முதலிய கருவி மாற்றத்தால் செய்ய வேண்டிய எழுத்துத்திருத்தம் பலராலும் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. கிருஷ்ணமூர்த்தி, கொடுமுடி சண்முகம், குழந்தைசாமி ஆகியோர் இது சம்பந்தமாகப் பல உண்மைகளை எடுத்துக்கூறி யுள்ளார்கள். எனவே, மொழித் தொழிற்பாட்டின் மாற்றத்தை மட்டும் இங்குப் பார்ப்போம்.

தமிழ்மொழி இதுவரை பயன்பட்டுள்ள துறை மிகக் குறைவானது. இலக்கியம், இலக்கணம், சமயம், தத்துவம் ஆகிய துறைகளில் மட்டுமே தமிழ் இதுவரை பயன்படுத்தப்பட்டுவந் துள்ளது. தமிழ் நாட்டில் வளர்ந்த பிறதுறை பற்றி நூல்கள் தமிழில் எழுதப்படாமல், இடைக் காலத்தில் வடமொழியில் எழுதப் பட்டுள்ளன. கட்டிட இயல், சிற்ப இயல், நாட்டிய இயல் போன்ற கலையும் தொழிலியற் நுட்பமும் பொருந்திய துறைகளில் தமிழர் கள் முன்னேறியிருந்தும், நல்ல சாதனை செய்திருந்தும் அதற்குரிய கருத்துகளைத் தாய்மொழியில் எழுதிவைக்காமல் வடமொழியில் எழுதிவைத்துச் சென்றுவிட்டார்கள். அன்றைய அறிஞர் உலகில் வடமொழியே விஞ்ஞான மொழியாகக் கருதப்பட்டது போலும். அதேபோன்ற மற்றொரு நிலை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து உருவாகியுள்ளது. இன்றைய அறிஞர்கள் வடமொழிக்குப் பதிலாக ஆங்கிலத்தில் தங்கள் ஆய்வுகளையும் கண்டுபிடிப்புகளையும் எழுதிவருகிறார்கள். அவர்களையெல்லாம் முதன் முதலில் தமிழில் எழுதச் செய்யவேண்டும். அதற்கு அந்தந்த துறையில் நடந்த ஆராய்ச்சிகளைப் பற்றித் தமிழில் நூல்கள் எழுதி வெளியிட வேண்டும். விஞ்ஞானத் தமிழை உருவாக்கி பலதுறை நூல்கள் உருவாக்க வேண்டும். தமிழும் விஞ்ஞான மொழியாக ஆகவேண்டும். அதுமட்டுமின்றி எல்லாத் துறைகள் பற்றிய நூல்களும் தமிழில் வெளிவர வேண்டும். அப்படியே இன்று ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி ஆகிய இரண்டில் மட்டுமே போதனா மொழியாக இருப்பது போய் கல்லூரிகளில் அதாவது பொறியியல், மருத்துவம் போன்ற தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் தமிழ் பயிற்றுமொழியாக வரவேண்டும்; ஆட்சி மொழியாக, நீதித்துறை மொழியாகத் தமிழ் பயன்பட வேண்டும்

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதை அதிகபட்சம் எவ்வளவு தூரம் செயல்படுத்த முடியும் என்று பார்க்கவேண்டும். எப்படி யாயினும் 19-ஆம் நூற்றாண்டு வரை தமிழ் பயன்படாத பல துறைகளிலும், பல நிலையிலும் பயன்படுத்தப்படுகிறது; இன்னும் பயன்படப்போகிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த வளர்ந்த தொழிற்பாட்டை யொட்டி திருத்தங்கள் தேவைப் படுகின்றன என்பதை மறக்கவே கூடாது.

மொழியைப் பொறுத்த புறச்சூழலில் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தது அறிவு வளர்ச்சியின் வேகமே. இதுவரை 50 ஆண்டு களுக்கு ஒருமுறை அறிவு வளர்ச்சி. இரட்டிப்பாகிறது என்பது போய் இப்போது பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை அறிவு வளர்ச்சி இரட்டிப்பாகிறது என்று தோராயமாகக் கண்டுள்ளார்கள்.

எனவே, நாளும் வளர்ந்துவரும் அறிவு வளர்ச்சியில் தமிழர் களும் பங்கு கொண்டு உழைக்கும்படியாகத் தமிழ் மொழி அமைய வேண்டும்.

அரசியல் நிலையில் முடியாட்சி ஒழிந்து குடியாட்சி ஏற்பட்டுள் ளது. தமிழன் இதுவரை தன்னுடைய நீண்டகால வரலாற்றில் இரண்டுமுறை பொற்காலத்தை ஏற்படுத்தியுள்ளான். இப்பொழுது இன்னொரு பொற்காலம் உருவாக வாய்ப்புள்ளது. படித்தவர்களின் எண்ணிக்கை வேகமாக உயர்ந்து வருகிறது. சாதி சமய பாகு பாட்டில் உழலாது முதலில் தமிழனாக நினைத்துப் பார்த்து தமிழ்ச் சமூகமும் மொழியும் உயரவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு வருகிறது. ‘புதியதோர் உலகம் செய்வோம்’ என்பது கவிக்கனவு மட்டுமல்ல; செயலாகப் பரிணமிப்பதற்கான அறிகுறிகள் தென்படு கின்றன. எனவே, சமூகக் கலாச்சாரத் துறையிலும் நாம் புதிய சூழலைப் பெற்றுள்ளோம். ஆகவே, இந்த நிலையில் மொழி எல்லாவற்றுக்கும் பயன்படும்படி இருக்கவும், உதவும் வகையில் அமையவும் எழுத்துத்திருத்தம் அவசியம். இன்று அரும்பிவரும் புதிய அறிவுச் சூழல், சமூகக்கலாச்சாரச் சூழல் ஆகியவற்றையும் கருவிவளர்ச்சியை யொட்டியுமே திருத்தம் கோரப்படுகிறது என்பதை அனைவரும் புரிந்து கொண்டு இன்றைய தமிழில் நிலையாக்கம் ஏற்படுத்தி மக்கள் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு உறுதுணையாக மொழி அமையும்படி செய்யவேண்டுவது தமிழ் அறிஞர்களின் தலையாய கடமை.

துணை நூல்கள்

அகத்தியலிங்கம், ச. 1979 ''எழுத்துமொழி வாழ்வும் வரலாறும்'' **மொழியியல் 2. 3**, அண்ணாமலைநகர்.

அருணபாரதி, ந. 1975 ''பேச்சுமொழியில் பழமைக் கூறுகள்'' **புலமை 1-4**, சென்னை.

இராமலிங்கனார், 1972 **ஆட்சித்தமிழ்**, சென்னை.

உலகநாதன், மு. 1978 **தமிழ் எழுத்துச்சீர்திருத்தம்** சென்னை.

ஏசுதாசன், கி. 1976 ''பால் வேற்றுமையில் மொழி வேறுபடும் தன்மை'' **புலமை 2**, 240-66.

கணேசன், இரா. 1972 **அறிவியல் தமிழாக்க முறைகள்**, சென்னை.

குழந்தைசாமி, வா. செ, 1978 **தமிழ் வளர்ச்சி**, பொள்ளாச்சி.

——— 1979 '' விஞ்ஞானத் தமிழ்'' **களஞ்சியம் 1.1**, 43—7,

கோதண்டராமன், பொன். 1974 **செந்தமிழ்**, சென்னை.

சண்முகம் கொடுமுடி. 1973 ''குமரிக்கண்டம்—சில புவியியல் உண்மைகள்'' **ஐந்தாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை**. 790—97. சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைச் சார்புவெளியீடு, சென்னை.

——— 1978 ''மாதவியின் கடிதங்கள்'' **பத்தாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை**. தொகுதி 3.82—87.

——— 1 79 ''தமிழ் வடிவங்கள்'' (சைகிலோஸ்டைல் செய்யப்பட்டது), மதுரை காமராசர் பல்கலைக்கழக எழுத்துச்சீர்திருத்தக் கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரை.

சண்முகம், செ. வை. 1971 '' சங்க இலக்கிய மொழி அமைப்பு'' **ஆராய்ச்சி 2**, 223 - 234.

——— 1972 '' பழந்தமிழ் அய்கார அவ்காரங்கள்'' **நான்காவதுகருத்தரங்கு மலர்**,368—373,திருவனந்தபுரம்,

——— 1974 ''பழந்தமிழ்க் கிளைமொழிகள்'' **லண்டன் தமிழ்ச்சங்க ஆண்டு மலர்**, 58—61, லண்டன்.

——— 1975 '' மலையாள மொழியின் உருப்பேறும் வளர்ச்சியும்'' **புலமை**, 1.4, 19—52.

——— 1976 ''மொழித்தூய்மை'' **லண்டன் தமிழ்ச்சங்க ஆண்டு மலர்**, 1—10, லண்டன்,

——— 1978 **எழுத்துச்சீர்திருத்தம்**, அண்ணாமலைநகர்.

——— 1978 ''பேச்சும் எழுத்தும்'' **மொழியியல்** 2. 3. 57—85.

——— ''எழுத்தாக்கம்: மொழியலும் பிறஇயலும்' **மொழியியலும் பிற இயலும்** (பதிப்பர். முத்துச்சண்முகன்) 1—25, மதுரை'

——— 1979 ''உலகமொழிகளில் எழுத்துச்சீர்திருத்தம்'' **எழுத்துச் சீர்திருத்தமலர்: மொழியியல்** 2. 3. சி, 203—242.

சிவஞானம், ம. பொ. 1970 **தமிழும் கலப்படமும்**, சென்னை

சிவராமகிருஷ்ணன், சி. கே. 1978 ''ரோமன்எழுத்திலுள்ள குறைபாடுகள்'' **செங்கோல்**, மலர் 30, இதழ் 1—2, 11—12.

சீனிவாசவர்மா, கோ. 1977, **கிளை மொழியியல்**, அண்ணாமலை நகர்.

ஞானசுந்தரம் & பெரியாழ்வார் 1935· 'புதுமைத் தமிழ் இலக்கியத்தில் பேச்சுமொழி'' **புலமை** 1—2, 1—22.

தொல்காப்பியம், கழகப் பதிப்பு, சென்னை.

நன்னூல் உ. வே. சா. பதிப்பு, சென்னை.

நாகசாமி, இரா. 1972 **தமிழ் எழுத்துக்கள் கல்வெட்டியல்** 9—19 ; 18 28.

பரந்தாமனார், அ. கி. 1972 **நல்ல தமிழ் எழுத வேண்டுமா?**, ஐந்தாம் பதிப்பு, சென்னை.

மகாதேவன் 1973 ''ஒலிபெயர்ப்பு'' **கலைக்கதிர்** 26—3, 24—31.

மணியன், தங்க. 1978, **பத்திரிகை தமிழ்**, பரணம்,

மறைமலை அடிகள், **அம்பிகாவதி**, சென்னை.

மீனாட்சிசுந்தரம், கா. 1976 ''அறிவியல் தமிழாக்கத்தில் தமிழ் ஒலியும் பிற ஒலியும்'' **ஆய்வுக் கட்டுரைகள்** (சைகிலோஸ்டைல் செய்யப்பட்டது) பூ. சா. கோ. கலைக்கல்லூரி, கோவை.

முத்துப்பிள்ளை, கோ. 1974 **அரியணையில் அழகு தமிழ்**, சென்னை.

முத்துவீரியம், கழகப் பதிப்பு, சென்னை.

Baugh, A.C. 1935 *History of the English* **Appleton Century Co., New York.**

Berry, J. 1958 "**The making of Alphabets**" *Proceedings of the Eight International congress of Linguistics*, **Oslo and** *in Reading in the Sociology of Language*, (**ed. Fishman, J.A.** 1972).

—— 1977 *Alphabets Revisited* in **Fishman**, 1977.

Bright, W. 1958, *An outline of colloquial Kannada*, **Poona.**

—— 1966. (ed.) *Sociolinguistics*, Mouton. **The Hague**,

Burrow, T. 1955 *The Sanskrit Language*, **London.**

—— **& Emeneau, M.B.** 1961 *A Dravidian Etymological Dictionary* (**D.E.D.**), **Oxford.**

Caldwell, R. 1856 *A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages* (Revd. Ed. 1956), **Madras.**

Dimock, E.C. 1960 "Literary and Colloquial Bengali in Modern Bengali prose" in *Linguistic Diversity in South Asia*, (ed. Ferguson & Gumberz) 43—63. Bloomington.

Ferguson, C. A. 1959 "Diglossia" *Word, 15*, 325 - 40 and *Language in Culture and Society* (ed. D. Hymes) 439.

——— 1968 *St. Stejan of perm and applied linguistics* in Fishman et al 233—65.

——— 1977 "Sociolinguistic settings of Language, planning" in *Language Planning Process*, (ed. Rubin et al) 9—30, Mouton. The Hague, Paris.

Fishman, J.A. et al (ed) 1968, *Language Problems of Developing Nations*, John Wiley & sons I.C. New York, London.

——— 1974 (ed.) *Advances in Language Planning*, Mouton, The Hague, Paris.

——— 1977 (ed.) *Advances in Creation and Revision of Writing Systems*, Mouton, The Hague, Paris.

Gallagher, C.F. 1971 "Language reform and social Modernization in Turkey" in Rubin, J. & Jernudd B.H. 1971: 159—78.

Garvin P.L. 1959 " he Standard Language: Problem Concepts and Methods." *Anthropological Linguistic* 1 (2), 28—36.

Gelb, I.J. 1962. *A Study of Writing* Revised edition Chicago.

Geerts, G. Broeeck, J. V: D. & A. Verdoot 1977 "Success and Failures in Dutch spelling reforms" in Fishman, 1977: 179—246

Gunderson, D. 1977 "Success and Failures in the reformation of Norwegion Orthography" in Fishman 1977.

Hall, R.A.J. 1975 "Review of *written Language General Problems and Problems of English*" by Joseph Vachek, *Language* 51. 461—464.

Harimurti Kridalaksana, 1958 "The new spelling for Bahasa Indonesia." *Indonesian Journal of Cultural Studies* 4, 217—36.

Henze, P. B. 1977 "Politics and alphabets inner Asia" in Fishman 1977.

John De Francias 1972 "Language and Script Reform in China" in Fishman 1977.

——— 1977 *Colonism and Language Policy in Vietnam*, The Hague.

Jones, D. 1967 *The Phoneme: its nature and use*, Cambridge.

Kushalappa, Gowda, K. 1972, *A Grammar of Kannada* based on inscriptions of Coorg, South Kannada and North Kannada Dts. (1000 to 1400 A.D.) Annamalai nagar.

Mahadevan, I. 1968 "Tamil — Brahmi inscriptions of the Sangam Age" *Proceeding of the Second International Conference Seminar of Tamil Studies* 43—106, Madras.

Mahadeva Sastri, K. 1969, *Historical Grammar of Telugu*, Anantapur.

Meenakshisundaran, T. P. 1965, *A History of Tami Language*, Deccan College, Poona.

— — 1966, "The Scripts of South India (Tamil, Malayalam etc.)" in *Indian Systems of Writings*, Govt. of India, New Delhi.

Murchu, M. D. 1977 "Success and Failures in the Modernization of Irish spelling" in Fishman, 1977 267—292.

Pandit, P.B. n.d. *Aspects of Sociolinguistics* (mimeo) New Delhi.

Prabodhachandran. V. R. 1979 "Directions of Development of Malayalam" *IX All India conference of Dravidian Linguistics Souvenir* 55—9, University of Calicut.

Pyles, T. 1964 *The Origins and Development of the English Language*, New York.

Roy Burman, 1969, "Language and Tribal communities of India", *Language and Society in India* (ed. Poddar) 251—9, Indian Institute of Advanced Study, Simla.

Rubin, J. 1977 "Language Standardization in Indonesia" in *Language Planning Processes* (eds. Rubin J. et al) 57—80, Mouton Publishers.

Rubin, J. & Jernudd, B. H. 1971 *Can Language be planned?* Honolulu.

Sankalia, H.D. 1971 "The Beginning of Civilization in South India" (Preprint) *Second Internationa Conference Seminar of Tamil Studies*, Madras.

Sethu Pillai, R.P. 1939 "Tamil Literary and Colloquial" *Annals of Oriental Research* Vol. 3 1, 25—33, 3:2 35—60.

Shanmugam, S. V. 1969 "A Modern Evaluation of *Vi:raco:liyam*" *JAO*. 26, 65—78.

——— 1971 " Dialects in the Inscriptional Tamil" *ORBIS* xx—1, 90—98.

——— 1979 *Indonesian Studies*, NewDelhi

Shanmugam Pillai, M. 1960 "Tamil Literary and Colloquial" *Linguistic Diversity in SouthAsia*.

——— 1965 "Merger of Literary and Colloquial Tamil' *Anthropological Linguistics* 7.4, 98—103.

——— 1965 "Caste Isoglosses in Kinship terms" *Anthropo logical Linguistics* 7.3, 59—66.

——— 1966, "Tamil Dialect Notes — Fisherman of Kanyakumari" *Procedings of the First International Conference Seminar of Tamil studies*, 2, 718—28, Kualalumpur.

Sibayan, B. 1974 "Language Policy, Language Engineering and Literacy in the Philippines" in Fish man 1974, 221—254.

Subrahmanyan, P.S. 1982, 'Plosives in Medial position, in Dravidian, *A:yvukko:vai* Vol. XIV Pt II P. 165—9.

Sugatapala De Silva 1975, *Linguistic Diversity*, Annamalainagar.

Varadarajan, M. 1962 "The spoken and Literary Language in Modern Tamil" *Indian Literature*, New Delhi

Zvelebil, K. V. 1964 "Spoken Languages of Tamil nadu" *Archiv Orientalni*, 3.:2, 237—64.